
கல்கி
KALKI
மே ௨7,1956
4 அணா

ராஜ சுலோசனா

லக்ஸ் டாய்லெட் சோப்

தேர்ந்தெடுக்கிறாள்

ஏனென்றால் அது தூய்மையானது, வெண்மையானது



இந்தியாவில் தயாரித்தது

LTS. 470-50 TM


கல்கி

பொருளடக்கம்

மலர் 15
இதழ் 43

துன்முகி ௵
வைகாசி 14


மே 27, 1956



சிறந்த

போட்டோ எடுப்பதற்கு உறுதிமொழி கூறுவது

ஒவ்வொரு போட்டோகிராப்பருக்கும் எல்லா வித பிலிம்களையும் உபயோகித்து ஆராய்ந்த பிறகு, எப்பொழுதுமே சிறந்த தரமுள்ள ஆக்பா பிலிம் மீது அசைக்க முடியாத உறுதி ஏற்படுகிறது. உலகம் முழுதும் பிரசித்தி பெற்ற இந்த ஆக்பா ஐஸோபான் ஐஎஸ்எஸ் பிலிம், வெளிச்சக் குறைவாக இருந்த போதிலும் கூட, படம் நன்றாக விழ, உறுதி மொழி அளிக்கிறது. அதன் வேகம் அதிகமாயிருப்பினும், எக்ஸ்போஷர் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் கூட படம் நன்றாக விழ உதவுகின்றது. வயல் வெளிக் காட்சிகள், விளையாட்டு பந்தய காட்சிகள், போர்ட்ரெயிட்டுகள், இரவு காட்சிகள் முதலியன நன்றாக எடுக்க இதுவே உகந்த பிலிம்.



ஆக்பா
ஐஸோபான் ஐஎஸ்எஸ் பிலிம்

இந்தியாவிற்கு ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:

ஆக்பா இந்தியா பிரைவேட் லிட்.

பம்பாய் • புது டெல்லி • கல்கத்தா • மதராஸ்

AGFA-33-4 TA



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

புத்தரைப் போற்றுவோம்

பாரத நாடு பழம் பெரும் நாடு. இந்தப் பரந்த உலகில் முதன் முதலில் மனித குலத்தின் நாகரிகம் தோன்றியது இந்த நாட்டிலேதான்.

மாநிலத்தில் கடவுள் ஞானம் என்பது முதன் முதலில் இந்தப் புண்ணிய பூமியிலேதான் உதயமாயிற்று.

மற்ற நாடுகளில் மக்கள் வன விலங்குகளைப் போல் அநாகரிகமாக வசித்து வந்த காலத்தில் இந்த நாட்டில்தான் மக்கள் அறிவிலும், கலை ஞானத்திலும், கடவுள் ஞானத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

அறிவாளிகளும், தர்மாத்மாக்களும், வீராதி வீரர்களும், ஞானிகளும் இந்தப் புண்ணிய பாரத பூமியிலேதான் தோன்றினார்கள்.

பாரத நாட்டின் இந்த உத்தம ஞானிகள் பரம்பரையிலே இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு ஞானி தோன்றினார். பாரத நாட்டில், ஏன்? உலகிலேயே கருத்து வேற்றுமை இன்றி அந்த மகானைப் போற்றி வருகிறார்கள். அவருடைய புண்ணிய தினத்தை உற்சாகமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

நிகழும் மே மாதம் இருபத்தி நாலாம் தேதி உலக மக்கள் எல்லாரும் புத்தர் பிரானின் புனிதத் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்திருப்பார்கள்.

பாரத நாட்டின் பழம் பெருமையின் ஜீவசக்தி இன்றும் பூரணமாக இருந்து வருகிறது என்பதை நிரூபித்துக் காட்டி வருவது புத்தர் பிரானின் அன்பு வழிதான்.

ஆதலின் புத்தர் பிறந்த தினமும், ஞானம் பெற்ற தினமும், மகா பரிநிர்வாண மெய்திய தினமுமாகிய வைசாக பௌர்ணமி தினத்தைப் புத்தரின் திருநாளாகக் கொண்டாடும் போது பாரதத் தாயின் அமரத் தன்மையையே கொண்டாடுகிறோம்.

எல்லாரும் ஓர் குலம் என்ற புனித உணர்ச்சியைக் கொண்டாடுகிறோம்; புத்தருக்கு முன் இருந்த ஞானிகளின் பரம்பரையையே போற்றுகிறோம். கொல்லாமையைக் கொண்டாடுகிறோம்; புலால் உண்ணாமையைப் புனிதமாக மதிக்கிறோம்.

சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் தலை வணங்குகிறோம்.

** ** ** **

புத்தர், கபிலவஸ்து ராஜ்யத்தின் மன்னர் மகனாகப் பிறந்தார். செல்வச் செழிப்பிலே செல்வமாக வளர்ந்தார். யசோதரா தேவி என்ற உத்தமியை மணந்தார். ராகுலன் என்ற மகனுக்குத் தந்தையானார். அரண்மனையை விட்டு வெளியே செல்ல நேர்ந்தபோது வயது முதிர்ந்த வயோதிகனையும், தீராத நோயாளியையும், உயிரற்ற மனித உடலின் இறுதி யாத்திரையையும் பார்த்து மனம் நொந்தார். மனிதனின் துயரங்களுக்கு நிவர்த்தி காணக் காட்டிலே கடும் தவம் செய்தார். சுமார் இரண்டாயிரத்து இருநூறு நாட்கள் தவம் செய்து, பட்டினி கிடந்து மரணமடையும் நிலைக்கே வந்து விட்டார். மனித வாழ்க்கையின் துயர் தீர வழி ஒன்றும் புலனாகவில்லை. தவம் செய்வதை நிறுத்தினார். மீண்டும் உணவருந்தி உடல் வலிவும், மன வலிவும் பெற்றார். பிறகு ஞான விசாரணையில் ஈடுபட்டார்.

ஒரு வைசாக பௌர்ணமி யன்று அரச மரத்தடியில் ஞான ஒளி கிடைத்தது. தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினார். நாற்பத்தைந்து ஆண்டுகள் மக்களுக்கு ஞான மார்க்கத்தைப் போதித்தார். அன்பு மதத்தைப் பரப்பினார். ஜீவ தயையின் சிறப்பையும், ஆசையை அழிப்பதின் உயர்வையும் மக்களுக்கு விளக்கினார். எளிய வாழ்க்கை வாழவேண்டியதன் அவசியத்தையும், எல்லாரும் சமம் என்ற

கொள்கையையும் முழக்கினர். அரசன் முதல் ஆண்டி வரை எல்லா மக்களும் அவர் போதனைகளைப் பக்தியுடன் கேட்டுப் பயன் பெற்றனர். மக்கள் சமூகம் உயர்ந்தது.

எண்பதாவது வயதில் புத்தர் குசி நகரம் சென்றார். ஒரு வைசாக பௌர்ணமியன்று மகா பரி நிர்வாணம் பெற்றார்.

புத்தர் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு தீர்க்க திருஷ்டியுடன் வருங்காலத்தை நோக்கினர்.

மக்களைப் பிடித்திருந்த குருட்டு நம்பிக்கையும், அவர்களிடம் குடிகொண்டிருந்த இழி குணங்களும் விரைவிலே அகன்று போய்விடும் என்பதை மகான் புத்தர் கண்டார்.

"விதி விதி என்று வாழ்வை வீணாக்கிக் கொள்ளாதீர்கள். உங்கள் எதிர்காலத்தை உங்கள் முயற்சியால் நிர்ணயித்துக் கொள்ளலாம். காலத்தை வென்று சம்சாரசாகரத்தைத் தாண்ட ஒழுக்கம் நிறைந்த சில வாழ்க்கையைக் கடைப்பிடியுங்கள்" என்று கூறி மக்கள் மனத்தில் இருந்த அச்சம், மடமை, பலவீனம் முதலிய மாசுகளைக் களைந்தார்.

அறிவுத் துணை கொண்டு ஆராய்ச்சி செய்ய மக்களுக்கு ஆணையிட்டார். கருணையைக் கைக்கொண்டு வாழும்படி வழி வகுத்துக் கொடுத்தார். பிற மனிதரின் கஷ்டங்களைக் கண்டு அவனிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்று நெஞ்சுருக இறைஞ்சினர்.

புத்த பகவான் போதனையை மக்கள் முன் எப்போதையும் விட இப்போது நன்கு உணர ஆரம்பித்து விட்டார்கள்

தற்பொழுது உலகில் உள்ள எல்லா நாடுகளும், அந்தந்த நாட்டு மக்களும் அன்பின் அற்புதத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அணுகுண்டு சோதனைகளும், ஹைட்ரஜன் குண்டு சோதனைகளும் மக்கள் குலத்தின் ஒருமைப்பாட்டைத் தகர்த்தெறியக் கூடியவை என்பதை உணர்ந்து வருகிறார்கள்.

இன்று உலகை ஒன்றுபடுத்தி விழிப்புறச் செய்வதற்கு ஆத்ம உணர்ச்சி தேவை. ஆத்மீகத் துறையில் சேவை செய்வதற்கு நமது புண்ணிய பாரதம்தான் ஏற்ற நாடு.

பாரத நாட்டில் தோன்றிய புத்த பகவானே! அஹிம்சாமூர்த்தியே! அன்பின் உருவமே! சத்திய தேவதையின் அவதாரமே! தங்கள் உபதேசங்களை இப்பொழுது அதிகமாகக் கடைப்பிடிக்க முயன்று வருகிறோம்! உலகில் சமாதானத்தை நிலைநாட்டப் பாடுபட்டு வருகிறோம். இந்த உறுதி எங்களுக்கு என்றென்றும் நீடித்து நிற்க ஆசி அளியுங்கள்.

புத்த பகவானே! தங்களை வணங்குகிறோம்! தங்கள் புனித நினைவைப் போற்றுகிறோம்.

உலகில் அன்பும் அஹிம்சையும் வளர்ந்து பரவுமாறும், மனிதர்கள் நோக மனிதர்கள் பார்க்காமல் இருக்கும் பண்பை மனிதர்கள் பெற்று வாழுமாறும் ஆசி கூறுங்கள்!

விஷப் பரீட்சை வேண்டாம்

இன்று உலக சமாதானத்துக்கும் அதற்கு இன்றியமையாத ஆயுதக் குறைப்புக்கும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் ருஷ்யர்கள் அல்ல, அமெரிக்கர்களும் அல்ல; ஆனால் அந்தப் பொல்லாத பேர்வழியான திருவாளர் சந்தேகம்தான்!

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்ததும் பிரிட்டன், அமெரிக்கா முதலிய வல்லரசுகள் தங்கள் தங்களுடைய இராணுவ பலத்தைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கின. ஆனால் மேற்கத்தி வல்லரசுகள் மீது சந்தேகம் கொண்ட ருஷ்யா தன் இராணுவ பலத்தைக் குறைத்துக் கொள்ள முன் வரவில்லை.

இப்போது, ருஷ்யா தன் இராணுவத்திலிருந்து பன்னிரண்டு லட்சம் துருப்புகளையும் கிழக்கு ஜெர்மனியில் தன் வசமிருக்கும் விமானப் படையையும் குறைக்கப் போவதாகப் பிரகடனம் செய்திருக்கிறது.

"பிறர் செய்வதை எதிர்பார்க்காமல் நாம் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு போக வேண்டும்" என்கிற நியாயத்தை அனுசரித்து ருஷ்ய அரசாங்கத்தார் தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

ஆனால், அமெரிக்கா முதலிய வல்லரசுகளைச் சந்தேகப் பேய் பிடித்துக் கொண்டிருப்பதால், தங்கள் படை பலத்தைக் குறைத்துக் கொள்ள அவை தயாராக இல்லை. அதற்கு மாறாக, ஐரோப்பிய நாடுகளின் படை பலத்தைப் பெருக்குவதில் அவை மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன.

இவ்விதம், சென்ற சில மாதங்களாக உலக சமாதானத்துக்குப் பூர்வாங்கமான காரியங்களை ருஷ்யா செய்து வருகையில், மேற்கத்தி வல்லரசுகள் ருஷ்யாமீது சந்தேகம் கொண்டு நல்ல சூழ்நிலையைக் குட்டிச் சுவராக்கி வருகின்றன. விபரீத வியாக்கியான விசேஷ நிபுணரான அமெரிக்க மந்திரி டல்லஸ் வழக்கம் போல், மேற்படி ருஷ்யப் பிரகடனத்தில் அடங்கியுள்ள எழுத்துக்களை அக்கு அக்காக எடுத்து, அவற்றில் என்ன மர்மம் மறைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து வருகிறார்!

பிகினி பவழத் தீவில் சென்ற வாரம் அமெரிக்கா ஹைட்ரஜன் குண்டைப் போட்டுச் சோதனை நடத்தியுள்ளது. அதிலிருந்து கிளம்பிய புகை மண்டலம் எண்பதாயிரம் அடி உயரம் கிளம்பியதாக அமெரிக்கர்கள் பெருமையடைகிறார்கள். சில தினங்களுக்கு முன் பிரிட்டன் ஆஸ்திரேலியாவுக்கு அருகில் மூன்றாவது தடவையாக அணுகுண்டைச் சோதனை செய்து பார்த்தது. கூடிய சீக்கிரத்தில் நாலாவது தடவையாகவும் அணுகுண்டு சோதனையை நடத்தப் போகிறதாம்!

மேற்படி விஷப் பரீட்சைகளை நிறுத்திவிட வேண்டும் என்று உலகப் பிரமுகர்கள் எவ்வளவோ கூறியும் வல்லரசுகளின் செவிகளில் ஏறவில்லை. எனினும், இப்போது அவ்விஷயத்தில் சர்வதேசக் கமிஷன் அக்கறை கொண்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். விவரிக்க முடியாத தீங்கு இழைக்கக்கூடிய அணுகுண்டு சோதனைகளின் மூலம் கடலையும் வாயு மண்டலத்தையும் விஷப்படுத்தாமலிருக்க எல்லா

உலகத்தின் அஞ்சலி!



ராஜ்யத்தை ஆளும் ஆசையைத் துறந்து மக்களுக்குப் பணியாற்றத் துறவு நிலை பூண்டார் புத்தர். ஆனால் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் புத்தரின் அன்பு வழிதான் உலகை ஆண்டு வருகிறது.

நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று அக்கமிஷன் கேட்டுக் கொண்டிருக்கிறது. அவ்விஷயமாக உலகத்தில் உள்ள நூறு நாடுகள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றன; ஒத்துழைத்தும் வருகின்றன. ஆனால், அணுகுண்டு சிருஷ்டி கர்த்தாக்களான அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் இம்மூன்று நாடுகளும் அல்லவா ஒத்துழைக்க முன் வரவேண்டும்! நாளுக்கு நாள் நிலைமை முற்றி வருவதால், விஷப் பரீட்சையை ஒழிக்க அந்நாடுகளை வற்புறுத்த வேண்டியது ஐக்கிய நாடுகள் சபையின் முழுமுதற் கடமையாகும்.

பற்றாக்குறைத் திட்டம்

பாரத தேசத்தின் எதிர்காலம் மகத்தான வளர்ச்சி பெற்று மகோன்னதமாய் விளங்கப் போகிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. வழி வகைகள் வகுக்கப்படுகின்றன.

நமது பாரத சர்க்கார் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்களை வகுத்து அபாரமான சாதனைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். பிரம்மாண்டமான அணைக் கட்டுகளையும் தொழிற்சாலைகளையும் நிறுவியிருக்கிறார்கள்.

இப்போது மாபெரும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான ஆலோசனைகளைத் திட்டக் கமிஷன் வெளியிட்டிருக்கிறது.

திட்டத்தின் முக்கிய அம்சம் இந்தத் தேசத்தின் தொழில் வளத்தை விரிவான அளவில் பெருக்கி உற்பத்தியை அமோகமாக அதிகரிக்க வேண்டுமென்பதாகும். திட்டம் மிக மிக நல்ல திட்டம்தான். திட்டம் முழுதும் காரியத்தில் பூர்த்தியானால் பாரதத்தில் பாலாறும் (வட ஆற்காட்டில் ஓடும் பாலாற்றைக் குறிப்பிடவில்லை!) தேனாறும் ஓடும். மக்களின் வாழ்க்கை வறுமை அகன்று சிறுமை ஒழிந்து சீரும் சிறப்பும் பெறும். உடைப் பஞ்சமும் உணவுப் பஞ்சமும் அடியோடு அகலும். வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பேய் அப்புறம் வேலையில்லாமல் திண்டாடும். கல்வி

அறிவு பெருகும். கலைகள் ஓங்கும். கலாசாரம் உயரும். இத்தகைய அற்புதங்கள் நிகழ்வதற்கான வழிகளும் ஆலோசனைகளும் இரண்டாவது திட்டத்தில் அடங்கி யிருக்கின்றன. ஆயினும் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்குப் போதிய நிதி முக்கியமல்லவா! கோடி கோடியான ரூபாய்களுக்கு நாம் எங்கே போவது! யாரைக் கடன் கேட்பது! அவற்றை எப்படித் திருப்பிக் கொடுப்பது! இவற்றை யெல்லாம் திட்டக் கமிஷன் ஆலோசித்தே திட்டத்தை வெளியிட்டதா! அல்லது நிதி பற்றிய கவலையைச் சர்க்காருக்கு விட்டு விட்டுத் திட்டத்தை மட்டும் போட்டுக் கொடுத்ததா என்று தெரியவில்லை.

இந்த மகத்தான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மொத்தம் தேவையான பணம் எவ்வளவு தெரியுமா! நாலாயிரத்து எண்ணூறு கோடி ரூபாய்!

இத்தனை கோடி பணத்துக்கு எங்கே போவது என்றுதானே யோசிக்கிறீர்கள்! இதோ பாருங்கள்:

	கோடி
வரிகள் மூலம் மிஞ்சி யிருப்பது	350
புதிய வரிகள் மூலம்	450
கடன்கள் மூலம்	700
சிறு சேமிப்புகள் மூலம்	500
ரயில்வேக்களின் மூலம்	150
பிராவிடண்ட் பண்டு டெபாஸிட்டுகள் மூலம்	250
வெளிதேச உதவி	800
செலாவணி சிருஷ்டி மூலம்	1200
துண்டு விழும் தொகை	400
ஆக மொத்தம்	4,800

திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதற்கு இன்னும் நானூறு கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இந்தப் பற்றுக் குறைப் பணத்தை மேலும் வரிகளைப் பெருக்கி வசூலித்து விடலாம் என்பது யோசனை. ஏற்கனவே திட்டமிட்டுள்ள ரூபாய் நானூற்று ஐம்பது கோடி வரியோடு இந்த நானூறு கோடியையும் சேர்த்தால் எண்ணூற்றைம்பது கோடி ரூபாய் ஆகிறது. அதாவது வரும் ஐந்து வருஷங்களில் வருஷம் ஒன்றுக்குச் சராசரி 170 கோடி ரூபாய் பொது மக்களிடமிருந்து வரியாக வசூலித்து ஆக வேண்டும். பொது மக்கள் இந்த வரிச்சுமையைத் தாங்குவார்களா என்பதைத் திட்டக் கமிஷன் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. அத்துடன் அன்னியர் உதவி மூலம் எதிர்பார்க்கப்படும் தொகையில் பாதி அளவுக்காவது வருமா என்பதும் சந்தேகமே.

நமது வர்த்தக மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அடுத்த ஐந்தாண்டுக்குள் 1200 கோடி ரூபாய் துண்டு விழும் என்றும் திட்டத்தின் லட்சியம் பூர்த்தியாக வேண்டுமானால் நமது நாட்டின் உற்பத்திகளைப் பெருக்கி ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டுமென்றும் யோசனை கூறியிருக்கிறார். இது மிகச் சிறந்த யோசனை என்பதில் ஆட்சேபணை யில்லை. ஆனால் உற்பத்திகளைப் பெருக்குவது சர்க்காராலும், தனியார் தொழிற்சாலைகளாலுமே ஆகவேண்டிய காரியம். தனியார் தொழில் பெருகுவதற்கு மேலும் பண வசதி வேண்டும். ஐந்தாண்டுத் திட்டச் செலவுத் தொகைக்காக வரி முதலிய இனங்கள் மூலமும் கடன்கள் மூலமும் சர்க்கார் சமுதாயத்திலுள்ள பணத்தை உறிஞ்சிவிட்டால் பிறகு தனிப்பட்டவர்களின் உற்பத்திச் சக்தி குறைந்துவிடும் என்பதை நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவேதான் இந்த ஐந்தாண்டுத் திட்டம் ஒரு சிரம சாத்தியமான திட்டம் என்பதை அறிந்துள்ள நேருஜி, அவசியமானபோது அதை மாற்றிக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் புனராலோசனை செய்து அந்தந்தச் சந்தர்ப்பங்களுக் கேற்ற முறையில் திட்டத்தின் முக்கிய அம்சங்களை மாற்றிக் கொள்ளலாம் என்பதுதான் ஜவாஹர்லால் நேருஜியின் யோசனை.

திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறுவது நாட்டின் பொருளாதாரம் சீர்கேடு அடையாமல் இருப்பதையே பொறுத்திருக்கிறது.

நேருஜியின் பாரத சர்க்கார் அத்தகைய பயங்கரச் சூழ்நிலைக்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்ளும் என்னும் திடமான நம்பிக்கை நமக்குப் பரிபூரணமாக உண்டு.

கக்காயி காலமானார்

நாகஸ்வர சங்கீத உலகில் பிரசித்தி பெற்ற கக்காயி திரு டி. என். ஆர். நடராஜசுந்தரம் சென்ற 20ம் தேதி காலமான செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். இதற்கு முன்னால் எத்தனையோ வித்வான்கள் நாகஸ்வர வாத்தியத்தைக் கையாண்டு புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் மருமகன் திரு நடராஜ சுந்தரம்பிள்ளை நாகஸ்வர இசையை ரசிகர்களின் இதய சிம்மாசனத்தில் ஏற்றி வைத்திருந்தார். நாகஸ்வர வாத்தியம் அவரால் மிகவும் உயர்ந்த நிலைக்கு வரப்போகிறது என்பதைச் சங்கீத ரசிகர்கள் எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். திரு டி. என். ஆர். நடராஜ சுந்தரம் பிள்ளை பழைமையான ராகங்களையும், புதிய ராகங்களையும் தம்முடைய கற்பனைத் திறத்தால் தனி மெருகுடன் வாசித்து ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்து வந்தார். இவ்வாறு இசைவானில், சுடர்விட்டு மின்னிய நாகஸ்வர நட்சத்திரம் திடீரென்று மறைந்து விட்டது சங்கீத உலகத்துக்குப் பெரிய நஷ்டமாகும்.

அவரது பிரிவால் வருந்தும் அவருடைய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எண்ணற்ற ரசிகர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்ன சேதி?

வரம்பு என்னத்துக்கு?

உயர் நிலையிலிருப்பவர்களை மட்டந் தட்டி விட்டால் அதுதான் சோஷலிஸம் என்று எண்ணுபவர்களுக்கு நமது பிரதமர் சூடு கொடுத்திருப்பதை அரைகுறை அரசியல் வாதிகள் கவனிக்க வேண்டும். வருமானத்துக்கு வரம்பு கட்டி அதற்குமேல் யாரும் சம்பாதிக்கலாகாது என்று சட்ட மூலம் திட்டம் செய்ய வேண்டும் எனச் சிலர் வாதாடுகிறார்கள். இப்படிச் செய்வது எல்லாரையும் ஏழைகளாக்குவது போன்ற அசட்டுத்தனமான காரியமாகும் என்று நமது பிரதமர் ஜவாஹர்லால் நேரு கூறியிருப்பது உண்மை.

நிலவுடமைக்கு வரம்பு, வருவாய்க்கு எல்லைக்கோடு, உணவுக்கு ரேஷன், உடைக்குக் கட்டுப்பாடு என்கிற நிலைமை வந்தால் சமூகமே முன்னேற முடியாமல் ஸ்தம்பித்துப் போகும் என்பதை நாம் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். தன் உழைப்பால், அறிவாற்றலால் பெறும் ஊதியத்தை அநுபவிக்க முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டால் தனிப்பட்டவர்களின் ஊக்கமும் உற்சாகமும் குறைந்துவிடும் என்பதை நவீன சோஷலிஸ்டுகள் உணர வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும். உபரி வருமானத்தில் ஒரு பகுதியை வரியாகப் பெற்று க்ஷேமநலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இந்த நிலைதான் நாட்டின் பலதரப்பட்டவர்களும் சமமான முன்னேற்றமடைவதற்கு உதவி புரியும் என்பதை மறந்து விடலாகாது.

முறையல்ல

அரசாங்கத்தில் என். ஜி. ஓக்கள் பல விதமான கஷ்டங்களுக் குள்ளாகிறார்கள். இதே பதவிகளிலுள்ள மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குள்ள சம்பளம் தங்களுக்கு வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இது நியாயமான கோரிக்கைதான். இவர்களுடைய குறைகளை நீக்கச் சென்னை ராஜ்யத்தார் பலவிதமான சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அமைதியாக, கண்யமாகக் கிளர்ச்சி செய்தால் நாளா வட்டத்தில் இவர்கள் நிலைமை வெகுவாகச் சீர்திருந்தி விடும்.


இவர்களுடைய மகாநாடு சென்ற வாரம் சென்னையில் நடந்தது. மகாநாட்டைத் துவக்கி வைக்கக் கல்வி இலாகா காரியதரிசி அவர்களை அழைத்திருந்தார்கள். அவர் பேசுகையில், "உங்கள் கஷ்டம் நீங்க வேண்டுமானால் உங்கள் சந்தான விருத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று கூறினார். இந்தப் போதனை அங்கே கூடியிருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரை மேலே பேச வொட்டாமல் ஆர்ப்பாட்டம் செய்து தடுத்து விட்டனர். என். ஜி. ஓக்களின் மன நிலையை அறிந்திருக்க வேண்டிய கல்வி இலாகா காரியதரிசி இந்த அழைப்பை ஒப்புக் கொண்டதே பிழையென்று சொல்ல வேண்டியதுதான்.

சேமிப்பு இலாகா அதிகாரி ஒருவர் "நீங்கள் உங்கள் வருவாயில் ஓரளவு சேமிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். சம்பளமே போதவில்லை என்று கிளர்ச்சி செய்கையில் அவர்கள் சேமிக்க வேண்டும் என்றால் ஆத்திரம் ஏற்படுவது இயல்புதான். ஆகையால் அவர் பேசுவது யாருக்கும் கேட்காமல் இருப்பதற்காக ஒலிபெருக்கியையே அப்புறப்படுத்தி விட்டனர்.

ஆனால் கிளர்ச்சி செய்யும் என். ஜி. ஓக்கள் ஒன்று மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒற்றுமையாக, கண்யமாக, அமைதியாக நடந்தால்தான் கிளர்ச்சியில் வெற்றி காண முடியும். அழைத்தவர்களை அவமதிப்பது, மரியாதைக் குறைவாக நடந்து கொள்வது பயனளிக்காது என்பது மட்டுமல்ல, நமது பண்பாட்டுக்கு மாறானது; லட்சியத்தைப் பாழ்படுத்தக் கூடியது. ஆர அமர யோசித்துப் பார்த்தார்களானால் தாங்கள் நடந்து கொண்டது முறையல்ல என்பதை என். ஜி. ஓக்களே உணருவார்கள்.



சமீபத்தில் ஆக்பா போட்டோக் கம்பெனியார் ஒரு போட்டி நடத்தினார்கள். அதில் திரு கே. என். ராஸ்டோம்ஜி ஜெர்மனிக்கு இலவசப் பிரயாணம் பரிசு பெற்றார். ஆக்பா கம்பெனியின் டைரக்டர் திரு ஏ. வி. அய்யர் ராஸ்டோம்ஜியைக் குதூகலமாக வழியனுப்பி வைத்த காட்சியை மேலே காணலாம்.



ஏழைகளின் வாகனமாகிய சைக்கிளை உற்பத்தி செய்யும் சென்னை டி. ஐ. சைக்கிள் கம்பெனியார், தங்கள் தொழிலாளர் நலனுக்காக நாலு லட்சம் ரூபாய் செலவில் ஒரு சிற்றுண்டிச் சாலையைக் கட்டி யிருக்கிறார்கள். இந்தச் சிற்றுண்டிச் சாலையின் திறப்புவிழா சென்ற 14ம் தேதி சிறப்பாக நடைபெற்றது.

அம்பத்தூர் ஹெர்குலீஸ் சைக்கிள் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் உள்ள மாந்தோப்புக்கு மத்தியில் நவீன வசதிகளுடன் உணவு விடுதியை அமைத்திருக்கிறார்கள். இந்தச் சிற்றுண்டிச் சாலையில் எண்ணூறு பேர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. எண்ணூறு பேர்களும் தங்களுடன் கொண்டு வரும் சாமான்களைத் தனியாக வைப்பதற்குத் தனித் தனியாக வலை அலமாரிகளும் இருக்கின்றன. தொழிலாளர்களுக்குக் காலையில் தேநீர் இலவசமாக வழங்குகிறார்கள். இதர சிற்றுண்டிகள் எந்தவிதமான லாப நோக்கமும் இன்றி அடக்க விலைக்கே தொழிலாளர்களுக்குத் தரப்படும் என்றும் தெரிகிறது. தொழிலாளர்களாக இருந்தால் டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனத்தில் அல்லவா இருக்க வேண்டும் என்று நினைக்கும்படி தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு தூரம் பாராட்டக்கூடிய சிற்றுண்டிச் சாலையைச் சம்பிரதாய முறைப்படி சென்னை முதன் மந்திரி திரு காமராஜர் திறந்து வைப்பதையும், அன்றைய விழாவில் கலந்து கொண்ட கைத்தொழில் மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்களையும், டி. ஐ. சைக்கிள் டைரெக்டர்கள் போர்டு தலைவர் ஸர் ராமசாமி முதலியார் அவர்களையும், டைரெக்டர் திரு ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் அவர்களையும் படத்தில் காணலாம்.

சிங்கப்பூர் சுதந்திரம்

சிங்கப்பூர் சுதந்திரப் பிரச்னை பற்றிச் சிங்கைப் பிரதமர் ஸ்ரீ மார்ஷலுக்கும் பிரிட்டிஷ் காலனி மந்திரிக்கும் நடந்தபேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டன என்ற செய்தி ஆசியாவின் அமைதியிலும் எதிர் கால க்ஷேமத்தில் அக்கறையும் கொண்ட உலக மக்கள் யாவருக்கும் ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. அதே சமயம், கார்மேகங்களிடையே மின்னொளி தோன்றுவது போல் அவ் விஷயமாக நம்பிக்கை ஊட்டக் கூடிய செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்குள் மறுபடியும் பேச்சு நடக்கலாம் என்று தெரிகிறது. ஸ்ரீ மார்ஷலைத் தில்லிக்கு விஜயம் செய்யுமாறு நேருஜி அழைத்திருப்பதாகவும் அவர்களுடைய சம்பாஷணையின் பலனாக ஏதாவது நன்மை ஏற்படுமென்றும் செய்திகள் கூறுகின்றன.

சென்ற மகாயுத்தத்துக்கு முன் மலேயாவையும் மலேயாவை ஒட்டியுள்ள தீவான சிங்கப்பூரையும் தனியாகப் பிரித்ததன் மூலம் பிரிட்டிஷார் அந்த நாட்டில் அமைதியின்மைக்கு விதை விதைத்து விட்டார்கள் எனலாம். அவ்விதம் பிரித்திராவிடில், மலேயாவைச் சுதந்திர நாடாக்கப் பிரிட்டன் இசைந்தபோது சிங்கப்பூருக்கும் அதே வாய்ப்பு கிடைத்திருக்கும். சிங்கப்பூரை மலேயாவுடன் இணைக்க வேண்டும் என்று மலேயாவில் பெரும்பாலோராக உள்ள சீனர்களும் இந்தியர்களும் கருத்து வேற்றுமை யின்றி வற்புறுத்தி வருகிறார்கள். இந்தியர்களின் பிரதிநிதி ஸ்தாபனமான மலேயா இந்தியர் காங்கிரசும் அவ்வித இணைப்பையே விரும்புகிறது. எனவே, மலேயாவுடன் சிங்கப்பூரை இணைத்து மலேயாவுக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திர உரிமைகள் சிங்கப்பூருக்கும் அளிக்கப் பட்டால்தான் சிங்கப்பூர் பிரச்னை நிரந்தரமாகத் தீருவதற்கு வழி பிறக்கும். நேருஜியும் மார்ஷலும் கலந்து பேசுவதன் பலனாக, மறுபடியும் லண்டன் பேச்சுகள் ஆரம்பமாகி ஒரு திருப்திகரமான முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம்.

கடல் கண்ட கனவு

ஏழாம் அத்தியாயம்

உறுதிமொழி



பாறைகளுக்கு மத்தியிலே நின்ற சித்திராங்கன், தன்னை நோக்கிக் குதிரையின் மேல் ஒரு வீரன் வருவதைக் கண்டதும் முதலில் சந்தேகித்தான். தன்னை நோக்கித்தான் வருகிறானா, அல்லது, வேறு எங்காவது செல்கிறானா என்று ஐயப்பட்டான். இப்படி அவன் தயங்கிக் கொண்டு நிற்பதற்குள் பாறைகளையெல்லாம் ஒரு பாய்ச்சல் பாய்ந்து கொண்டு 'பளீர்' என்று அவனுக்கு முன்னால் வந்து நின்றது ஒரு கரும் புரவி. கன்னங் கரேல் என்று ராஜ கம்பீரமாக நின்றது அது. அதன் மேல் இருந்த வீரனோ வெள்ளை அங்கியும் இடுப்பிலே சிவப்புப் பட்டையும், தலையில் சிவப்பு வர்ணத்திலேயே இறுக்கிச் சுற்றிய பாகையும், அதிலிருந்து தொங்கிக் கொண்டு பறந்த வாலுமாகப் பார்ப்பதற்கு அழகும் அதே சமயம் கம்பீரமும் நிரம்பிக் காட்சி தந்தான். அந்தக் கம்பீரத்தை அதிகப் படுத்திற்று அவனுடைய மீசை. இடுப்பிலே செருகியிருந்த வாளின் கொண்டையிலே பல்லவ அரசச் சின்னமான நந்தியின் இலச்சினை பொறித்திருந்தது.

சோமு

சித்திராங்கனுக்கு எதிரிலே பாறையின் மேல் வந்து நின்ற அந்தக் குதிரையிலிருந்து வீரன் கீழ இறங்கினான். இறங்கிச் சித்திராங்கனுக்கு அருகே வந்து அவனை நன்றாக ஏற இறங்கப் பார்த்தான்.

"ஆசாரக் குறைவாக நடந்து கொள்வதற்காக மன்னிக்க வேண்டும். என் கடமையை நான் செய்கிறேன்!" என்று சொல்லி விட்டு, மறுபடியும் குதிரையின் மேலேறி அடுத்த கணம் காற்றாகப் பறந்து விட்டான் அந்த வீரன்!

மூடி விழிக்கும் நேரத்தில் இத்தனையும் நடந்தது. சித்திராங்க பூபதிக்கு மூச்சு நின்று மீளுவதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது!

காற்றாக வந்தது குதிரை. காற்றாகவே இப்பொழுது பறந்து சென்று விட்டது. அதிலிருந்து இறங்கிய வீரன் தன்னை ஒரு தரம் ஏற இறங்கப்

பார்த்தது. ஏதோ உள்ளம் என்ற திரையில் சித்திராங்கனுடைய ஓவியத்தையே ஒரு கணத்தில் பெயர்த்து எழுதிக் கொண்டு போவது போல் இருந்தது. அப்பப்பா! அவனுடைய கண்கள் தான் எத்தனை கூர்மையானவை. தன்னைத்தான் எப்படி ஊடுருவிக் கொண்டு இமை கொட்டாமல் நோக்கினன் அவன்.

சித்திராங்கனுக்கு இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது. குதிரைமேல் வந்த வீரன் பல்லவ சாம்ராஜ்யத்தின் வேவுப் படையிலே முக்கியமான ஒரு வீரனாக இருக்க வேண்டும். அவன் ஏன் தன்னை இப்படி ஆராய்ந்து பார்த்து விட்டுச் செல்லுகிறான்? அங்கே, சற்றுத் தொலைவில் நாலைந்து மனிதர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்களே அவர்கள் பக்கம் செல்லக் கூடாதோ? இல்லையே! தன்னை



மட்டும் வந்து பார்த்துவிட்டு அல்லவோ செல்கிறான். எத்தனை நாகரிகத்தோடு தன் கடமையைச் செய்வதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்கிறான்! "வெட்டு, குத்து" என்று நிற்க வேண்டிய ஒரு படை வீரனுக்கு இத்தனை பண்பாடு தமிழ் நாட்டிலே இருக்க வேண்டும் என்றால், இந்த நாட்டிலே உள்ள கல்விமான்கள் எத்தனை ஆசாரம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். தரணி கொண்ட போசர் என்ற ஒரு வைஷ்ணவப் பெரியாரைப் பற்றிப் புலவரையா சொன்னாரே, அவர் எத்தனை பண்பு நிறைந்தவராக இருக்க வேண்டும்! இந்த நாட்டின் அமைச்சு எத்தனை நாகரிகம் நிரம்பியதாக இருக்க வேண்டும்! ஒரு காலத்தில் தன்னுடைய வலம்புரித் தீவிலும் இத்தனை பெரிய நாகரிகம் நிலைபெற்று இருந்திருக்க வேண்டும் அல்லவா? இப்பொழுது அந்தப் பெரியாரோடு தான் எல்லாம் தொலைந்தது போலும்!

இப்படி எண்ணிக்கொண்டே பூபதி நினைத்தான். தன்னை ஏன் அந்த வீரன் வேவு பார்க்க வேண்டும்? தன்னைப் பற்றி யார் என்ன சொல்லியிருக்கக் கூடும்? தன் சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்குக் கூட நேரம் கொடுக்க வில்லையே அந்த வீரன்! காற்றிலே அல்லவா ஏறிப் பறந்து சென்று விட்டான்!

பூபதிக்கு உள்ளத்தில் ஒருவகையான அச்சமும் கலவரமும் ஏற்பட்டன. ஆனாலும் தைரியத்தோடு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு நேரே விடுதியை நோக்கி விரைந்தான். இவன் விடுதிக்குள்ளே நுழைந்த போது, என்ன ஆச்சரியம், அதே அந்தக் கருங் குதிரை வீரன் விடுதியிலிருந்து அதே குதிரையில் அதே வேகத்தோடு உள்ளேயிருந்து வெளியே வந்து, வீதியிலே வெகு வேகமாகச் சென்றான்!

பூபதிக்கு ஒரு கணம் தலை சுற்றியது. தன்னுடைய அறைக்குச் சென்று மௌனமாக உட்கார்ந்தான். அந்த வீரன் இந்த விடுதிக்குள்ளும் வந்து ஏதோ விசாரணை நடத்தியிருக்க வேண்டும். சந்தேகமில்லை. ஒருவேளை விடுதியின் தலைவனிடம் போய்த் தன்னைப் பற்றி ஏதாவது கேட்டிருப்பானோ? தலைவனிடமே போய் இந்த விவரத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டு விட்டால் என்ன?

இல்லை. தான் ஏன் இதற்கு இத்தனை பயப்பட வேண்டும்? ஏதோ குற்றவாளியைப்போல் ஏன் இப்படி நடுங்க வேண்டும்? விசாரிக்கட்டுமே! யாருக்குத் தன்னைப் பற்றி என்ன தெரியும்? அப்படியே தெரிந்தாலும் அதில் என்ன தவறு இருக்கிறது? வலம்புரித் தீவிலிருந்து, தான் எவ்விதமான சதியாலோசனையோடும் வந்து விடவில்லையே! எந்த அரசாங்கத்தையும் எந்த விதத்திலும் கவிழ்ப்பதற்கான எந்தத் திட்டமும் தன்னிடம் இல்லையே! பின் எதற்காகத் தான் அச்சம் அடைய வேண்டும்? காமம், மயக்கம், வெகுளி இந்த மூன்றும் தனது வாழ்

வில் இனிக் கிடையாது. அன்னையின் கட்டளையை அசையாத உறுதியோடு நிறைவேற்றப் போகிற தனக்கு இம்மாதிரியான கலக்கத்துக்கு எல்லாம் இனிமேல் எந்தவிதமான அவசியமும் இல்லையே?

இப்படி அவன் எண்ணியதும், அந்த எண்ணத்தையே காதினால் கேட்டுப் பரிகாசச் சிரிப்புச் சிரிப்பது போல யாரோ அறைக்கு வெளியே சிரித்தார்கள். தலையைத் தூக்கிப் பார்த்தான். கையில் மயில் பீலியும் ஒரு பழைய சுவடியுமாக அறைக்கு வெளியே யாரோ ஒரு சமணத் துறவி நின்று கொண்டிருந்தார்.

'என்ன தம்பீ! யோசனை பலமாக இருக்கிறது! ஆருடம் சொல்லட்டுமா?' என்று கேட்டுக் கொண்டே அவனுடைய அங்கீகாரத்தை எதிர்பார்த்தவாறு மேலும் ஒரு சிரிப்புச் சிரித்தார் அந்தத் துறவி.

'ஆருடமும் வேண்டாம். சோதிடமும் வேண்டாம்! வணக்கம்!' என்று ஒரு பெரிய கும்பிடு போட்டு விடலாம் என்று தோன்றியது முதலில். ஆனால் உள்ளத்துக்குள்ளே ஒரு சபலம். ஒரு கணம் மனம் போராடியது. அடுத்த கணம் ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்தவன் போல, "வணக்கம். அதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. போய் வாருங்கள்!" என்று கையைக் கூப்பினான் பூபதி!

சமணத் துறவி சிரித்தார். "நம்பாதவனுக்குத்தான் நிச்சயம் பலன் சொல்ல வேண்டும். ஆனாலும் மதியாதவன் வாசலை மிதிக்கக் கூடாது என்பது சாஸ்திரம். ஆகையால், வெளியே இருந்தவாறே ஒரு சிறிய ஆருடம் சொல்கிறேன். கேள்! நீ உன் மனத்தில் எண்ணுகிறாயே மூன்று விஷயங்கள், அந்த மூன்றும் உன்னைப் பிடித்து ஆட்டப் போகிற மூன்று பிசாசுகள். எப்பொழுதாவது பிசாசுகளை விரட்ட வேண்டும் என்றால் எங்களுடைய ராஜ விகாரத்துக்கு வந்து சேர்!"

இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றார் சமணத் துறவி.

ராஜ விகாரம் என்பது காஞ்சிமாநகரத்திலே யிருந்த சமணர்களின் பள்ளி என்றும், திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தப் பெருமானும் இந்தப் பூமியிலே தோன்றி நடமாடிய பிறகு அந்தச் சமணப் பள்ளி மிகவும் க்ஷீணித்துப் போய் விட்டது என்றும், கப்பலிலே புலவரையா பூபதிக்குச் சொன்னது நன்றாக நினைவு இருந்தது. ராஜ விகாரம் க்ஷீணித்துப் போய் விட்டதால் இப்பொழுது துறவிகள் வெளியே நடமாடுகிறார்கள் போலும் என்று எண்ணினான் சித்திராங்கன். ஆனாலும் துறவி சொன்ன ஆருடம் அவனைப் பயப்படுத்திற்று. மூன்றும் தன்னைப் பிடித்து ஆட்டப்



போகும் மூன்று பிசாசுகள் என்றாரே! என்ன பயங்கரம்! இந்தப் பிசாசுகளுக்குப் பயந்து ராஜ விகாரத்துக்குப் போக வேண்டுமாமே! எப்படியிருக்கிறது கதை.

பிசாசுகளையெல்லாம் ஆட்டிக் கொண்டே, பேரானந்த ஆட்டத்திலே நடனமாடும் நடராஜப் பெருமானும் அவனுடைய திருவருளும் இருந்து விட்டால் ஏன் கவலைப்பட வேண்டும்? அந்தத் திருவருள் கிட்டுவதற்குத் தன்னை அருகதையுடையவ

னுகச் செய்து கொள்வதுதான் இனி மேல் தன்னுடைய கடமை என்று எண்ணிக் கொண்டே, புலவரையா சொன்ன பதிகத்தை உதட்டுக்குள்ளே ஒரு முறை பாடிக் கொண்டான்.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனொடும்
    விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல்
    அணிந்து என்
    உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும்
    மின்னும்
    மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல
    அடியாரவர்க்கு மிகவே

இப்படிப் பாடிக்கொண்டே கொடும்பாளூரைப் பற்றியும் அந்த ஊருக்குச் செல்லவேண்டிய மார்க்கத்தைப் பற்றியும், அங்கேயிருந்த யாழைப் பற்றியும் ஏதாவது தெரிந்து கொள்ளலாம் என்று கருதிப் பூபதி விடுதியின் நிர்வாக அறையை நோக்கி மெதுவாக நடந்தான்.

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில் சித்திராங்க பூபதியைக் கொஞ்சம் மறந்து விட்டுத் தமிழ் நாட்டின் அன்றையச் சூழ்நிலையை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

நமது செந்தமிழ் நாட்டிலே கல்வி சிறந்த காஞ்சிமா நகரிலே அப்பொழுது பல்லவப் பேரரசு ஆட்சி பீடத்திலே அமர்ந்து செங்கோல் செலுத்தி வந்த காலம். சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே பல்லவ மகேந்திர வர்மனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்ம வர்மனும், பின்னர் இரண்டாம் மகேந்திர வர்மனும், அவனுக்குப் பின் முதலாம் பரமேசுவர வர்மனும் ஆட்சி செய்து மறைந்தனர். பரமேசுவர வர்மனுக்குப் பின் இரண்டாம் நரசிம்மன் தோன்றிக் கோலாகலமாக ஆட்சி நடத்தினான். காஞ்சிமா நகரிலே கைலாசநாதர் கோயிலையும், மாமல்லபுரத்திலே புதிய கோயிலையும், தானமலைக் கோயிலையும் எழுப்பித் தனது பக்தியையும் புகழையும் கல்லிலே நாட்டி விட்டு மறைந்தான் இந்தப் பல்லவப் பேரரசன். இவனுடைய காலத்திலேதான் தண்டி என்ற வடமொழிப் புலவர் ஆஸ்தான கவிஞராக அமர்ந்திருந்தார். இந்த அரசனுடைய ராஜ சபையிலேதான் பாச கவியின் ஸம்ஸ்க்ருத நாடகங்கள் அரச




அங்கீகாரத்தோடு அரங்கு ஏறின. இந்தப் பேரரசன்தான் ராஜசிம்மன் என்ற சிறப்புப் பெயரோடு விளங்கினான். 'வாத்ய வித்யாதரன்' என்றும் 'ஸ்ரீ ஆதூர்ய தும்புரு', 'ஸ்ரீவீணா நாரத' என்றும், 'ஆதோத்ய' என்றும், பல பட்டங்கள் தாங்கி சங்கீதத்திலே நிகரற்ற மேதையோடு விளங்கினான். மகேந்திர வர்மன் கண்ட பரிவாதினி என்னும் பேரியாழில் ஏழு தங்கத் தந்திகள் அமைத்து வாசித்துப் பார்த்து விட்டு, பிறகு எட்டுத் தந்திகளிலே பல சோதனைகள் செய்தான் இந்த அரசன். தமிழ்இலக்கியங்களிலே வர்ணிக்கப்படுகிற பல பூர்வமான இசைக் கருவிகள் இந்த அரசனுடைய சபையிலே அரச உபசரிப்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாகிக் குதூகலமாக ஒலித்துக் கொண்டிருந்தன. ஏழு தந்திகள் அமைந்த செங்கோட்டு யாழும், பதினாறு தந்திகள் அமைந்த சகோட யாழும், பதினேழு தந்திகள் அமைந்த மகர யாழும், இருபத்தொரு தந்திகள் கொண்ட பேரியாழும், பழந்தமிழ் இசை நூல்களிலே சொல்லப்படுகிற இலக்கண முறைகளோடு இந்தப் பேரரசன் அவையிலே பல கலைஞர்களால் ஆராயப்பட்டும் பயிலப்பட்டும் வந்தன. ஆனால் இவன் காலத்துக்குப் பிறகு கலையின் வளர்ச்சியிலே ஒரு முறிவு ஏற்பட்டது. இவனுக்குப் பிறகு தோன்றிய இரண்டாம் பரமேசுவர வர்மன் அதிக நாள் அரசாளவில்லை. ஐந்து ஆண்டுகளுக்குள்ளே ஏதேதோ குழப்பங்கள் நேர்ந்தன. அவன் மறைந்தான். அவனோடு சிம்ம விஷ்ணுவின் பரம்பரையே அற்றுப் போய்விட்டது. பட்டத்துக்கு உரிய இளவரசன் இல்லாமல் போகவே, தாயாதி வழியில் இரணிய வர்மருடைய பன்னிரண்டு வயதுச் சிறுவனை மக்களும் பிரதானிகளுமாகச் சேர்ந்து தேர்ந்தெடுத்துக் காஞ்சிமா நகரிலே அழைத்து வந்து பட்டம் சூட்டியிருந்தார்கள். நாடு முழுதும் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. சிம்ம விஷ்ணுவின் பரம்பரையிலே தோன்றியவனும், தனக்குத்தான் அரசு வேண்டியது என்று உரிமை கொண்டாடியவனுமான சித்திர மாயன் என்னும் இளைஞன் இப்பொழுது பல சூழ்ச்சிகள் செய்துவந்தான். இதுதான் அன்றைய நிலை!



புதிதாகப் பட்டம் சூடிய பன்னிரண்டு வயதுச் சிறுவன், நந்திவர்மன் என்று அபிஷேகப் பெயர்

தாங்கி அரசாட்சியின் கடுமையை உணராத நிலையில் அரியணை ஏறினான்! நாடு முழுதும் பரவிய குழப்பம் அந்தச் சிறுவனை அதிகமாகப் பாதிக்காத வண்ணம் அவனுக்குப் பக்க பலமாக நின்றார் அவனுடைய தந்தை இரணிய வர்மர். பல்லவ மல்லன் என்றும், போத்தரையன் என்றும் சிறப்புப் பெயர்கள் சூடி, நந்திவர்மன் பிற்காலத்தில் பல மகோன்னதமான சாதனைகள் புரிவதற்குத் துணையாகக் கச்சை கட்டி நின்றார் உதய சந்திரன் என்ற மதியூகி. முத்தரையர்கள் என்ற குறுநிலத் தலைவர்கள் தங்களுடைய வீரமும் வலிமையும் செல்லும் மட்டும் நந்திவர்மனுக்கு நீங்காத் துணையாக நின்றார்கள். ஆனால் சேர சோழ பாண்டிய வேந்தர்களோ பல்லவப் பேரரசை வீழ்த்த இதுதான் சமயம் என்று கருதினார்கள். ஏற்கனவே எல்லைச் சண்டைகள் காரணமாகப் பாண்டிய வேந்தர்களுக்கும் பல்லவர்களுக்கும் பகைமை உணர்ச்சி அரும்பிக் கொண்டிருந்தது. ஆனால் சிம்மவிஷ்ணு பரம்பரை அரசாட்சியில் இருந்தவரையில், அந்தப் பகைமை வலுப்படவில்லை. காரணம் பாண்டியர்களுக்கும் விஷ்ணுசிம்மனின் பரம்பரைக்கும் திருமண உறவு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது சிம்மவிஷ்ணுவின் பரம்பரையிலே வந்த சித்திரமாயனுக்கு எதிராக, நந்திவர்மன் பட்டம் சூடியதும், சித்திரமாயன் பாண்டியனிடம் தஞ்சம் புகுந்தான். எனவே, பாண்டிய அரசன் தனக்குப் பக்க பலமாக மற்றத் தமிழ் வேந்தர்களையும், குறுநில மன்னர்களையும் ஒன்று திரட்டிக் கொண்டிருந்தான். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பல்லவர்களுக்குப் பெருந் துணையாக இருந்த கொடும்பாளூர் வேளிர்கள் இப்பொழுது பல்லவருக்கு எதிராக நின்று, பாண்டியர்களின் கட்சியிலே சேர்ந்து போர் புரிய ஆயத்தமானார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல்லவ சாம்ராஜ்யம் எப்படியிருக்கும்? காஞ்சிமா நகரமும் மாமல்லத் துறைமுகப் பட்டினமும் ஒவ்வொரு விநாடியும் சூழ்ச்சிக் கொந்தளிப்பை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன. இந்த நிலையிலே பெரியாழையும், அதன் இன்னொலியையும் மக்கள் மறந்து விட்டதில் வியப்பில்லை அல்லவா. இதையேதான் சொன்னான் விடுதித் தலைவன் பூபதியிடம்!



ஆமாம்; மேலே சொன்ன விவரங்கள் அனைத்தையும் விடுதியின் தலைவன் விஸ்தாரமாகப் பூபதிக்கு எடுத்துச் சொன்னான். அவன் சொன்ன முறையைப் பார்த்தால் உள்ளத்தின் அந்தரங்கத்தில் அந்த விடுதித் தலைவனுங் கூடப் பல்லவர்களுக்கு விரோதமாக எதிர்க் கட்சியிலே சார்பு கொண்

டிருந்தானே என்று பூபதி சந்தேகிக்கும்படியிருந்தது. அப்படி அவன் சந்தேகித்ததிலுங்கூட உண்மையில்லாமல் போகவில்லை.

சித்திராங்க பூபதி விடுதியின் நிர்வாக அறையைவிட்டுப் புறப்படும் முன்பு தலைவனிடம் ஒரே ஒரு கேள்வி மட்டும் ஆர்வத்தோடு கேட்டான்.

“வாத்ய வித்யாதர அரசன் காலத்தில் உன்னதமான முறையிலே பேணி வளர்க்கப்பட்ட பேரியாழ் என்ற இசைக்கருவி, இப்பொழுது கொடும்பாளூரில் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, இது உண்மையா?”

சித்திராங்கன் கேட்ட இந்தக் கேள்விக்கு உடனே விடை சொல்லாமல் முதலில் பலமாகச் சிரித்தான் விடுதித் தலைவன்.

“என்ன தம்பி! வீணை எங்கே போய் விட்டது? அதை யார் எங்கே எடுத்துப் போனார்கள்? இந்த அகில உலகத்திலும் பேரியாழ் என்று சொல்லப்படுகிற வாத்தியம் ஒன்றே ஒன்று தான் உண்டா? எத்தனையோ வீணைகள் இருக்கின்றன. அந்த வீணைகள் எங்கும் போய் விடவில்லை. ஆனால் அவற்றின் மேல் ஓடி விளையாடக் கூடிய விரல்களைத்தான் இன்று காணோம். எல்லா விரல்களும் இப்பொழுது வாளைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றன!”

இவ்வாறு சொன்னான் விடுதித் தலைவன்.

“அப்படியானால் கொடும்பாளூருக்கும் இந்தப் பேரியாழுக்கும் என்ன சம்பந்தம்?” என்று கேட்டான் பூபதி.



“தம்பி! உன்னைப் பார்த்தால் பரம சாதுவாகத் தோன்றுகிறாய். உன்னுடைய முகத்தில் பால் வடிகிறது. உன்னிடம் எந்த விஷயத்தைச் சொல்வதிலும் பிசகு ஒன்றும் நேர்ந்து விடாது. நீ என்னைக் காட்டிக் கொடுத்துவிட மாட்டாய் என்று தெரிகிறது. ஆனாலும் நாடு இன்றிருக்கும் சூழ்நிலையில் எவரிடமும் நிதானத்தோடுதான் பேச வேண்டியதிருக்கிறது. அதனால் நீ எனக்கு ஒரு சபதம் செய்து கொடுத்தால் உனக்கு அந்த விவரத்தை மறைக்காமல் முழுதும் சொல்லுகிறேன்!”

இப்படிக் கூறினான் விடுதித் தலைவன்.

“சபதமா?” என்று ஆச்சரியத்தோடு கேட்டான் சித்திராங்கன்.

“ஆமாம். வெறும் சபதம் இல்லை. நீ உலகிலேயே மிக மிக மதித்துப் பக்தி செலுத்தும் பொருளின் மேல் ஆணையிட்டுச் சொல்ல வேண்டும். அப்படியானால்தான் உனக்கு அந்த விவரத்தைச் சொல்லுவேன்!”

இப்படி ஒரு பிடிகை போட்டுக் கொண்டான் அவன். சித்திராங்க பூபதி உடனே பதில் பேசவில்லை. கடந்த சில நாழிகை நேரமாக அவனுக்குச் சபதம், ஆணை, உறுதிமொழி என்ற வார்த்தைகளே உள்ளத்தில் பயத்தை உண்டாக்கின. அதிலும் தான் தன் அறையில் உட்கார்ந்திருந்த போது, ஒரு சமணத் துறவி வந்து ஏதோ சொல்லி விட்டுப் போனாரே, அந்த விநாடியிலிருந்து அவனுடைய உள்ளம் மிகவும் குழம்பிக் கொண்டேயிருந்தது. ஏற்கனவே சித்தர் வந்து ஒரு கலக்குக் கலக்கிவிட்டுப் போயிருக்கிறார். அதைத் தொடர்ந்து குதிரை மேல் யாரோ ஒரு வீரன் வந்து அவனை ஒரு முறை ஏற இறங்க நோட்டம் பார்த்து விட்டுப் போயிருக்கிறான். சற்று முன்பு இந்தச் சமணத் துறவியும் வேறு வந்து ஆருடம்சொல்லுகிறேன் என்று ஆரம்பித்து, நெருப்புப் பொறிகளைச் சிதறி விட்டுப் போனது அவனை என்னவோ செய்தது. ஆருடம், சோதிடம் இவற்றில் எல்லாம் நம்பிக்கை கிடையாது என்று வாய் வீரம் பேசி அவரை அனுப்பி விட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் உள்மனத்துக்குள்ளேயிருந்து அந்த ஆருடத்தை அவ்வளவு எளிதாக அகற்றி விட முடியவில்லை. பதிகங்களை எத்தனை பக்தி பூர்வமாகப் பாடி நிறுத்திய போதிலும், இதயம் படபடவென்று அடித்துக் கொண்டுதான்

இருந்தது. அன்னையிடம் வாக்குறுதியோடு வாங்கி வந்துள்ள அந்தத் தந்தப் பேடகத்திலே காணப்படும் மூன்று உறுதி யுரைகளுமே அவனுக்குப் போதும். இந்த மனித ஆயுளுக்கு அந்த மூன்றுமே போதும், போதும்! இப்பொழுது புதிதாக இந்த விடுதித் தலைவன் வேறு ஒரு வாக்குறுதியை ஆரம்பிக்கிறானே என்று தயங்கினான் சித்திராங்க பூபதி.



"தம்பி! என்னைச் சந்தேகப் படாதே. உன்னையும் உன் இலட்சியங்களையும் பற்றி நான் ஓரளவு தெரிந்து கொண்டு விட்டேன்!"

இப்படி அவன் சொன்னதும் பூபதிக்கு மேலும் தூக்கி வாரிப் போட்டது. இந்த மாமல்லபுரம் ஒரு மகேந்திர ஜால புரமாக அல்லவா இருக்கிறது. தான் வந்து சேர்ந்த வினாடியிலிருந்து ஒவ்வொரு மனிதரும் ஒரோரு விதத்தில் அதிர்ச்சி தந்து கொண்டேயிருக்கிறார்களே! இவனைப் பார்த்தால் வெறும் பேரேட்டுக் கணக்காயன் என்றல்லவா நினைத்தோம். இவனுக்கு உள்ளேயும் ஒரு பெரிய இந்திர ஜால வித்தையல்லவா ஒளிந்து கொண்டிருக்கிறது! இவனும் தன்னைப் பற்றியும் தனது இலட்சியங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறானே. அது எப்படி முடிந்தது? வலம்புரித் தீவிலிருந்து தான் புறப்பட்டதும், முப்பது நாட்கள் மரக்கலத்திலே யாத்திரை செய்ததும், எத்தனை இரகசியமான விஷயங்கள்! எல்லாவற்றிற்கும் மேலாகத் தான் பெரியாழைக் காணவேண்டும் என்ற இலட்சியத்தோடு புறப்பட்டு வந்திருப்பது, யாருக்குமே தெரியாத மர்மம் அல்லவா? இவையெல்லாம் இந்த விடுதித் தலைவனுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்! வெறும் பய முறுத்தலாக இப்படி ஒரு போடு போட்டுப் பார்க்கிறானோ—என்றெல்லாம் பூபதி எண்ண ஆரம்பித்தான்.

"ஆச்சரியப்படாதே தம்பி! சற்று முன்புதான் உன்னை ஓரளவு இனம் கண்டு கொண்டேன். அது எப்படி என்று கேட்காதே. போகப் போகத் தெரியும். நான் உனக்கு ஒத்தாசை செய்யும் நோக்கத்தோடுதான் இந்த வினாடி வரை பேசிக் கொண்டிருக்கிறேன். புரிகிறதா? எடுத்த எடுப்பில் இந்த ராஜ்யத்தில், இன்றிருக்கும் நிலையில், உன்னிடம் இதயத்தைத் திறந்து விடுவேனா! ஏதோ ஓரளவு உன்னை ஸ்திரம் பண்ணிக்கொண்டு தான் இவ்வளவாவது உன்னோடு வார்த்தையாடுகிறேன். அதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டேன், என்ன என்பதைப் பற்றி மண்டையைக் குழப்பிக் கொள்ளாதே. ஏற்கனவே உனக்குக் குழப்பம் அதிகமாக இருக்கிறது. எனவே நான் சொல்வதை மட்டும் கேள். என்னைப் பற்றி உனக்கு ஓரே ஒரு விஷயம் மட்டும் சொல்ல வேண்டும். கொடும்பாளூர் என்றும் கொடும்பை என்றும் சொல்லப்படுகிற கோனாட்டுத் தலை நகரோடு தொடர்புடைய ஒரு பரம்பரையிலே வந்தவன் நான். இன்று பல்லவர்களுக்கும் கொடும்பை வேளிர்களுக்கும் பகைமை உண்டாகி வருகிறது. அந்தப் பகைமை உணர்ச்சியைப் பார்க்கும்போது உன்னிடம் இப்படி ஒரு உறுதி வாங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று தோன்றுவதால் கேட்கிறேன். உறுதி கொடு. பெரியாழ் இருக்கும் இடத்திற்கு ஓலைச் சுருளோடு உன்னை அனுப்பி வைக்கிறேன். நீ செல்வதற்கு வேண்டிய வசதிகளோடு ஒரு நல்ல குதிரையும் உனக்குத் தருகிறேன். உனக்குக் குதிரைப் பயிற்சி தெரியும் என்று நினைக்கிறேன். அவசியமானால் துணைக்கு ஆளும் அனுப்புகிறேன். இத்தனையும் நீ உறுதி கொடுப்பதைப் பொறுத்திருக்கிறது. என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் தலைவன்.

சித்திராங்கன் அந்த நிர்வாக அறையின் உத்தரத்தைப் பார்த்தவாறு என்ன பதில் சொல்வதென்று ஒரு கணம் யோசித்தான். (தொடரும்)

கலை நகரிலே

விநய நகரா? விநாயக நகரா?

சுப்புடு

லோக சபை அங்கத்தினராகிய ஸ்ரீ நாகப்ப செட்டியாரவர்கள் உற்சாகத்துடன் வளைய வருவதை நோக்குங்கால், இன்னும் சில மாதங்களுக்குள் விநய நகர் விநாயக நகராகிவிடும் என்று தோன்றுகிறது. தலைநகரிலே ஒரு கோயிலில்லாக் குறை நீங்க, விக்ன விநாயகனையே பிரதிஷ்டை செய்ய அவர் முன் வந்திருக்கிறார். திரு பாலசுப்ரமணியத்தை உபதலைவராகவும், திரு எம். கிருஷ்ணமூர்த்தியைக் காரியதரிசியாகவும் கொண்ட ஒரு செயற்குழு சுறுசுறுப்புடன் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறது. பொதுக் காரியங்களுக்குப் பயன்பட ஒரு மஹாலையும் கூடச் சேர்ந்து நிறுவ யோசித்திருப்பது வரவேற்கத்தக்க அம்சம். தற்போது புதுதில்லியில் ஆர அமர உட்கார்ந்து, கச்சேரியோ நாடகமோ ரஸிக்க உகந்த இடம் கிடையாது. விக்னக் கடவுளையே முன்னிட்டு நடத்தப்படுவதால் நிர்விக்னமாய்க் காரியம் முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

பெரிய பெட்டி வண்டி!

பயப்பட வேண்டாம்! கிராண்டு டிரங் எக்ஸ்பிரஸைத் தமிழாக்க முயன்றிருக்கிறேன். ஜூலை முதல் தேதி முதல் சென்னை செல்லும் ஜனதா தினம் போய் வரும் என்று திரு லால் பஹதூர் சாஸ்திரி அறிவித்துள்ளார். கொஞ்ச நாட்களாகத் தமிழர்கள் புதுதில்லி ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட் வாங்கவும், இடம் கிடைக்கவும், தவம் கிடக்கும் காட்சி லோக சபையிலுள்ள இரு தமிழ் அங்கத்தினர்களின் இருதயத்தைக்கூடத் தொட்டு விட்டது. திருவாளர்கள் நாகப்ப செட்டியாரும் மதுரை பாலசுப்பிரமணியமும், இது சம்பந்தமாய், ரயில்வே மந்திரியைச் சந்தித்ததின் பயனாக, தில்லிவாழ் தமிழர்களுக்கு வரப்பிரசாதமாய்க் கிடைத்தது இந்த அனுகூலம்.

தேடிவரும் புகழ்


வாஷிங்டனிலுள்ள தேசிய விஞ்ஞான கழகத்தினர், தில்லித் தமிழர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனுக்கு விஞ்ஞானத்தில் அவருடைய சேவையைப் பாராட்டி, விருதளித்து, தமது குழுவில் ஒரு அங்கத்தினராக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். (Foreign Associateship of the National Academy of Science, Washington) டாக்டர் அவர்களை அறிந்தவர்கள், இதனால் பட்டத்துக்குத்தான் கௌரவம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து கொள்வார்கள்.

சிறுமியர் நடனம்

பத்து வயதுக்குட்பட்ட பச்சிளங் குழந்தைகள் பரதநாட்டியமாடுவதைப் பற்றிப் பலவித அபிப்பிராய பேதமிருக்கலாம். நடன வித்தியாலயத்தைச் சேர்ந்த குமாரிகள் லக்ஷ்மி ஜயந்தியின் அரங்கேற்றத்தைப் பற்றிக் "கன கச்சிதம்" என்றுதான் சொல்ல வேண்டும். "ஆறே மாதத்தில் அரங்கேற்றம்" என்ற தற்காலத்திய தாரக நாமத்திற்கு விலக்காக, குமாரிகள் இரண்டு வருடங்களாகக் குமாரி வஸந்தாவின் வித்தியாலயத்தில் பாங்காய்ப் பயின்று, சாஸ்திர சுத்தமாய் அலாரிப்பு முதல் தில்லானா வரை, எல்லாம் சிறப்பாக ஆடினார்கள் சிறுமிகள்.


தலைமை தாங்கிய உள்நாட்டு மந்திரி தத்தார், ஆதிவாசிகளின் நடனத்தைப் பற்றி அரைமணி நேரம் பேசிவிட்டு, குழந்தைகளைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் மறக்காமல் சொன்னார்.





குமாரிகள் லக்ஷ்மி — ஜயந்தி






★

புத்தரும் சுஜாதையும்

அவள் பெயர் சுஜாதை. தனக்கு ஒரு குழந்தையருளுமாறு வனத்தில் ஒரு மரத்தை வேண்டித் தினம் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். அவளுக்கு அருள் பாலிக்கப்பட்டது. குழந்தைபிறந்தது. வனதேவனுக்குத் தன் நன்றி கலந்த பிரார்த்தனையைச் செலுத்தக் கையில் பாலன்னப் பாத்திரத்துடன் வந்தாள். அவள் சுற்றி வந்த மரத்தின் அடியில் தேஜோமயமான ஒரு மகா புருஷர் வீற்றிருப்பதைக் கண்டு, வனதேவனே தன் பாலன்னத்தை அங்கீகரிக்க வந்திருப்பதாக எண்ணி மகிழ்ந்தாள். பசியுற்றிருந்த பகவான் புத்தர் சுஜாதையின் பாலன்னத்தை ஏற்று அருள் பாலித்தார்!

★ ★ ★

மகா ஜோதி



உலகின் அஞ்ஞான இருள் அனைத்தையும் அழித்து ஞான ஒளியை வாரி எடுத்துப் பூச நினைப்பது போன்ற தேய்வு படாத முழு நிலவு! அந்த நிலவின் பேரொளியிலும் அங்கங்கு திட்டுத் திட்டாகக் கருத்த நிழல் வைராக்கிய சிலனைக் கிளம்பிய மனிதனையும் தொடர்ந்து வரும் சம்சார பந்தம் போலப் பரந்துகிடந்தது.

'மனிதன் செய்த ஜென்ம ஜென்மாந்திரப் பாவங்களெல்லாம் நிழல் போல் அவனைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன' என்று ராஜ சபையில் ஒரு பௌராணிகர் சொல்லியது சித்தார்த்தனின் நினைவில் மிதந்து கொண்டிருந்தது. ஏன், 'மனிதனையே பாவம் செய்யாதவனுகச் செய்து விட்டால் நிழல் அவனை எப்படித் தொடரும்! சிறு குழந்தையின் பதட்டமான புத்தியில் தோன்றிய எண்ணம் போல் இது இருக்கலாம். ஆனால் இது மனித குலத்திலேயே புரட்சியை உண்டாக்க நினைக்கும் சிந்தனையல்லவா! ஒரு பொருளின் சாயலாக நிற்கிறது நிழல், மனிதனின் உள்ளே மறைந்திருக்கும் பாவத்தை வெளியே இழுத்துக் காட்டுவது போல. இந்த நிழல் உண்டாவது எப்படி! ஒளியினுல்தான். ஒளி இல்லாவிடில் நிழல் ஏது! ஒவ்வொரு ஜீவனின், ஒவ்வொரு பொருளின் உள் அந்தரங்கத்தில் மறைந்து கிடக்கும் மாசுகளை ஒளி தன் சக்தியால் நிழலாக்கி வெளியே பிரதிபலிக்கச் செய்கிறது. ஒளியால்தான் மனிதன் பாவங்களை உணருகிறுன். ஒளி இல்லாவிடில் மனிதன் தன் பாவத்தையே உணர முடியாது. மனிதனுக்கு ஒளி வேண்டும். ஆனுல் பாவமென்கிற நிழல் வேண்டாம். மனிதனைப் பாவமெனும் நிழலற்ற ஜீவனுக எப்படிச் செய்யலாம்!'—இதுதான் சித்தார்த்தனின் சிந்தையில் கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்த விஷயம். இதற்கெல்லாம் காரணம் வானில் மிதந்து வந்த முழு மதிதான்.

'மனிதர்களைப் போல் தேவர்களுக்கு நிழல் இல்லையாம். ஏனென்ருல் அவர்கள் பாவம் செய்யாதவர்களாம்' என்று அரண்மனைப் பௌராணிகர் சொன்னதும் சித்தார்த்தனின் நினைவுக்கு வந்தது. அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான். தேவர்கள் பாவம் செய்யாதவர்களென்று அவனுல் நம்ப முடியவில்லை. மனிதனின் பாவம் தனியாகப் பிரிந்து நிழலாக விழுகிறது. ஆனுல் தேவர்கள் செய்த பாவம் அவர்கள் உருவின் மேலேயே விழுந்து களங்கத்தைக் காட்டுகிறது. அதோ அந்தச் சந்திரனின் முழுவட்ட ஒளியிடையேயும் ஒரு களங்க நிழல், கண்ணுடிபோல் தெளிந்த நீருக்கு அடியில் கிடக்கும் பொருள் கண்ணுக்கு நன்ருகத் தெரிவது போல.

''மனிதன் பாவம் செய்யாதவனுகி விட்டால் தேவர்களைவிட உயர்ந்தவனுகி விடுகிறுன். அவன் பாவம் செய்தாலல்லவா ஒளியால் அவன் பாவத்தை நிழலாக்கிக் காட்ட முடியும்! பாவம் செய்யாதபோது மனிதனே ஒளிப் பிழம்பாகி விடுகிறுன்...ஒவ்வொரு மனிதனையும் பாவம் செய்யாதவனுகச் செய்துவிட வேண்டும். இது முடியுமா!...'' அரண்மனை

யின்மேல் உப்பரிகை உல்லாச கூடத்தில் நிலவொளியில் உலாவிய வண்ணம் இவ்வளவும் சிந்தித்தான் சித்தார்த்தன். குளு குளுவென்று வீசும் காற்று அரண்மனை நந்தவனத்திலிருக்கும் மலர்களின் நறுமணத்தை மோதிப் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்தது. இந்த உல்லாசமான வேளையில் வேறு ஏதோ இன்பகரமான நினைவுகள் எழ வேண்டிய யௌவன உள்ளத்தில் பெரிய தத்துவ விசாரங்களை எழுப்பி விட்டுச் சிந்தனை செய்ய வைத்தது எது! இந்த உலகம். அதில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் பல கோடி ஜீவன்கள்.


அதோ—சற்றுத் தூரத்தில் யாரோ நிழல் போல மெதுவாக நடந்து வருவதை அவன் பார்த்தான். ஆம்! நிழல் போலத்தான் அந்த உருவம் நடந்து வந்தது. நிழல் என்றால் பாவம் என்றல்லவா அவன் தீர்மானித்திருந்தான். யாரது......!


யசோதரை—அவன் மனைவி. அவள் தான் அவனை நோக்கி வருகிறாள். நிழல் போல நடந்து வருகிறாள். அவள் பாவமா! அவள் பாவத்தின் உருவமா...! இதை நினைக்கவே அவன் மனம் கூசிச் சிலிர்த்தது.

அவள் என்ன பாவம் செய்தாள்! அவன் அறிந்த வரையில் ஒன்றும் இல்லை. அவளை ஏன் அப்படி நினைக்க வேண்டும் அவன்!

அவள் அவனுக்குச் சமீபமாக வந்து விட்டாள். அவனுக்குச் சமீபமாக,—அவனை ஒட்டினாற் போல் அவனுடைய நிழல்போல் நிற்கிறாள். ஆம்! அவனுடைய நிழல் என்றால் அவனுடைய பாவத்தின் பிரதிபலிப்புத்தானே! யசோதரையின் தேகஸ்பரிசம் சித்தார்த்தனின் சிந்தனையைக் கலைக்கவில்லை. அந்த நேரத்தில் அந்த அழகி தன்னுடைய சாகசத்தாலும் இன்ப விளையாட்டுக்களாலும் அவனுடைய சிந்தனையைத் திருப்பிவிட வேண்டுமென்ற நோக்கத்தில் வரவில்லை. தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஏதேனுமிருக்குமானால் அதைச் செய்யும் நோக்கத்தோடுதான் அவள் வந்தாள்.

நிலவையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்த சித்தார்த்தன் மெதுவாகத் திரும்பித் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.





நிலவிலிருந்தது போன்ற களங்கத்தை யசோதரையின் முகத்தில் அவன் பார்க்கவில்லை.

"இரவு நெடு நேரமாகி விட்டதே, இன்னும் நீ தூங்கவில்லையா...!" என்றான் சித்தார்த்தன்.

"நீங்கள் இந்தத் திறந்த வெளியில் நின்று ஏதோ சிந்தனை செய்கிறீர்கள். நான் அரண்மனை அந்தப்புரத்திலிருந்து கொண்டு ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்தேன். நீங்கள் தூங்காத போது......"

"நீ தூங்கக் கூடாது என்று ஏதாவது சட்டமா...யசோதரா! நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே......!"

"அப்படிச் சொல்லாதீர்கள். கவலை என்பது உலகத்தில் எல்லோருக்குமே உள்ளது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கவலை. இகலோகத்தைப் பற்றிச் சிலருக்குக் கவலை இருக்குமானால் பரலோகத்தைப் பற்றிச் சிலருக்குக் கவலை. இகலோக பந்தத்தை அறுத்தவன் பரலோகத்தைப் பற்றிக் கவலைப்படுகிறான். பரலோகத்திலும் பந்தப்படாத ஒருவன் பரம்பொருளைப் பற்றிக் கவலைப்படுகிறான். கவலையற்றவர்களை உலகத்தில் காண்பது அரிது. எனக்கொரு கவலை. அது உங்களைப் பற்றியது. இந்தக் கவலை நான் படவேண்டியவள் என்பதைத் தர்மம் விதித்திருக்கிறது. அது ஸ்திரீ தர்மம்" என்றாள் யசோதரை.

ஊசிச்சரம் போல் பனி பெய்தது. உடம்பில் எவ்வித அங்கியும் அணிந்து கொள்ளாமல் திறந்த மார்போடு நின்றான் சித்தார்த்தன். அவன் போட்டுக் கொண்டிருந்த பட்டு உத்தரீயம் தரையில் கிடந்தது. யசோதரை அந்த உத்தரீயத்தை எடுத்து அவன் உடம்பில் போர்த்தினாள்.

"பனி பெய்கிற தென்று...! இப்படி எவ்வளவு நாளைக்கு என் உடலை நீ போர்த்திக் காப்பாற்ற முடியும்!" என்றான் சித்தார்த்தன் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே.

"எவ்வளவு நாளைக்கு என்றால்.........என்னுடைய கடமை என்று கருதும் வரையில் இதை நான் செய்வேன்......"

"எனக்கு இதிலெல்லாம் விருப்பம் இல்லை என்றால்......"

"உங்களுக்கு விருப்பமில்லாத காரியம் எதுவாயிருந்தாலும் அது என் கடமையுமல்ல......"

"இந்த அரண்மனையில் வசிப்பதே எனக்கு விருப்பமான காரியமல்ல" என்றான் சித்தார்த்தன் பெருமூச்சு விட்டுக் கொண்டே.

"உங்களை நான் தடுக்க முடியாது. ஏனென்றால் என்னுடைய ஸ்திரீ தர்மம் அவ்வளவு பலஹீனமானது. ஆனால் இந்த அன்பு......"

"ஆமாம்! அதனால் எதையும் தடுத்து நிறுத்தி விடலாம். யசோதரா! அந்த ஆயுதத்தை என் மீது பிரயோகிப்பாய்......"

"அதை நீங்கள் ஏதோ ஒரு ஆயுதமாகக் கருதி விட்டதுதான் விந்தை. அன்பை ஆயுதம் என்று காட்டி ஒருவரைப் பயமுறுத்துவதா! அது பலாத்காரமல்லவா! அதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா!" என்றாள் யசோதரை.

"இந்தச் சிக்கல் புரிபட வேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். பலவந்த

மாக ஒருவர் மனத்தைத் திருப்புவது அன்பு வழியாகாது.''

''சுவாமி, எனக்குத் தெரியும். நல்ல குல விளக்காக விளங்க நினைக்கும் பெண்கள் அன்பை ஆயுதமாக்கிக் கொண்டு வாழ்வைத் தேட மாட்டார்கள். அன்பைச் சித்தத்தைத் தெளிய வைக்கும் அமுதம் போல ஊட்ட நினைப்பார்கள். அதை மதியை மயக்கக்கூடிய மதுவைப் போலாக்கி விடமாட்டார்கள்.''

''ஓகோ! என் சித்தத்தைத் தெளிய வைக்கும் அமுதம் போல அன்பைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறாயா!''

''சுவாமி! அன்பு இயற்கையாகப் பிறப்பது. அதன் காரியங்களும் இயற்கையானதுதான். உண்மையான அன்பு சுயநல நோக்கத்துக்கு அடிமையாகாது. இயற்கையாகவே அது ஒருவருடைய புத்தியை மாற்ற வல்லது.''

அரண்மனை அந்தப்புரத்திலிருந்து குழந்தை ராகுலன் அழும் குரல் கேட்டது.

''குழந்தை அழுகிறான். நான் போகட்டுமா!''

''சரி! போ.''

''நீங்கள்......!''

''நான் சிறிது நேரம் பொறுத்து வருகிறேன்......'' என்றான் சித்தார்த்தன். அவள் பெருமூச்சுடன் சென்றாள். அவன் சிந்தை இந்த உலகத்தில் ஒட்டாது எங்கோ நகர்ந்து கொண்டிருந்தது. யசோதரையின் அன்பு வழி அவனைக் கலங்க வைத்தது. உலகமெங்கும் அன்பு மார்க்கத்தைப் பரப்பி அதைச் சொர்க்கத்திலும் உயர்ந்ததாகச் செய்துவிட வேண்டும் என்று நினைக்கும் ஒருவன் தன்மீது ஒருவர் வைத்துள்ள பேரன்பைத் திரஸ்காரம் செய்வது என்பது தருமமா! யசோதரையின் அன்பு முகம், குழந்தை ராகுலனின் களங்கமற்ற முகம் இரண்டும் நீரோட்டத்திடையே மணல் வீடு கட்டினால் எப்படிக் கரைந்து விடுமோ அப்படி அவன் சிந்தனையின் மூலம் திடமாகிக் கொண்டிருந்த மனப் பக்குவத்தைக் கரைத்துக் கொண்டிருந்தன.

சித்தார்த்தன் நிலவொளியில் அப்படியும் இப்படியுமாக உலாவினான். அவனுடைய சித்தமும் அப்படியேதான் எங்கோ போய் மோதி மோதித் திரும்பிக் கொண்டிருந்தது. வலிய இழுக்கும் ஒரு அன்பின் சக்தியில் தான் கட்டுப்படாது உலகம் முழுவதையும் அன்பின் ஆதிக்கத்தில் கட்டுப்படச் செய்துவிட வேண்டுமென்று அவன் நினைத்தான். எங்கிருந்தோ ஒரு காகம் கரைந்தது. இன்னும் சிறிது நேரத்தில் பொழுது விடியப் போகிறது என்பதற்கு அறிகுறியாக முழுமதி மேல் வானத்தில் இறங்கிக் கொண்டிருந்தது. கீழ் வானத்தில் வெள்ளி கண் சிமிட்டியது. சித்தார்த்தனின் தேகத்தில் போர்த்தப் பட்டிருந்த உத்தரீயம் முழுதும் பனியால் நனைந்திருந்தது. அரண்மனை அந்தப்புரத்தை நோக்கி நடந்தான், தெளிவுறாத சிந்தனையோடு.

யசோதரை பொன் கட்டிலில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் குழந்தை ராகுலனும் நித்திரையிலிருந்தான். கட்டிலுக்குப் பக்கத்தில் வைக்கப் பட்டிருந்த அலங்கார தீபத்தின் மங்கலான ஒளியில் களங்கமற்ற அந்த இரு முகங்களின் பிரகாசத்தையும் பார்த்தான். பந்த பாசத்



புத்தன் சரணம்!

தமிழழகன்

அன்பின் பெருமை யுணராமல்,
  ஆசை வேகம் தணியாமல்,
முன்பின் எதையும் பாராமல்
  மூடத் தனத்தில் உழல்வோரைப்
பண்பின் நெறிதான் படுத்துமொரு
  பாதை சமைத்த புனிதனவன்
செம்பொன் கழல்காம் வாழ்த்துதுமே;
  சித்தன் அவனை ஏத்துதுமே!

மூலம் எதுவென் றறியாமல்,
  மோகச் சுழல்தான் புரியாமல்
காலகதியைக் கருதாமல்
  கண்கள் இருந்தும் மிரள, அலங்
கோலமாகத் திரிபவர் தம்
  கொடுநோய் போக்க விழைந்து, பஞ்ச
சீலம் தந்தோனை வாழ்த்துதுமே:
  சென்னி அவன்தாள் ஏத்துதுமே!

சுத்த ஞானத் தழல்தனிலே
  சொந்தம் அனைத்தும் நீறாக்கிச்
சித்தப் பிரமைக் கோர்மருந்தாய்ச்
  சீவன் மீது கருணைசெய்யும்
அத்தன் போதி அமரனவன்;
  அரியது செய்த பெரியனவன்;
புத்தன் சரணே வாழ்த்துதுமே;
  புனித சங்கம் ஏத்துதுமே!



தியால் உருகித் தளர்ந்த தன் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு எங்காவது போய் விட லாமா என்று அவன் யோசித்தான். அவன் பயந்ததெல்லாம் யசோதராவின், ஸ்திரீ தர்மம் என்று சொல்லும் கடமை உணர்ச்சிக்கும் அந்தக் கடமை புணர்ச்சியோடும், தர்மத் தோடும் கலந்து நிற்கும் பேரன்புக்குத்தான். அவள் அவனைத் தடுக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அவளுடைய பேரன்பு அவனைத் தடுத்துவிடும் என்பதை அவன் நிச்சயம் அறிவான். யசோதரை நித்திரையிலிருக்கும் தருணம்தான் போவ தற்குரிய தருணமாகப் பட்டது அவனுக்கு.

மஞ்சத்தில் படுத்திருந்த யசோதரை திடுக் கிட்டு எழுந்தாள். மிரள மிரள விழித்த வண்ணம் நான்குபுறமும் பார்த்தாள். வெளியே செல்வதற்குச் சித்தமாக இருந்த சித்தார்த்தன் யசோதரை திடீரென்று நித்திரை கலைந்து எழுந்ததைக் கண்டு திகைத்தான். சற்றுத் தூரத்தில் நிற்கும் தன் கணவனைக் கண்ட யசோதரை பரபரப்போடு எழுந்து வந்தாள். "நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்! இத்தனை நேரம் உங்களுக்காகக் கண் விழித்திருந்தேனே! இப்பொழுது ஏன் எனக்கு அந்த நித்திரை வர வேண்டும்! சுவாமி! உலகத்தில் எத் தனையோ மாயை. அதில் இந்த நித்திரையும் ஒரு மாயை. நல்ல வேளை இப்பொழுதாவது விழித்துக் கொண்டேனே! வாருங்கள், ஏன் நிற்கிறீர்கள்! உங்கள் உடம்பு பனியினால் எவ்வளவு ஜில்லிட்டு இருக்கிறது! தூங்காத தினால் உங்கள் கண்கள் எவ்வளவு சிவந்து இருக்கின்றன! முகம் எவ்வளவு வாடி இருக் கிறது! வாருங்கள், இனிமேலாவது கொஞ்சம் தூங்குங்கள்" என்றாள் யசோதரை அன்பும் பணிவும் நிறைந்த குரலில்.

"என்னைத் தூங்கச் சொல்கிறாயா! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நித்திரை என்பதும் ஒரு மாயை என்று சொன்னாய்! அந்த மாயைக்கு என்னை அடிமையாகச் சொல்கிறாயா!" என் றான் சித்தார்த்தன்.

"நித்திரை என்பது என் விஷயத்தில் மாயை யாக விளையாடுகிறது. அதனால் சொன்னேன்."

"யசோதரா! நித்திரை மாத்திரமல்ல. விழிப்பும் மாயையாகத்தான் விளையாடுகிறது. ஆழ்ந்த நித்திரையிலிருந்த நீ திடீரென்று எப்படி விழித்து எழுந்தாய்!"

"ஒரு கனவு!"

"கனவா... அது ஒரு பெரிய மாயை! என்ன கனவோ!"

"கொஞ்சம் பயங்கரமான கனவுதான். பயங்கரமான கானகம். இரவு நேரம். எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒரு கணவனும் மனைவியும் வருகிறார்கள். மிகவும் களைப்போடு வந்த அவர்கள் இருவரும் ஒரு மரத்தடியில் படுத்துக் கொள்கின்றனர். மனைவி தூங்கி விடுகிறாள். கணவன் எழுந்து உட்கார்ந்து சிறிது நேரம் யோசனை செய்த பின் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் தன் மனைவியை விட்டு விட்டு எங்கோ போய் விடுகிறான். மறு நாள் காலையில் நித்திரை கலைந்து எழுந்த அந்தப் பெண் பக்கத்தில் படுத்திருந்த தன் கணவனைக் காணாமல் அலறி அழுது கானகமெல்லாம் சுற்றி அலைந்து தேடுகிறாள்.... இதுதான் கனவு. என்ன பரிதாபம்! இரக்கமில்லாமல் இரவு வேளையில் பயங்கரமான கானகத்திடையே ஒருவர் தன் மனைவியை விட்டு விட்டு ஓடுவ தென்றால் அது ஏதோ விதியாகத்தானே இருக்க முடியும்!" என்றாள்.

யசோதரை கண்ட கனவு இப்படிப்பட்ட தாக இருக்குமென்று சித்தார்த்தன் நினைக்கவே யில்லை. அவன் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, "இதெல்லாம் சகஜம். இந்தக் கனவு நளன் தமயந்தியைப் பிரிந்த கட்டம் போலிருக்கிறது. நம்முடைய பாரதப் பெண் கள் எவ்வளவு சோதனைகளுக்கெல்லாம் ஆளாகி இருக்கிறார்கள்! இதெல்லாம் உன்னைப் போன்ற பெண்களுக்கு வேண்டியதுதான். ஏதேனும் சோதனைகளுக்காளானால்........." என்று கூறினான்.


"உண்மைதான். நான் அவர்களைப்போன்ற பக்குவநிலையை அடைய வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறேன். ஆனால் அவர்களைப் போன்ற பாக்கியவதி யாரோ......!"

"நீயும் அவர்களைப் போன்ற பாக்கியவதி தான். அவர்களுக்கெல்லாம் ஏற்பட்டது போன்ற பெரிய சோதனைகள் உனக்கு ஏற் பட்டால் சமாளிக்காமல் இருந்துவிடப் போகிறாயா! யசோதரா!" என்று சொல்லி யசோதரையின் முகத்தைப் பார்த்தான்.

யசோதரை தன் கணவரின் உள்ளத்தை அறிந்து கொண்டவள்போல், "நானும் என் நாயகரின் லட்சியங்கள் உயர்வடைய வேண்டு மென்பதற்காக எத்தகைய சோதனை ஏற்படுவ தாயினும் சமாளிக்கத் தயாராகத் தானிருக் கிறேன். அதோடு என் கணவருக்கும் ராமன், அரிச்சந்திரன், இவர்களுக்கு ஏற்பட்டது போன்ற மனோதிடம் ஏற்பட வேண்டு மென் றும் பிரார்த்திக்கிறேன்..." என்று கூறினாள்.

தன் மனைவிக்குள்ள மனோதிடத்தை ஓரளவு புரிந்து கொண்டான் சித்தார்த்தன். அதை நினைத்தபோது, சீதை, தமயந்தி, தாரா, எல்லோரையும் விடத் தன் மனைவி உயர்ந்தவ ளாகத்தான் சித்தார்த்தனுக்குத் தோன்றி யது. ஏனென்றால் சீதைக்கோ, தமயந்திக்கோ ஏற்பட்ட சோதனைகளெல்லாம் எதிர்பாரா தவை. ஆனால் யசோதரை சோதனையை எதிர் பார்த்தே அதை வரவேற்கத் தயாரா யிருக் கிறாளல்லவா! சீதைக்கோ, தமயந்திக்கோ ஏற்பட்ட சோதனைகள் அனைத்தும் அவர்கள் கணவர்களால் ஏற்பட்டதென்று சொல்ல முடியாது. கணவனுக்கு ஏற்பட்ட சோதனை யைத் தாங்களும் பகிர்ந்து கொள்ள நினைத்த போது பலவித இன்னல்களுக்குள்ளானார்கள். யசோதரைக்கு ஏற்படப் போகிற சோத னைக்கு முழுப் பொறுப்பாளி அவளுடைய கணவனாகிய தான்தானே! தாராவும், சீதை யும், தமயந்தியும் பலவிதச் சோதனைகளுக்கு உள்ளானாலும் மறுபடியும் தங்கள் கணவரை அடையும் பாக்கியம் பெற்றார்கள் அல்லவா! ஆனால் இல்லறத்தை விட்டுத் துறவு மார்க் கத்தில் செல்ல நினைக்கும் என்னை யசோ தரைக்கு மறுபடியும் அடையும் பாக்கியம் உண்டா...! இதை நினைத்தால் சீதை, தமயந்தி, எல்லோரையும் விட உயர்ந்தவளாகத்தானே யசோதரா போற்றப்பட வேண்டியவள்... என்று பெருமூச்சு விட்டான் சித்தார்த்தன்.


"யசோதரா! தன் மனைவியை நடுக் காட் டில் விட்டு விட்டு ஓடும் அவ்வளவு இரக்க



Nickel Silver
Fifths of Seconds — Rs.
HORSE TIMER
With Start, Stop and
Fly-back Action.
Nickel Silver
Tenths of Seconds .. Rs. 91
WEST END WATCH CO.
BOMBAY • CALCUTTA

பற்களைப் பரிசுத்தமாக்கும் மக்லீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'டெப்பாஸிட்ஸ்'ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்லீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்லீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'டெப்பாஸிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமானதுங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'டெப்பாஸிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'டெப்பாஸிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'டெப்பாஸிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்லீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்லீன்ஸ் 'டெப்பாஸிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்லீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்



MTY-41 TAM

மற்ற சுபாவமுள்ளவனாக நான் இருக்க மாட்டேன்'' என்றான்.

யசோதரையின் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு செளித்தது. "கணவனால் துறக்கப்பட்ட மனைவி வீட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் ஒன்றுதான்'' என்றாள் யசோதரை.

சித்தார்த்தன் ஒன்றும் பேசவில்லை. மௌன மாக நின்று கொண்டிருந்தான். யசோதரை யின் அன்புள்ளத்தை விட அவனுடைய திட சித்தம்தான் அவன் மனத்தை உருக்கியது.

யசோதரை சித்தார்த்தனின் நீண்ட கரங் களை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு, "சுவாமி! நீங்கள் மிகவும் களைப் படைந்திருக்கிறீர்கள். கொஞ்சம் சயனித்துக் கொள்ளுங்கள்...'' என்றாள்.

சித்தார்த்தன் சிலை போல் மௌனமாக நடந்து போய் மஞ்சத்தில் சாய்ந்தான். யசோதரை அவன் காலடியில் உட்கார்ந்து அவன் பாதங்களை வருடிக்கொண்டிருந்தாள்.

* * *

அன்று இரவு. மஞ்சத்தில் யசோதரைக் குப் பக்கத்தில் சித்தார்த்தன் படுத்து ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். திடீரென்று ஏதோ கனவு கண்டவன் விழித்தெழுந்தான். முதல் நாள் இரவு தோன்றிய தீர்மானம் மறு படியும் அவன் மனத்தில் தலை தூக்கியது. அப்பொழுதும் யசோதரையின் முகத்தையும் களங்கமற்ற ராகுலனின் முகத்தையும் சற்று உற்றுப் பார்த்தால்கூட மனம் மாறி விடுமோ என்ற பயத்தினால் சட்டென்று மஞ்சத்தை விட்டு இறங்கி அதிவேகமாக நடந்தான் சித்தார்த்தன், சித்தத்தை அடக்கி ஞானோதயம் பெறும் இடம் எது என்று தேடிக்கொண்டு.

காலையில் கண் விழித்து எழுந்த யசோதரை கணவனைக் காணாது சிறிது மருண்டாள். மாளிகை யெங்கும் தேடினாள். காணவில்லை. அவளுக்கு உண்மை விளங்கியது. சில நாட்க ளாக அவள் எதிர்பார்த்ததுதான் இப்பொழுது நடந்தது. அப்பொழுதுதான் அவளுடைய அன் பின் பிணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள் ளும் அளவுக்குத் தன் கணவருக்கு மனப் பக்குவமும் திடசித்தமும் ஏற்பட்டன என் பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவள் ஆகாயத்தை நோக்கி இரு கரங்களையும் குவித்து, "பரம்பொருளே! அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்றும். அவரை லட்சியத்தில் சித்தியடைந்த உத்தமராகச் செய்யும்'' என்று பிரார்த்தித்தாள். மூடி யிருந்த அவளுடைய விழி ஓரத்தில் இரு சொட்டுக் கண்ணீர் தோன்றி மின்னியது.

இளவரசனைக் காணவில்லை என்று நக ரெங்கும் செய்தி பரவிப் பரபரப்பை உண்டாக் கியது. அரசர் சித்தார்த்தனைத் தேடும்படி பல திசைக்கும் சேவகர்களை அனுப்பினார்.

மந்திரி அந்தப்புரத்துக்கு வந்து யசோதரா வின் துக்கத்தை ஆற்ற நினைப்பவர்போல, "அம்மணி! இளவரசரைத் தேடப் பல திசை களுக்கும் உளவாளிகளை அனுப்பி இருக் கிறோம். கவலைப்படாதீர்கள்'' என்றார்.


யசோதரை அலட்சியமாகச்சிரித்து, "அவரை எதற்காகத் தேட வேண்டும்! அப்படி அவ ரைத் தேடிக் கண்டு பிடித்தாலும் அவர் திரும்பி வரமாட்டார்......'' என்றாள்.

அவர் வியப்பு நிறைந்த குரலில், "தங்கள் கணவர் மறுபடியும் அரண்மனைக்குத் திரும்பு வதில் தங்களுக்கு விருப்பமில்லையா......!'' என்று கேட்டார்.

"எனக்கு விருப்பம்தான். நான் அவருடைய மனைவி. அவருடைய விருப்பத்துக்கு அனு சரணையாக நடக்க வேண்டியதுதான் என் கடமை, தர்மம். அவருடைய லட்சியம் சித்தி பெறுவதற்காக நான் என் சுவாமியைத் துறக்கச் சித்தமா யிருக்கிறேன்'' என்றாள்.

மந்திரி இவ்வார்த்தையைக் கேட்டுத் திகைப் படைந்தவராக யசோதரையின் முகத்தை உற்று நோக்கினார். இளமையின் துடிப்பு நிறைந்த அவளுடைய அழகான நீண்ட கண் களிலே உலகையே துச்சமாகக் கருதித் தள்ளும் துறவின் அலட்சியம் மிகுந்திருப் பதைக் கண்டார். சில நாட்களுக்குப் பிறகு புத்தன் என்னும் மகா ஜோதியைக் காணப் போகும் அந்த மனிதர் அன்று யசோதரை என்னும் மகா ஜோதி ஒன்றைக் கண்டு உள்ளம் சிலிர்த்துக் கரம் குவித்தார்.


சென்னையில் பூதான முனிவர்



சென்னை நகரில் விநோபாஜி மூன்று தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து லட்சக்கணக்கான மக்களுக்குத் தரிசனம் அளித்தார். பல அற்புத உரைகள் நிகழ்த்தினார் ராஜாஜியைச் சந்தித்துப் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார். விநோபாஜி சென்னையில் தங்கியிருந்த சில காட்சிகளை இந்தப் பக்கங்களில் காணலாம்.


உங்கள் எழில் மேம்பட காண்கிறீர்கள்
கட்டாவ்
வாயில்களில்
எந்த நேரத்திலும்
எந்த இடத்திலும்
எந்த சந்தர்ப்பத்திலும்
கட்டாவ் மக்கன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி லிமிடெட்
ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பலார்ட் எஸ்டேட், பம்பாய்
உள்ளூர் டெலிவரி ஸ்டோர்ஸ்: 210, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை

தேவியின் கடிதம்

நாட்டின் செல்வம்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சகோதரி சுஜாதா!

இளம் குழந்தைகளை வளர்ப்பதுகூட அவ்வளவு சிரமமில்லை. வயது ஏற ஏறத்தான் வளர்ப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறாய்.

சின்னக் குழந்தைகள் உள்ளம் நிர்மலமாக இருக்கிறது. இயற்கை அறிவும் அதிகமாயிருக்கிறது. அதனால் இளம் குழந்தைகள் நம் மனத்தைக் கவர்ந்து விடுகின்றன. எவ்வளவு குழந்தைகள் பிறந்திருப்பதைப் பார்க்கின்றோம்? ஆனால் புதியதாக நம் குடும்பத்திலோ சிநேகிதர்கள் வீட்டிலோ பிறந்தால் அதைக் கண்டு ஆனந்தப்பட நாம் சளைப்பதில்லை. குழந்தைகளின் நிர்மலமான சிரிப்பு நம்மைக் கவர்ந்து விடுகிறது. வயது ஏற ஏற அந்தக் கவர்ச்சி குறைந்து விடுகிறது.

ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைச் சில தாய்மார்கள் பாட்டுக் கச்சேரிக்கும் நாடகத்துக்கும் எடுத்துப் போகிறார்கள். பாடகர் தோடி ராகத்தை அபாரமாகப் பாடிக் கொண்டிருக்கிறார். சபையோர் மிகவும் சுவாரஸ்யமாக ரசிக்கும் கட்டத்தில் குழந்தை அழ ஆரம்பிக்கிறது. உடனே அந்தம்மாள் வெளியே சென்று விட்டாலும் நன்றாக இருக்கும். ஆனால் அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்த அதன் வாயை இறுகப் பொத்துகின்றாள். அது இன்னும் வீறிட்டுக் கதறுகிறது. சபையோர்கள் முக்கியமாக, புருஷர்கள் முறைத்து முறைத்துக் கொண்டு அந்தப் பெண்ணைக் கோபத்துடன் பார்க்கும்போது பெண்களாகிய நமக்கு அவமானமாக இருக்கிறது. எல்லோருக்கும் வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள உதவியாளர்கள் இருப்பார்களா, ஆயா வைத்து வளர்க்கக் கட்டுமா எனக் கேட்கலாம். தாய்மை என்பதற்கு மற்றொரு பொருள் தியாகம் என்பதுதான். நமக்கு வசதி இல்லாவிட்டால் சில சந்தர்ப்பங்களில் தியாகம் செய்வது நமக்குப் பெருமைதானே?



எந்தத் தாயிடமும், 'உன்னைவிட உன் பெண் சமர்த்து' என்று சொல்லிப் பாருங்கள். அவள் பொங்கிப் பூரித்துப் போவாள். மற்ற எந்த உறவு முறையிலும் இப்படிச் சொன்னால் கோபம், ஆத்திரம்தான் வரும். இந்த இணையற்ற உறவில்தான் அதிசயம்.

குழந்தைகள் தாங்கள் வளரும் சூழ்நிலையின் மூலமாகவும் தாய் தந்தையரிடமும், பள்ளிக்கூடத்திலும் அநேகவித அறிவைப் பெறுகிறார்கள்.


வளரும் வயதில் வெளிப் பழக்கங்களால் குழந்தைகள் திடீரென மாறுவது இயல்பு. எல்லா வசதிகள் அளித்திருந்தும்கூடச் சில குழந்தைகள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்ய நினைக்கும்.

அமெரிக்காவில் ஒரு கோடீச்வரனுடைய பதினாறு வயதுப் பையன் சேர்ந்தாற்போல் மூன்று வருஷங்கள் போகிற இடமெல்லாம் சிறு சிறு பொருள்களைக் கவர்ந்து வந்திருக்கிறான். அவன் வீட்டைச் சோதனை செய்த போது மிக மிக அற்பமான பொருள்களையெல்லாம் கூடச் சேமித்திருக்கிறான். பிறகு மனத் தத்துவ நிபுணருடைய உதவியால் அந்த வழக்கத்தை மாற்றினதாகச் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் படித்தேன்.

பெண் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு பூர்ணமாக அளிக்கிறோம். அத்துடன் நம்முடைய கலாசாரம், பண்பாடு இவைகளை அறிவிக்க நாம் தவறக் கூடாதல்லவா? ஒரு சாதாரண நிலையிலுள்ள பெண் தன் இளம் பிராயத்துச் சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தாள். அன்றைய நிலையில் அப்பெண் மிகவும் பணக்காரி. தன்னுடைய அளவற்ற செல்வத்தையும், விலை மதிக்க முடியாத ஆபரணங்களையும் பெருமையுடன் காட்டினாள்! இந்த எளிய சகோதரி மறு நாள் தன்னுடைய செல்வங்களைக் காட்ட அழைத்தாள். இவளிடம் என்ன இருக்கிறதென்ற அலட்சிய மனோபாவத்துடன் போயிருந்தாள் பணக்காரி. அந்தச் சகோதரி தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் காட்டி, இவைகள்தான் என்னுடைய செல்வங்கள்' என்றாள். பொலிவும், மரியாதையும், புன்சிரிப்பும் துலங்கும் அந்தக் குழந்தைகள் ஒரு தாயின் அரிய செல்வங்கள்தானே?

—பூமாதேவி

இந்திய மாம்பழங்கள்




ஒரு விமரிசனம்

சாவி

[இந்திய மாம் பழங்கள் உலகப் பிரசித்தியானவை. இங்கே உற்பத்தி யாகும் மாம்பழங்கள் யாவும் தனித்தனி விசேஷ குணங்கள் படைத்தவை. ருசி, அழகு, குணம், தோற்றம் எல்லாவற்றிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசம் கொண்டவை. நமது மாம்பழங்களுக்கு அயல் நாட்டினரிடையே பெரும் மதிப்பும் கிராக்கியும் உண்டு. சில மாம் பழங்களைப் பற்றிய விமரிசனத்தைக் கீழே காணலாம். இந்தக் கட்டுரையில் காணப்படும் மாம்பழங்களின் பெயர்கள் யாவும் நிஜமே. ஆனால், அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.]

மல்கோவா

சர்வதேசப் புகழ் வாய்ந்தது. மாம்பழங்களுக்குள்ளே ஒரு மாணிக்கம். காஷ்மீரைச் சேர்ந்தது. அலகாபாத்தில் உற்பத்தியானது. டில்லியில் இருப்பது. அகில உலக மார்க்கெட்டில் அதிக செல்வாக்கு பெற்றது. காந்தி மகானுக்கு உகந்த கனி.




இந்திய மக்களின் இதயத்தைக் கவர்ந்தது. இதன் சகோதரி மாம்பழத்துக்கு குமாரி என்று பெயர். இதன் குடும்பமே ஒரு நல்ல பழ வர்க்கத்தைச் சேர்ந்தது. பொன்னிற மேனியும் வெண்ணிற உள்ளமும் படைத்தது.

தொட்ட இடமெல்லாம் தித்திக்கும் கனி. தின்னத் தின்னத் தெவிட்டாதது. புளிப்பு, நார், மாசு மறுவற்ற பத்தரை மாற்றுத் தங்கம். இந்த மாம்பழத்தின் பெருமை யாரும் மகிமையாலும் இந்தியாவின் புகழே உலக அரங்கில் உயர்ந்திருக்கிறது. மல்கோவா சீக்கிரத்தில் லண்டனுக்குப் போகப் போகிறது. அங்கிருந்து அமெரிக்காவுக்கும் விஜயம் செய்யும். அமெரிக்க பிரஸிடெண்ட் ஐஸன் ஹவர் இதைத் தம்முடைய பிரத்தியேக விமானத்தில் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப் போகிறார். ருஷ்யாவும் போட்டியிட்டுக் கொண்டு இந்த மல்கோவா மாம்பழத்தை மீண்டும் வரவழைக்கலாம்.

நாடிப் பசந்து

இந்திய மண்ணில் விளைந்தது. இந்தியா வெங்கும் சுற்றித் திரிவது. மெலிந்த தேகம். எலும்பும் தோலுமாகக் காட்சி தரும் எளிய தோற்றம். ஆனால் ஏழைகளுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம். ஓரிடத்தில் நில்லாமல் கிராமம் கிராமமாக ஓடிக்கொண்டே இருக்கும். இது போகுமிடமெல்லாம் மண் வாசனை வீசும். இதற்கு விலை கிடையாது. தானமாக யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளும். இதை வளர்த்து வளம் படுத்திய தோட்டக்காரர் மறைந்து விட்டார்.



நாடிப்பசந்து இப்போது தமிழகத்தில் சுற்றுகிறது. காஞ்சிச் சந்தைக்கு இம்மாதக் கடைசியில் வரும் என்று மார்க்கெட் செய்தி கூறுகிறது. நாடிப் பசந்தின் புகழ் பாருள்ளளவும் பஞ்சபூத முள்ளளவும் இப் பூமண்டலத்தில் பிரகாசிக்கும். நாடிப் பசந்தின் வித்து இந்நாட்டு மண்ணுக்கு ஏற்ற அற்புத வித்து.

பங்களூரா

பங்களூராதான். ஆனாலும் சேலத்தில் விளைந்தது. பழங்களுக்குள்ளே ஒரு ரத்தினம். பாரத ரத்தினம் என்பது இதற்கு மறு பெயர். கூர்மையான மூக்கு. நேர்மையான அமைப்பு. ஊறுகாய் போட்டுச் சாப்பிடலாம். தனியாகச் சாப்பிடலாம். காயாகச் சாப்பிடலாம்.




பழமாகச் சாப்பிடலாம். எல்லாவற்றுக்கும் பொருத்தமாயிருக்கும். சேலத்திலிருந்து

சென்னைக்கும், சென்னையிலிருந்து தில்லிக்கும் தில்லியிலிருந்து கல்கத்தாவுக்கும், கல்கத்தாவிலிருந்து மீண்டும் தில்லிக்கும் போய்ப் புகழ் பெற்றுள்ளது. இது எங்கே இருந்தாலும் இதன் மணம் வெகு தூரம் வரை வீசும். நார் கிடையாது. புளிக்கிறவர்களுக்குப் புளிக்கும். இனிக்கிறவர்களுக்கு இனிக்கும். இக்கனிக்கு ஒரு தனிக்குணம் உண்டு. இது எந்தப் பழத்தோடும் சேரக்கூடிய ஒட்டு ஜாதி இல்லை. தனக்கே உரிய தனிப் பண்பு, ருசி, தோற்றம், வசீகரம் எல்லாம் பொருந்தியது. மல்கோவாவிடம் இதற்கு மதிப்புண்டு. மல்கோவாவுக்கும் இதனிடம் மதிப்பும் மரியாதையும் உண்டு. மல்கோவா மாணிக்கம் என்றால் பங்களூரா ரத்தினம் அல்லவா?

மெல்லிய தோற்றம். நல்லிய இதயம். அர்த்த புஷ்டியான உருவம். பழுத்த அனுபவம். பண்பட்ட உள்ளம். மாம்பழத்துக்குச் சேலம் பிரக்யாதி பெற்ற இடம். சேலம் அளித்த இம் மாம்பழம் பாரதத்துக்குப் பொதுவான மாம்பழம். இப்போது மாம்பலத்தில் வாசம்.


ருமானி

மல்கோவாவின் சகோதரி. இந்தியாவில் தோன்றியது. இனிய சுபாவம் கொண்டது. தேசமெங்கும் திக்விஜயம் செய்வது. இப்போது லண்டனில் புகழ்க் கொடி நாட்டி வருகிறது. ஐக்கிய தேச சபையில் இதற்கு அதிக கிராக்கி.



நீலம்

சிவர்ச்சிகரமான பெயர். ஆனால் பெயருக்கும் சிறத்துக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. நாட்டுப் பழம்; விருதுநகரில் விளைந்தது. தமிழ் நாட்டில் நீலம் என்றால் ரொம்பப் பிரசித்தம். மற்றப் பழங்கள் ஆண்டு மாறி விட்டதால் நீலத்துக்கு யோகம். இது எந்த சீஸனிலும் மார்க்கெட்டில் இருந்து கொண்டிருக்கும். மற்ற ஜாதி மாம்பழங்களிடம் இது அதிகம் கலப்பதில்லை. இதன் காம்பு உறுதி. மரத்தை விட்டு இலேசில் இறங்காது. மேலேயே இருக்கும். இது புளிப்பா? இனிப்பா? ஒசத்தியா, மட்டமா? ஒருவராலும் ஒன்றும் சொல்ல முடியாது. ஆயினும் தமிழ் நாட்டில் இதற்கு எப்படியோ ஒரு பிராபல்யம் ஏற்பட்டிருப்பதுதான் ஆச்சரியம். இந்தப் பழத்துக்குச் சுன்னே கறுப்பு வண்டு இருக்கும்.




ஜாவா
தாய்லாந்து
ஜப்பான்
சீன
பர்மா
இலங்கை
மலாயா

புத்தர் ஆலயங்கள்

*

புத்தர் பிரான் எல்லாவற்றையும் விட்டுத் துறவு பூண்டார். ஆனால் அவருடைய அன்பு வழி உலகை எல்லாம் ஆட்கொண்டு விட்டது. உலகில் பல்வேறு இடங்களில் அவருக்கு ஆலயங்களும் ஞாபகச் சின்னங்களும் நிறுவி மக்கள் போற்றி வருகின்றனர். உலகில் இன்று மிகப் பிரபலமாக இருக்கும் பத்து இடங்களில் உள்ள புத்தர் ஆலயங்களை நமது சித்திரக்காரர் மணியம் வரிவடிவில் வரைந்திருப்பதை இந்தப் பக்கங்களில் காணலாம்.



பௌத்தம் நாஸ்திகமல்ல! அத்வைத வேதாந்தமே!

ராஜாஜி

உலகமெல்லாம் போற்றி வணங்கும் பகவான் புத்தர், தாம் ஒரு கடவுள் அவதாரம் என்று சொல்லிக் கொண்டதில்லை. தான் கடவுள் அனுப்பிய தூதன் என்றும் சொல்லிக் கொண்டதுமில்லை. ஒரு புதிய மதத்தை ஸ்தாபிப்பதாகவும் கூறவில்லை. புத்த சமய சாஸ்திரமான 'தம்மபத'த்தின் இருபத்தாறுவது அத்தியாயத்தில் ஒரு மனிதன் எப்படி நடந்துகொண்டால் உண்மையான பிராமணனாகலாம் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. இது பிராமணனை ஒழித்துவிட விரும்பியவரின் வார்த்தை அல்ல; இது ஹிந்துக்களின் சனாதன தர்மத்தை ஒழித்துவிட விரும்பிய ஒருவரின் வார்த்தையாகாது. ஹிந்துக்களின் கொள்கையாகிய கர்ம நியதியை அவர் எதிர்க்கவோ மறுக்கவோ இல்லை; கர்ம நியதியை அவர் வற்புறுத்தியிருக்கிறார்; மனத்தாலும் செயலாலும் ஆற்றப்படுகிற நல்வினை, தீவினைகளுக்குக் கட்டாயமாகப் பலன்கள் உண்டு என்பதை அவர் வற்புறுத்தினார்.

அவர் ஆத்மா உண்டு என்பதை மறுக்கவே இல்லை; அது நித்தியமான அழிவில்லாத வஸ்து என்பதையும், புனர்ஜன்மம் உண்டு என்பதையும் அவர் ஆமோதித்திருக்கிறார். அவர் கூறிய முக்தி நிலையான நிர்வாண நிலையானது,—ஒரு நதி சமுத்திரத்தில் கலப்பது போன்றதுதான்; சூன்யமாக முடிகிற நிலையல்ல. அவர் ஞான விளக்கம் பெற்ற ஒரு சனாதன ஹிந்துவைப் போலவே மற்ற ஆரிய மக்களுக்குப் போதித்தார்; நாஸ்திகராகப் பேசவில்லை. அவர் உலகத்தில் மிக மகத்தான அற்புதத்தை நிகழ்த்தினார். அதாவது மக்களின் மனத்தை மாற்றினார்; கொடுமையான கடினமான ஹிருதயங்களை இரக்கமும் அருளும் உள்ளதாக ஆக்கினார்.

என்றும் மறைந்து நிற்கும் படைப்பின் ரகசியங்களை அவர் விவகரிக்க விரும்பவில்லை. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றுதானா, அல்லது இரண்டா, அல்லது இரண்டாக ஒன்றா என்று - அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் முதலிய—தத்துவ விசாரங்களில் இறங்கவும் மறுத்தார். ஆனால் அவர் வேதாந்தத்துக்கு விரோதமானவர் என்றோ, அதை மறுப்பவர் என்றோ கூறுவதற்கில்லை. அவர் போதனை உண்மையான தன்னடக்கமும், உண்மையான ஞானமும் நிறைந்த உபநிஷத் போதனையாகும். புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்றே ஹிந்துக்கள் அமைத்துக் கொண்டார்கள். இது ஒரு தந்திரமல்ல; அவரது உண்மை நிலையை உணர்ந்து பக்தி உணர்ச்சியால்தான் அவ்வாறு ஒப்புக் கொண்டார்கள்.

கௌதம சாக்கிய முனிக்கு 2500 வருஷத்துக்குப் பிறகு இந்தியா அளிக்கக்கூடிய பாராட்டு என்னவென்றால் மெய்ஞ்ஞானத்தை உலகத்துக்குப் போதித்த ரிஷிகள், முனிவர்கள் கூட்டத்தில் புத்தரையும் ஒரு மகரிஷியாகக் கருதி ஸ்தானம் கொடுப்பதேயாகும்.

** ** **

புத்த பகவான் நம் அகக் கண்ணைத் திறக்க முயன்றார்; அதாவது நமக்கிருக்கும் அருள் கண்ணைத் திறக்கச் சொன்னார். கருணைக் கண்ணைக் கொண்டு பார்த்தால் மற்றப்படி நமக்குத் தெரிய முடியாத, நம் பார்வையிலிருந்து மறைந்து நிற்கிற உண்மை, எல்லா ஜீவன்களும் ஒன்றுதான் என்கிற பேருண்மையைக் காண்போம். நான் வேறு, நீ வேறுதான். அவன் வேறு, அவள் வேறுதான். ஆனால் உபநிஷத்துக்களை உபதேசித்த ரிஷிகளும், கீதையை உபதேசித்த ஸ்ரீ கிருஷ்ணனும் "பிறரில் உன்னைப் பார்; உன்னில் பிறரைக் கண்டு கொள்" என்று போதித்தார்கள். அதுதான் முக்தி நெறி, பேரின்ப நெறி என்று அவர்கள் உபதேசித்தார்கள்.

யோகியானவன் சமப் பார்வையுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும், தன்னுள் எல்லா உயிர்களுமிருப்பதையும் காண்கிறான் என்பது கீதா வாசகம். இது வெறும் ஞான உபதேசம் போல் தோன்றும். மனம் கரைந்து இரக்கத்துடன் பிற உயிர்களைக் கண்டோமானால் பிறரில் நம்மையும், நம்மில் பிறரையும் காணலாம். இதைத்தான் புத்தர் போதித்தார். மனத்தைக் கல்லாக்கிக் கொண்டால் நாம் குருடர்களாகி விடுகிறோம். இரக்கத்தால், அன்பால் கண்ணீர் மல்கிய கண்களோடு பார்க்கும்போது ரிஷிகளும் ஸ்ரீ கிருஷ்ணனும் நாம் எதைப் பார்க்க வேண்டுமென்று கூறினார்களோ அதைக் காண்கிறோம். இரக்கத்தை மேற்கொள்ளாத போதுதான், மனித பரம்பரையின் மகத்தான சொத்தாகிய கருணையை இழந்துவிட்டால், நாம் கண் பார்வை இழந்த குருடாகி விடுகிறோம். உலகம் இருளில் மறைந்து விடுகிறது. சகலமே அந்தகாரம்.

இரக்கம்தான் கண்களுக்கு உண்மை ஒளியளிப்பது. அதுதான் நான், அவன் என்கிற வேற்றுமை மாயை ஒழித்து ஒற்றுமையைக் காணச் செய்கிறது. புத்தர் அத்வைதத்தைப் போதித்த ஆசாரியர். வாழ்க்கை முறையில், தினசரி வாழ்க்கை முறையில் அத்வைதத்தைக் காணுமாறு போதித்த ஆசாரியர். அத்வைதத்தைப்பற்றி விமரிசனம் செய்வதும் பேசுவதும் வேறு. அத்வைதத்தை இதயத்தில் புகுத்தி உயிர்களின் ஒற்றுமையைக் காண்பது வேறு. புத்தருடைய கருணைத் தத்துவம் உண்மை அத்வைதமாகும்.

அத்வைதம் வெறும் தத்துவ விசாரணை மாத்திரமல்ல; வாழ்க்கை அனுஷ்டான ஒழுக்க முறை. அதுதான் புத்த தர்மமும்.

ஒரு காலத்தில் பௌத்தம் தென்னிந்தியாவில் நன்றாகப் பரவி, மன்னர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது என்பதற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் புத்தர் போதனைகள் நெடுகிலும் பரவிச் செழித்து வளர்ந்து வந்தன. அவைகளைத் தழுவி நடந்தவர்கள் புத்தரின் சிறந்த போதனையான கொல்லாமை விரதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். இன்றும் தமிழில் முழு பௌத்த இலக்கியங்கள் இருக்கின்றன. அவை தவிர, இலக்கணங்களிலும் யாப்பு நூல்களிலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட மிக அருமையான பகுதிகள், மறைந்து போன இலக்கியங்களின் பகுதிகள் பல இருக்கின்றன. அவைகளில் ஒரு பகுதி இங்கே குறிப்பிடப்படுகிறது :—

'' அருள் வீற்றிருந்த திருநிழற்போதி
முழுதுணர் முனிவ நிற்பரவுதும் தொழுதக
ஒரு மனம் எய்தி இருவினைப் பிணிவிட்டு
முப்பகை கடந்து நால்வகைப் பொருள்
ஓங்கு நீர் உலகிடை யாவரும் [உணர்ந்து
நீங்கா இன்பமொடு
நீடுவாழ்கெனவே.''

[டில்லி ரேடியோ நிலையத்திலிருந்து மே 6உ ராஜாஜி நிகழ்த்திய பிரசங்கம்.]

தமிழ் மொழியின் எதிர்காலம்

கொழும்பு, மேமீ 18உ


இலங்கைத் தமிழர்கள் தங்களுடைய வருங்காலம் எவ்வித பயங்கரமான நிலைமையை அடையப் போகிறதென்பதை எதிர்பார்த்து அஞ்சி வந்தார்களோ, அதைவிடப் பன்மடங்கு மோசமான நிலைமை உருவாகி விட்டது. சிங்களம் மாத்திரம் இந்நாட்டின் ராஜாங்க பாஷையாக்கப்படும் பட்சத்தில், தமிழ்மொழி தாழ்ந்த நிலைமையை அடையுமென்றும் தமிழர்களுக்கு அரசாங்கப் பதவிகள் கிடைப்பது கடினமாயிருக்குமென்றும் தமிழ் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இப்பொழுது அரசாங்கம் நியமித்துள்ள கமிட்டியினர் தயாரித்திருக்கும் ஒரு நகல் மசோதாவின்படி கவலைக்கிடமான ஒரு புதிய நிலைமை உருவாக இருக்கிறது.

அதாவது 1960-ம் வருடத்துக்குப் பின்னர் அரசாங்க இலாகாக்களுக்கு எழுதும் சகல கடிதங்களும் சிங்களத்தில் மட்டுமே இருக்க வேண்டும். இதர பாஷைகளில் எழுதும் கடிதங்களுக்குச் சட்ட அங்கீகாரம் இருக்க மாட்டாது. அரசாங்க இலாகாக்கள் எழுதும் பதில்களும் சிங்களத்தில்தான் இருக்கும். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளில் எதில் வேண்டுமானாலும் அரசாங்க இலாகாக்களுக்குக் கடிதம் எழுதும் உரிமை பொதுஜனங்களுக்கு இருக்க வேண்டுமென்று அசல் மசோதாவில் இருந்த ஒரு ஷரத்தைப் "பாஷைக் கமிட்டியினர்" நீக்கிவிட்டு 1960-ம் ஆண்டுக்குப் பின் சகல கடிதப் போக்குவரத்துகளும் சிங்களத்திலேயே இருக்க வேண்டுமென்ற ஒரு புதிய ஷரத்தைச் சேர்த்திருக்கின்றனர். இறுதித் தவணையான 1960-ம் வருடம் வரையிலும் வேண்டுமானால் தமிழ்—ஆங்கிலத்தில் அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதலாம். ஆனால் அவற்றுக்கு எழுதும் பாஷையில் பதில் கிடைக்குமென்பது நிச்சயமில்லை.

இரண்டாவதாக அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் 1967-ம் வருடத்துக்குப் பின்னர் சிங்களத்தில் மட்டுமே நடக்கும். நன்றாகச் சிங்களம் தெரிந்தவர்கள் மட்டுமே 1967ம்-வருஷத்துக்குப் பின்னர் அரசாங்க உத்தியோகங்களுக்குத் தகுதியுடையவராவர். 1960-ம் வருடம் வரையில் இஷ்டப்பட்ட பாஷையில் கடிதம் எழுதவும், 1967-ம் வருஷம் வரையில் இஷ்டப்பட்ட பாஷையில் அரசாங்க சேவா பரீட்சைகள் எழுதவும் அனுமதிக்கப் பட்டிருப்பது அந்த இரண்டு தவணைகளுக்குள் சிங்களம் கற்றுக் கொள்ள அளிக்கப்பட்டிருக்கும் இரு சலுகைகளென்று இலங்கைப் பிரதம மந்திரி அறிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தின் இந்தப் பாஷை வெறியை எதிர்த்து நாடு முழுவதிலும் தீவிரமான கிளர்ச்சி செய்யவும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யவும் தமிழ்த் தலைவர்கள் தீவிரமாக முனைந்திருக்கிறார்கள். தமிழ் மாகாணங்களில் பல எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடாகி யிருக்கின்றன. —ரஜனி

பௌத்த கலைச் சின்னங்கள்



1



2

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பகவான் புத்தர் இன்றுவரை ஞான ஒளி வீசிக் கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் பகவான் புத்தரின் சீரிய வாழ்க்கையிலும் கருத்துக்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட கலைஞர்கள் அவற்றைச் சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும், ஸ்தூபங்களாகவும் நிலைநாட்டித் தங்களுடைய பக்திபூர்வமான அஞ்சலியைப் பகவான் புத்தருக்கும் கலைத்துறைக்கும் செலுத்திக் கொண்டார்கள்.

இந்த இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டெனும் கால வெள்ளத்திலே மிதந்து பாரத நாட்டில் ஆங்காங்கு இன்று



3

திற்கும் பௌத்தக் கலைச் சின்னங்களைத் தொகுத்துப் பாரத சர்க்கார் அருமையான நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள சில காட்சிகளை இந்தப் பக்கங்களில் காணலாம்.

1. போபாலில் சாஞ்சியிலுள்ள ஸ்தூபம். அழகான வேலைப்பாடுள்ள தோரண வாயில்களும், மற்றுமுள்ள சிற்பக் கலை நுணுக்கங்களும் பார்ப்போர் மனதைக் கவர்வன!

2 புத்தர் ஞான ஒளி பெற்ற பிறகு முதன் முதலாக உபதேசிக்கும் காட்சி; சாரநாத்திலுள்ளது. ஐந்தாவது நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பம்.

3. புத்தர் நள்ளிரவில் அரண்மனை வாழ்வைத் துறந்து குதிரை மீது சென்ற காட்சியை நாகார்ஜுன மலையில் மூன்றாவது நூற்றாண்டில் இப்படிச் சிற்பமாக வடித்திருக்கின்றனர்.

4. ஏழாவது நூற்றாண்டைச் சேர்ந்த அஜந்தா சிற்பம். புத்தரின் தவத்தைக் கலைக்க முயலும் மாரன். அவன் முயற்சி பலிக்கவில்லை.

5. இன்றைய பிரபல சைத்திரிகரான நந்தலால் போஸின் சித்திரம்.

6. பதினோராவது நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பம். நாளந்தாவில் உள்ளது. பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி.




4



5



6



முன் இருந்ததை விட மேலானது
Orient
அமைதியாகச் சுற்றும் திடமான
விசிறி
கவின் பாணி
மேன்மையான ஸ்டவ் இனமல் பூச்சு
அதிகமாக காற்று தரக்கூடியது
வலிமையான தயாரிப்பு
OF 5/56

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

28

பௌத்த தர்மத்தைப் பின்பற்றிய டாக்டர் பாவ்ரி அவர்கள் அபட்டாபாத் என்ற ஊரில் காந்திஜியைச் சந்தித்தார். "பிரார்த்தனையினால் கடவுளுடைய சிந்தனையை மாற்ற முடியுமா? அல்லது அறிய முடியுமா?" என்று கேட்டார்.

காந்திஜி சொன்னதாவது: "நான் பிரார்த்தனை செய்யும்போது இன்னதைச் செய்கிறேன் என்று என்னால் முற்றிலும் விளக்க முடியாது. ஆயினும் உங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லப் பார்க்கிறேன். தெய்வ சங்கல்பத்தை மாற்ற முடியாது. ஆனால் கடவுள் உயிர் கொண்ட ஒவ்வொரு பிராணியின் உள்ளத்திலும் ஜடப் பொருளிலுமே இருக்கிறான். என் இதயத்துக்குள் துயிலும் தெய்வத்தைப் பிரார்த்தனையினால் எழுப்ப முயல்கிறேன். அந்தத் திருப்பள்ளி எழுச்சிக்குத்தான் பிரார்த்தனை என்று பெயர். மேதையினால் அடையும் அறிவுக்கும் உண்மை உணர்வுக்கும் பேதம் உண்டல்லவா? என்னுள் கடவுள் இருப்பதை மேதையினால் மட்டும் அறிந்தால் போதாது. அந்த அறிவு பக்தி நிலையை அடைவதற்காகப் பிரார்த்தனை வேண்டும். நான் இந்தியாவுக்கு விடுதலை விரும்புகிறேன். அந்த விருப்பம் பூர்த்தியாவதற்கும் அந்த முயற்சியில் ஈடுபட எனக்குச் சக்தி உண்டாவதற்கும் நான் பிரார்த்தனை செய்கிறேன். பிரார்த்தனையினால் என் உள்ளத்தில் நிறைவேற வேண்டிய பள்ளி எழுச்சி நிறைவேறும் என்று நான் நம்புகிறேன். நான் அடைய வேண்டிய சக்தியை என்னுடைய பிரார்த்தனையினால் அடைவேன் என்பது என்னுடைய நிச்சயம்."

இதைக் கேட்டுப் பாவ்ரி சொன்னார்: "அப்படியானால் நீங்கள் செய்வது பிரார்த்தனை அல்ல. விண்ணப்பத்துக்குத்தானே பிரார்த்தனை என்று பெயர்? விண்ணப்பம் இல்லாவிடில் பிரார்த்தனை ஏது?"

"ஆம்" என்றார் காந்திஜி. "விண்ணப்பந்தான் செய்கிறேன். நான் செய்யும் விண்ணப்பம் என்னுடைய உள்ளத்துக்குச் சொல்கிறேன். தாழ்ச்சி பெற வேண்டாம், உயர்ந்து நில் என்று விண்ணப்பிக்கிறேன். உன்னை நீ முழுதும் அறிந்து கொள்ளவில்லை என்று என் உள்ளத்துக்குச் சொல்கிறேன். அனைத்தும் அடங்கி நிற்கும் பரம் பொருளில் கலந்து ஒன்றிப் போக இடைவிடாமல் முயல்வதே பிரார்த்தனை!"

"அம்முறையில் பிரார்த்தனை செய்ய முடியாதவர்கள் என்ன செய்வது?" என்று கேட்டார் பாவ்ரியார்.

"அடக்கம் கொள்வாய் என்பேன். பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை என்று எண்ணுகிறவர்களை அடக்கம் இல்லாதவர்கள் என்று சொல்லுவேன். புத்த பகவானே பிரார்த்தனை செய்தார் என்று நான் சொல்லுவேன். அடக்கத்துடன் அவரும் பிரார்த்தனை செய்தபடியினால் கோடிக்கணக்கான மக்களை அவர் ஆட்கொள்ள முடிந்தது. மேதைக்கும் அதனால் அடையும் அறிவுக்கும் மேம்பட்டது ஒன்றுண்டு. அதுதான் மக்களை ஆட்கொள்ளுகிறது. ஆஸ்திகர் அல்லாத சந்தேகவாதிகளையும் அதுதான் ஆட்கொள்கிறது. வாழ்க்கையில் சங்கடம் ஏற்பட்ட பொழுது தத்துவார்த்தமும் சந்தேகமும் பயன்படுவதில்லை. சங்கடத்தில் அலையும் உள்ளத்துக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டும். என்னிடம் யாரேனும் வாதம் செய்தால் நான் அவர்களுக்கு இதைத்தான் சொல்லுவேன்: உன்னுடைய சிறுமையை நீ

உணர வேண்டும். அப்படி உணர்ந்து அடக்கம் பெற்றால், கடவுள் எதற்கு, பிரார்த்தனை எதற்காக என்பதை அறிவாய். உன்னுடைய மேதை மிகப் பெரிதாயினும், இந்தப் பிரபஞ்சத்தில் அது எம்மட்டாகும்? உன்னுடைய அறிவு உன்னுடைய உள்ளத்துக்குக் கூடத் திருப்தி தராது. செல்வத்தினாலும் அன்பினாலும் பெறக்கூடிய சம்பத்து அனைத்தும் வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் சற்றும் உதவாமல் போகிறது. அப்போதுதான் ஆண்டவனுடைய ஒளியில் ஒரு சிறிது துணையின் வழியாக நம்மை அடைகிறது. நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்துக்கும் நாயகனை அவனுடைய தரிசனம் ஓரளவு பெறுகிறோம். அந்த தரிசனமே நான் பிரார்த்தனை என்பது. பாவ்ரி, அதைத் தான் நாங்கள் உள்ளத்து அனுபவம் என்கிறோம். அறிவைவிட அது சிறந்தது. என் வாழ்க்கையில் இரண்டு தடவை நான் அதை அடைந்ததுண்டு. ஆனால் அந்த அனுபவம் மறைந்து போயிற்று. இறந்து விட்டேன். புத்தர் சொல்லியிருக்கும் இரண்டு வாக்கியங்கள் எனக்கு ஆறுதல் தருகின்றன. 'துக்கத்துக்குக் காரணம் ஆசையும் ஆவலுமே' என்றார். மற்றொன்று 'ஏதும் நிலையில்லை. நினைவில் வையுங்கள்' என்றார். இந்த இரண்டு கருத்துக்களையும் தியானித்தால் அது ஆஸ்திகமே யாகும் அல்லவா?''

காந்திஜி: அதுவே பிரார்த்தனை என்று முடித்தார்.

[ஹரிஜன் 19—8—39]

சுஜாதா

பிரமதத்தன் காசியை ஆண்ட காலத்தில் செல்வம் கொழிக்கும் குடும்ப மொன்றில் தோன்றினார் அவர். ஸுஜாதா என்று அவருக்குப் பெயரிட்டனர் பெற்றோர்.

ஒரு நாள் அவர் பாட்டனார் நோய்வாய்ப்பட்டு மடிந்தார். ஸுஜாதாவின் தகப்பனார் எல்லையற்ற வருத்தமடைந்தார். தம் தகப்பனாரைப் புதைத்த இடத்துக்குச் சென்று அவரது எலும்புகளைத் தேடி எடுத்து வந்தார் அவர். அவற்றைத் தம் வீட்டின் அருகாமையில் ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்ததுடன் தினம் மூன்று தடவைகள் அந்த இடத்துக்குச் சென்று தகப்பனை நினைத்து அழுது கண்ணீர் விட்டு வந்தார், ஸுஜாதாவின் தகப்பனார். அப்படியும் அவர் துயரம் தீரவில்லை. நாளடைவில் உணவைக்கூடப் புறக்கணித்து விட்டார் அவர்.

தம் தகப்பனின் அறியாமைக்காக வருந்திய போதிஸத்துவர், அவர் துயரைப் போக்குவதற்கான வழியைப் பற்றிச் சிந்திக்கலானார்.

ஒருநாள் ஸுஜாதா இறந்து கிடந்த ஓர் எருமையின் அருகில் சிறிது புல்லையும் தண்ணீரையும் வைத்துவிட்டு, 'எருமையே! இந்தப் புல்லைத் தின்று, நீரைப்பருகு!' என்று உரக்கக் கூவினார்.



இந்தக் காட்சியைக் கண்டு நகைத்த சிலர், ''உனக்கென்ன பைத்தியமா, ஸுஜாதா! செத்த எருமை எப்படி உணவருந்தும்!'' என்று வினவினர்.

ஆனால், ஸுஜாதா அவர்களுக்கு மறுமொழி ஏதும் கூறாமல் எருமையை நோக்கி, ''புல்லைத் தின்று நீரைக் குடி!'' என்று உரத்த குரலில் கூவியவண்ணம் இருந்தார்.


'இவனுக்கு மூளை சரியில்லை' என்று தீர்மானித்த அவர்கள் நேரே ஸுஜாதாவின் தகப்பனாரிடம் சென்று, விஷயத்தைக் கூறினர். தம் துயரத்தையும் தாற்காலிகமாக மறந்துவிட்டு நேரே ஸுஜாதா இருக்குமிடத்துக்கு விரைந்தார், அவர் தந்தை.

''மகனே! இறந்த பிராணி ஆகாரம் உட்கொள்ளாது என்பதுகூடவா உனக்குத் தெரியாது! என்ன அசட்டுத்தனம், இது!'' என்று வியப்பும் கடுமையும் நிறைந்த குரலில் கேட்டார் அவர்.

''ஏன், அப்பா! இந்த எருமைக்குத் தலை இல்லையா! வால் இல்லையா, வயிறு இல்லையா! இது செத்துவிட்டாலும், இதன் அவயவங்கள் ஒன்றும் அழுகிப் போய் விடவில்லையே! இதற்கு நான் உணவளித்தது மடமையென்றால் உயிரும் உடலும் முற்றும் மறைந்துவிட்ட என் பாட்டனாரை நினைந்து தாங்கள் ஏன் இன்னும் துயரப்படுகிறீர்கள்!''—சாந்தம் நிறைந்த முகத்துடன் கேட்டார் போதிஸத்துவர் ஸுஜாதா.

''ஆம், மகனே! நான் செய்தது தவறுதான். என் நெஞ்சைப் பொசுக்கிக் கொண்டிருந்த துயரக் கனலை நீ தண்ணீர் வார்த்து அணைத்து விட்டாய்! என் துயரம் நீங்கியது'' என்று மகனுக்கு நன்றி செலுத்தினார் தந்தை. (புத்தர் ஜாதகக் கதை)

—ரா. பாலகிருஷ்ணன்





'அனசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனசினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினசிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அசிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனசின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனசினையே கேட்டு வாங்குங்கள்

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.




பாலைச் சாப்பிட மிக நேர்த்தியான வழி

ப்ரௌன் அண்டு போல்ஸன்
ப்ளேவர்டு கார்ன் பிளவர்

ப்ரௌன் அண்டு போல்ஸன் ப்ளேவர்டு கார்ன் பிளவரினாலான பிளாமான்ஜ் என்ற தின்பண்டத்தை குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள். கறந்த பாலின் இயற்கை போஷாக்குச் சத்துக்களை அடைய சிரமமில்லாத வழிகளில் இது ஒன்று. ஆசையூட்டும் ஐந்து சுவைகளில் கிடைக்கின்றன :

வனில்லா, ராஸ்பெரி, காரமல், ஸ்ட்ராபெரி, மற்றும் பைன் ஆப்பிள்.





கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிட்.

பம்பாய்-1 – கல்கத்தா-1.



அத்தியாயம் 19

‘சொக்கையாவின் பயம்

ஆனந்தி

அன்று இரவில் துப்பாக்கியுடன் சென்றது சொக்கையாவாக இருக்கலா மென்று சேகருக்குத் தோன்றியது. ஆனால் ஒன்றையும் நிச்சயம் செய்து கொள்ள முடியாதவராகப் படுக்கையில் சென்று படுத்துக் கொண்டார். உடனே சேகர் நன்றாகத் தூங்கியும் விட்டார்.

காலையில் போலீஸார் வந்து கூப்பிட்டபிறகுதான் அவர் விழித்துக்கொண்டார். அவரைப் போலீஸார், ‘ஏதாவது இரவு சத்தம் கேட்டதா?’ என்றார், ‘யாராவது பக்கத்து வீட்டையோ, தம் வீட்டையோ சுற்றி வந்தார்களா?’ என்றும் பலவிதமாகக் கேள்விகள் கேட்டார்கள். தமக்கு ஒன்றும் தெரியாதென்று மறைத்து விட்டார் சேகர். வீணாக வம்பில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாதென்பது அவர் கொள்கை.

முதல் நாள் இரவு முத்துராமலிங்க பாண்டியர் இறந்து போனதாகவும், அவர்மீது பாய்ந்திருந்த தோட்டா வேட்டைத் துப்பாக்கிகளுக்கு உரியது என்றும் தெரிந்து கொண்டபோது தாம் மௌனம் சாதித்ததற்காகப் பின்னால் சேகர் மிகவும் வருந்தினார். சொக்கையா தான் அவருடைய சொத்துக்களை அடைவதற்காக அவரைக் கொலை செய்திருக்க வேண்டுமென்று நம்பினார். ஆனால் அதற்குள் காரியங்கள் வெகு தூரம் சென்றுவிட்டன. வீட்டிலிருந்த சில முக்கியமான சாமான்கள் காணமல் போய் இருந்தபடியால் யாரோ திருடர்கள் தான் அவரைக் கொன்று விட்டுச் சாமான்களைத் திருடிக் கொண்டு போய் இருக்க வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டார்கள் போலீஸார்.

சேகருக்கு எல்லாவற்றையும் விட வியப்பளித்தது என்னவென்றால் திடீரென்று பக்கத்து வீட்டிலிருந்த வால் அறுந்த நாயைக் காணாததுதான். அதைப் பற்றி யாரைக் கேட்டாலும் ஒரு விவரமும் தெரியவில்லை.

இதெல்லாம் நடந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு நான் சேகரைப் பார்க்கச் சென்றேன். சந்திரமணி அப்போது ஆஸ்பத்திரியில் கால் முறிந்து படுத்துக் கொண்டிருந்தாள். சர்க்கஸில் நான் சேர்ந்த புதிதிலிருந்து சேகர் எனக்கு நண்பன். சந்திரமணியைக் குணப் படுத்துவதற்குப் பணம் வேண்டியிருந்தது. அவன் மூலம் சந்திரமணியின் நகைகளை விற்கலாம் என்பதற்காகவும், அவனிடமே கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்றும் எண்ணி அங்கு சென்றேன். ஒருநாள் அவனுடன் தங்கியிருந்தபோது என்னுடைய கஷ்டங்களையெல்லாம் அவனிடம் கூறினேன். அவனும் தன்னைப் பற்றிக் கூறினான். போட்டோ ஆல்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது வாலறுந்த நாயின் படத்தைப் பார்த்தேன். பக்கத்து வீட்டிலிருந்த நாய் அது வென்றும்,

அந்த வீட்டு எஜமானர் இறந்துபோனதற்கு முதல் தினத்திலிருந்து அதைக் காணவில்லை என்றும் சேகர் என்னிடம் கூறினான். அதைப் பற்றிய விஷயங்களை நான் என் கவலையில் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. சொக்கையாவிடம் அதைப் பார்த்த பிறகுதான் ஞாபகம் வந்தது. உடனே சேகரை வரவழைத்தேன். அவனிட மிருந்து மேலே சொன்ன முழு விவரங்களையும் தெரிந்து கொண்டேன்.

நான் கலாட்டா வழக்கிலும் தண்டனை அடைந்து சிறையிலிருந்த போது ஒரு புரட்சிக்காரரை அங்கே பிடித்துப் போட்டிருந்தார்கள். பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்ததாக அவர் மீது குற்றம் சுமத்தி யிருந்தார்கள்.



அவருடைய பெயர் வீரமுத்து. நோயி னால் மிகவும் மெலிந்தவர். உடல் வலி மையே கிடையாது. ஆனால் உள்ளத்தில் ஒரே வீர உணர்ச்சிதான். அவரை அச் சிறை அதிகாரிகள் கொடூரமாக நடத்தி னார்கள். அநாவசியமாக அடித்தார்கள். அதிக வேலை கொடுத்தார்கள். நான் தான் நண்பனுக்கு நண்பனாயிற்றே. அவர் என்னிடம் பிரியமாக இருந்தபடி யால் ஒருநாள் சிறையதிகாரி அவரைச் சாட்டையால் அடித்தபோது குறுக்கே விழுந்து அந்த அடியை நான் வாங்கிக் கொண்டேன். அதன் பயனுகத்தான் எனக்குத் தண்டனை நீடித்தது.

நாங்கள் சிறையிலிருந்தபோது அவர் தம்முடைய வீரம் ததும்பும் பேச்சால் பணக்காரர்களும், ஜமீன்தார்களும் என் வாறு ஏழை மக்களின் ரத்தத்தை உறிஞ்சுகிறார்களென்றும், உலகத்தில் ஜனநாயக ஆட்சி ஏற்படுவதுதான் அதற்கு விமோசனம் என் றும் கூறி வந்தார். எனக் கும் சொக்கையாவின் மீது இருந்த வெறுப்பினால் அவர் கூறியதெல்லாம் உண்மை யென்று பட்டது. சகுவர மூர்த்தியும், சொக்கையா வும், சந்திரமணியின் மாமன் மார்களும் எங்களுக்கு இழைத்த கொடுமைகள் கொஞ்ச நஞ்ச மில்லை. அவற்றை யெல்லாம் எண்ணி எண்ணி அவர்கள்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று என் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது.

நான் விடுதலை யடைந்து வெளியே வந்த பிறகு, வீரமுத்துவும் சீக்கிரத் தில் தப்பி வந்து விட்டார். குங்குமத் துறையை அடுத்த மலைக்காடுகளில் தான் அவர் வசித்து வந்தார். என்னை அவர் சொக்கையாவைப் பழி வாங்க வேண்டுமென்றும், சகுவரமூர்த்தியைப் பழிவாங்க வேண்டுமென்றும் அடிக்கடி கூறித் தூண்டி விடுவார்.

அவர் மாறுவேஷத்தில் வந்து என்னை மலைச்சாரலில் சந்திப்பதுண்டு. ஒரு சமயம் நாங்கள் அவ்வாறு சந்தித்த பொழுது, ''நமது இயக்கம் நடத்தப் பணம் வேண்டியிருக்கிறது. நீ சம் பாதித்துத் தரவேண்டும்'' என்றார்.



நான் ஒப்புக் கொண்டேன். அப்போது தான் வாலறுந்த நாயைக் கண்டேன். சேகர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவன். ஆனால் அது யாருக்கும் தெரியாது.

நாங்கள் இருவரும் சொக்கையாவிடம் சென்று அவர் செய்த பாதகத்தை வெளியிட்டு விடுவோமென்று பயமுறுத்தினோம். சேகர் தன்னிடம் அவர் வேட்டைத் துப்பாக்கியுடன் இருக்கும் புகைப் படம் இருப்பதையும், அவர் குற்றவாளி என்று தான் நிரூபிக்க முடியும் என்றும் கூறிப் பயமுறுத்தினான்.

சொக்கையா கொஞ்சம் கலங்கிப் போனார். நான் பிறகு, "எனக்கு நீங்கள் செய்த இன்னொரு காரியமும் தெரியும். என் மீது நீங்கள் குற்றம் சுமத்தப் பார்க்கிறீர்களா! ஜமீன்தா



ரைக் கொன்றது நீங்கள் தான் என்பதையும் என்னால் நிரூபிக்க முடியும். மூன்று வருஷங்களுக்கு முன்னால் நீங்கள் வேட்டைத் துப்பாக்கியால்தான் முத்துராமலிங்க பாண்டியரைக் கொலை செய்தீர்கள். ஜமீன்தாரும் வேட்டைத் துப்பாக்கியாலேயே இறந்திருக்கிறார். ஜமீன்தார் இறந்த சமயத்தில் நீங்கள் வீட்டில் இல்லை. ஸ்நானம் செய்து விட்டு ஈர வேஷ்டியுடன் வந்தீர்களென்பது போலீஸாருக்குத் தெரியும்" என்றேன்.

சொக்கையா கலவரமாகப் பயப்படுகிறவரில்லை. ஆனால் ஏனோ தெரியவில்லை; அன்று மிகவும் பயந்தார். அதற்கு வீரமுத்து எழுதிய கடிதம்தான் காரணம் என்பதைப் பின்னால் தெரிந்து கொண்டேன். நாங்கள் சொல்வதைக் கேட்கா விட்டால் சொக்கையாவைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தி வீரமுத்து எழுதியிருந்தாராம்.

"என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்?" என்றார் சொக்கையா. அவர் முகத்தில் அசடு தட்டிற்று.

எங்கள் இயக்கத்துக்குப் பணம்தான் தேவையாக இருந்தது. பத்தாயிரம் ரூபாய் கேட்டோம். உடனே தருவதாக வாக்களித்தார். அதே மாதிரி தரவும் செய்தார். அன்று சொக்கையா தம் குதிரையைக்கூட எங்களுக்குப் பரிசாக அளித்தார். சேகரின் காமிராவை உடைத்ததற்கு நஷ்டஈடு என்று கூறினார். அந்தக் குதிரையில் நான் வீடு வந்து சேர்ந்த போது சந்திரமணியின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! என்னிடம் ஓரேயடியாகச் சண்டை போட்டாள்.

ஒரு வாரம் கழிந்த பிறகு, நான் சர்க்கஸ் கம்பெனியில் சேரப் போவதாகக் கூறிவிட்டு மலைச் சாரலில் வசித்த வீரமுத்து கோஷ்டியினருடன் போய்ச் சேர்ந்து கொண்டு புரட்சிக்காரனாகி விட்டேன். பிழைப்புக்கு வழி வேண்டுமென்று சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து பார்த்தேன். ஆனால் அது ஒத்துவரவில்லை. முடிந்தபோதெல்லாம் சந்திரமணியைப் போய்ப் பார்த்துச் சமாதானப் படுத்தி விட்டு வந்தேன்.

குங்குமத் துறையை மலையாள தேசத்திலிருந்து பிரிக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் சரிவுகளில் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. எங்கள் கட்சியினரின் தலைமை ஸ்தாபனம் அங்கேதான் இருந்தது. வீரமுத்துவின் தலைமையில் நாங்கள் எங்கள் இயக்கத்தைப் பலப்படுத்தினோம். பாலங்களை வெடிகுண்டுகளால் தகர்ப்பது, மின்சாரக் கம்பிகளை அறுப்பது, ரயில்களைக் கவிழ்ப்பது முதலிய வேலைகளைச் செய்து வந்தோம். அப்போது எனக்கிருந்த ஆவேசத்தில் நானும் இந்தக் காரியங்களில் ஊக்கத்தோடு ஈடுபட்டேன். ஆனால் இதனால் ஏழை மக்களைத் தான் துன்புறுத்துகிறேன் என்பதை அப்பொழுது நான் தெரிந்துகொள்ளவில்லை.

உண்மையில் சகவாஸார்த்தியும், பங்குதாரர்களுமாக நடத்திக் கொண்டிருந்த பாங்கில் நாங்கள் செலவுக்காகப் பணம் கொள்ளையடித்த போதுதான் என் மனம் குளிர்ந்தது. அந்தப் பாங்கின் பங்குதாரர்களில் சந்திரமணியின் மாமன்மார்கள் இருவர் இருந்தார்கள். இந்தச் சமாசாரம் எங்கள் தலைவருக்குத் தெரியு

JUPITER GENERAL INSURANCE COMPANY LIMITED

Estd. 1919

Capital Subscribed	...	...	Rs. 1,50,00,000
Capital Paid Up	...	...	Rs. 23,74,800
Total Assets	...	...	Rs. 3,50,00,000

INSURANCE OF EVERY DESCRIPTION UNDERTAKEN

Head Office: BANK STREET - BOMBAY-1

Principal Office for South India:

"JUPITER HOUSE", 167, BROADWAY, MADRAS-1

BRANCHES AND AGENCIES THROUGHOUT INDIA AND IN PAKISTAN, BURMA, CEYLON, ADEN AND AFRICA

வாழ்க்கை லக்ஷியத்தின் முக்கியமான தருணத்தில்...



ஸ்திரீகளின் வாழ்க்கையின் முக்கியமான தருணம் பிரசவ சமயமே. இச்சமயத்தில் அவர்களுக்கு ஓய்வும் ஒழுங்கான போஷாக்கும் மேலும் விஷ நோய்களின் அபாயத்திலிருந்து சரியான பாதுகாப்பும் தேவை. பிரசவ சமயத்தில் சருமத்தின் மேலோ அல்லது கர்ப்பாசய மார்க்கத்திலோ உண்டாகும் மிகச் சிறிய வெட்டுக்காயம் பிரசவ ஜுரம் மற்றும் இதர கொடிய துன்பங்களை விளைவிக்கக்கூடும் என்பதை எல்லோரையும் விட டாக்டர்களே நன்கு அறிவார்கள். அவர்களுடைய ஆலோசனையைப் பின்பற்றுங்கள். பிரசவ சமயத்தில் மிகவும் பத்திரமானதும், சிறந்த பாதுகாப்பளிக்கக்கூடிய கிருமிநாசினியான 'டெட்டாலை' உபயோகியுங்கள்.

நோய் வரும் முன்பே பாதுகாத்துக் கொள்ள—

'DETTOL'

டாக்டர்கள் உபயோகிக்கும் கிருமிநாசினி



இலவசம்

'மாடர்ன் ஹைஜீன் பார் விமென்' என்ற புத்தகத்தை இலவசமாகப் பெற அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்., இலாகா FB-4, தபால் பெட்டி நெ. 664 கல்கத்தா-1 விலாசத்திற்கு எழுதுங்கள்

D1-4 AEL 193

மாதலால் மந்திரமூர்த்தியிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட ரூபாய்கள் மூவாயிரத்தை என்னிடம் கொடுத்து விட்டு மீதியைத்தான் இயக்கத்தின் செலவுக்கு எடுத்துக் கொண்டார். அதை எடுத்துக் கொண்டு நான் குங்குமத் துறைக்குச் சென்றேன். சந்திரமணியும் மந்திர மூர்த்தியும் அதைக் கண்டு பயந்தே போனார்கள். சந்திரமணி என்னுடன் வருவேனென்று அடம் பிடித்தாள். எங்கள் மீது கண்காணிப்பு அதிகமாகி வந்தபடியால் சில நாட்கள் குங்குமத் துறைக்கே போகாமலிருப்பது நல்லது என்று நான் தீர்மானித்தேன். ஆகவே சந்திரமணியிடம் நான் மலாய் நாடு போகப் போவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

எனக்கு மாத்திரம் சந்திரமணியையும், இந்துமதியையும் விட்டுப் போக மனம் வந்ததா என்ன? எத்தனையோ தடவை இந்த இயக்கத்தில் சேராமல், குழந்தையோடும் மனைவியோடும் எங்கேயாவது சௌக்கியமாக இருந்திருக்கக் கூடாதா என்று ஏங்கியிருக்கிறேன். என் குழந்தை இந்துவைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் என் நெஞ்சம் அவளைப் பார்க்க வேண்டுமென்று துடிக்கும். ஒரு தந்தையின் கடமையை நான் சரியாக நிறைவேற்றவில்லையே என்று வருந்துவேன். சந்திரமணியும் நானுமாக அவளுடைய மொழிகளைக் கேட்டு இன்புறுவதாகவும், அவளுடைய விளையாட்டுக்களைக் கண்டு ரசிப்பதாகவும் கற்பனை செய்து கொள்வேன்.

என்னதான் எனக்கு அவர்களோடு போய் இருக்க ஆசையாக இருந்தாலும் அது சாத்தியமாகாது என்பதும் தெரிந்திருந்தது. இயக்கத்தின் வேலைகளில் நான் ரொம்ப தூரம் காலை வைத்து விட்டேன். அதிலிருந்து பின் வாங்கும் நிலையில் நான் இல்லை. மேலும் போலீஸுக்கு என்னைப் பற்றிய தகவல்கள் தெரிந்து விட்டன. என்னை இனிமேல் மனிதனாக வாழ விடமாட்டார்கள் என்பதும் புலனாகி விட்டது.

கடைசியாக நான் சந்திரமணியைப் பார்த்தபோது அவள் ரொம்ப உடம்பு சரியில்லாமலிருந்து எலும்புந் தோலுமாக ஆகியிருந்தாள். அவளைப் பார்த்தபோது நான் அனுபவித்த சித்திரவதையை விவரிக்க முடியாது. ரங்கதுரை! அவளுக்கு இழைத்த அநீதியினால்தான் இன்று நான் இப்படிப்பட்ட கொடிய துயரத்தை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது. எங்கள் அருமைப் புதல்விக்கு மரண தண்டனை விதித்திருக்கிறார்கள் என்று தெரிந்தும் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நான் இருக்கிறேன், தம்பி. வழக்கு நடந்த இடத்துக்குக் கூட என்னால் வர முடியவில்லையே!''

'' நீங்கள் அனாவசியமாக மனம் நொந்து கொள்கிறீர்கள்'' என்று ஆரம்பித்தேன்.


'' இப்பொழுது அதைப் பற்றி நாம் தர்க்கம் செய்ய வேண்டாம். கதையைத் தொடர்ந்து சொல்கிறேன்'' என்று கூறி விட்டுக் காசிலிங்கம் சற்று நேரம் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

'' அப்படியானால் ஒன்று கூறி விடுங்கள். நீங்கள் எப்படிப் 'பகத்சிங்' என்று பெயர் வைத்துக் கொண்டீர்கள்?''


'' வீர மறத்துறவுக்குத் தென்னாட்டில் 'பகத் சிங்' என்ற பெயர் பரவியிருந்தது. அவரைப் பிடித்து விட்ட பிறகு நான் கொஞ்ச நாட்கள் இயக்கத்தை நடத்தி வந்தேன். நான் தலைவனாக இருந்த படியால் எனக்கே 'பகத்

எது சரி?

அம்பாலத்திக என்ற ஊரில் பகவான் புத்தர் இருந்தபோது ஓர் அந்தணர் 'இந்த புத்தர் ஆசாரத்தை விட்டவர்' என்று குறை கூறினாராம். பகவான் புத்தரின் சீடர்கள் அந்த அந்தணரைப் பற்றி ஆத்திரத்தோடும், கோபத்தோடும் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் புத்தர் அங்கே போய்ச் சேர்ந்தார். நிலைமையைப் புரிந்து கொண்ட கௌதமர், '' சகோதரர்களே! மற்றவர்கள் என்னைப் பற்றியோ, என்னுடைய மதக் கோட்பாடுகளைப் பற்றியோ, ஸ்தாபனத்தைப் பற்றியோ நிந்தனையாகப் பேசினால்



நீங்கள் அவர்களைப் பற்றிக் கோபமோ, தாபமோ, அதிருப்தியோ அடைய வேண்டியதே இல்லை. நீங்கள் அப்படி நடந்து கொண்டீர்களானால், உங்கள் ஆத்ம வளர்ச்சி சீர்குலைந்து போகும். அத்துடன், அவர்கள் சொல்வது சரியா தவறா என்பதை தீர்மானிக்க முடியாமல்போய் விடும்!'' என்றார்.



காக்கை: கொஞ்சம் இரு. நான் கோடி வீட்டில் போய்க் கத்திவிட்டு வருகிறேன். கல்கத்தாவிலிருந்து அவர்கள் வீட்டுக்கு விருந்தாளி வருகிறார்கள்.

மற்றொரு காக்கை: அப்பவே போய்க் கத்திவிட்டு வரப் போவதாகச் சொன்னாயே, லேட்டாப் போகிறாயே?

காக்கை: கல்கத்தா மெயில் லேட்டாகத்தானே வரது. அதனாலே அப்புறம் போய்க் கத்தலாம் என்று இருந்தேன்.

சிங்' என்ற பெயரைச் சூட்டி விட்டார்கள் ஜனங்கள். நிஜ 'பகத் சிங்' தூக்கில் இடப்பட்டார்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் காசிலிங்கம்.

"ஆமாம்! நீங்கள் என் தந்தையைச் சிறையில் சந்தித்தது பற்றிக் கூறவில்லையே?'' என்று நான் கேட்டேன்.

"எத்தனையோ நாட்களுக்கு முன்னால் நடந்த சம்பவங்களல்லவா? எனக்குக் கோவையாகச் சொல்லத் தெரியவில்லை'' என்று கூறி விட்டுக் காசிலிங்கம் மேலும் தொடர்ந்தார்.

"என் அதிசயமான வாழ்க்கையில் நான் கந்தசாமியிடம் சிநேகம் செய்து கொண்டதும் ஒரு அதிசயம்தான். நான் ஒரு பாலத்தைத் தகர்த்த குற்றத்துக்காகப் பிடிக்கப்பட்டு இரண்டாவது தடவை சிறை சென்றேன். அங்கே நான் கந்தசாமியைச் சந்தித்தேன். அவருடைய வாழ்க்கையைப் பற்றி ஒரு நாள் கேட்டபோது எனக்குப் பச்சாத்தாபம் பிறந்தது. அதுவும் சகவா மூர்த்திதான் அவர் சிறையிலிருப்பதற்குக் காரணம் என்று தெரிந்ததும் கந்தசாமியிடம் பாசமே உண்டாகிவிட்டது.

கந்தசாமி அடிக்கடி தாம் செய்த தவறுகளைப்பற்றி எண்ணி வருந்துவார். 'எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனை நன்றாக வளர்க்காமல் போய்விட்டேனே. என் மகனுக்கு நான் தந்தையாகவே இல்லாமலிருந்து விட்டேனே' என்று புலம்புவார். நான் என் கதையையும், நானும் ஒரே குழந்தையை விட்டுப் பிரிந்திருப்பதையும் அவருக்குக் கூறிச் சமாதானப் படுத்துவேன்.

அவர் தாம் சிறையிலிருந்து வெளியே வந்தால் எங்களுடன் சேர்ந்து விடுவதாகக் கூறி வந்தார். பாவம்! நல்ல மனிதர். தாம் சீட்டாடியதையும், தம் மனைவியைச் சரியாக நடத்தாததையும் எண்ணி வருந்தி வருந்தி அதற்குப் பிராயச்சித்தம் செய்து விட்டார்.

ஒருநாள் எங்கள் இருவருக்குமே சிறையில் இருப்பது பொறுக்க முடியாதென்று ஆகிவிட்டது. தப்பிச் செல்ல முயற்சி செய்வதென்று தீர்மானித்தோம். அப்படித் தீர்மானித்தபிறகு இருவரும் ஒருவருக்கொருவர் பிரதிக்ஞை செய்து கொண்டோம். தப்பிச் செல்லும் முயற்சியில் யாருக்கேனும் உயிர் போய் விட்டாலோ, அல்லது திரும்பப் பிடிபட்டு விட்டாலோ, தப்பிச் செல்பவர் இன்னொருவருடைய குடும்பத்தைக் கவனித்து வேண்டிய உதவிகள் செய்ய வேண்டியது என்று பிரதிக்ஞை செய்து கொண்டோம்.

கந்தசாமி என்னிடம், 'காசிலிங்கம்! உம்மைப் போல் நான் சர்க்கஸ்காரன் அல்ல. திறமைசாலியும் அல்ல. ஆனால் நான் தப்பிச் செல்ல விரும்புவதற்கு என் மகன் ரங்கதுரையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல்தான் காரணம். அவனுக்கு நான் செய்ய வேண்டிய கடமையில் தவறிவிட்டேன். இனிமேலாவது எப்படியேனும் அவனுக்குப் படிக்க வசதிகள் செய்து தர வேண்டும் என்பது என் ஆசை. உங்களுக்கு ஒரு சிறு பெண் குழந்தை இருக்கிறாள் என்று கேட்டதும், என் மகனுக்கு அவளை மணம் முடித்து வைத்து நம் உறவை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன்' என்றார்.

நான், 'அதற்கென்ன இப்போது? என் பெண் இன்னும் பச்சைக் குழந்தை. உங்கள் மகனும் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் பெரியவர்களாகும்போது ஒருவரை ஒருவர் விரும்பினால் பேஷாகக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். நாம் குறுக்கே நிற்கப் போவதில்லை' என்றேன்.


அவர் சிரித்துவிட்டு, 'அதுவரை நாம் இருவரும் உயிரோடு இருக்க வேண்டுமே?' என்றார். பாவம்! மறுநாளே துப்பாக்கிக் குண்டுகளுக்கு அவர் இரையாக நேர்ந்தது. (தொடரும்)

ஒவ்வொரு மைலிலும் செலவை மிச்சமாக்குக

நகரத்திலும் சரி, கரடுமுரடான கிராம ரஸ்தாக்களிலும் சரி, எத்தகைய பளுவையும் ஏற்றிக் கொண்டு ஸென்–ராலே சைகிள்கள் உங்களுக்கு நீண்ட காலம் உழைத்து, செப்பனிடும் செலவையும் குறைத்து, ஒவ்வொரு மைல் ஓட்டத்திலும் மதிப்பு வாய்ந்த அளவிற்கு செலவை மிச்சமாக்குகின்றன.



ராலே ராபின்ஹுட்



THE RALEIGH

SEN-RALEIGH Products

SRX-38 TM



மெல்லிய மலர்ப் படுக்கை நொந்தது மகா மாயாவுக்கு. காற்றில் ஊசலாடும் பசிய புல்லைப் போல அவள் உடல் புரண்டு கொடுத்தது. மஞ்சத்தின் அருகே இருந்த தூங்கா விளக்கின் மங்கிய ஒளி அறையின் இருளை ஓட்டிக் கொண்டிருந்தது. மாயாவின் கையெட்டும் தொலைவில், நாவுக்கு ருசி தந்து உடலுக்கு வலுவூட்டும் தின்பண்டங்கள் அப்படியே கை படாமல் இருந்தன. பவளக்கொடியின் பழங்களைப் பழிக்கும் சிவந்த மாதுளங்கனி, இமயச் சாரலில் விளைந்த சின்னஞ்சிறு அத்தி, ராவி நதிக்கு அப்பாலிருந்து கொண்டு வந்த கறுப்புத் திராட்சை, சேர நாட்டுப் பலாவின் சுளை, இன்னும் பல கனி வர்க்கங்கள்,—எல்லாம் தங்கத் தட்டில் தொடுவாரின்றிக் கிடந்தன.

வெள்ளிக் கோப்பையிலே ஒரு புறம் பசுவின் பால்; மறுபுறம் குறிஞ்சி நிலத்தேன்; நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டு ஒரு தடவை வெறித்துப் பார்த்தாள் மாயா. மீண்டும் திரும்பிப் புரண்டு படுத்தாள் மகாமாயா. 'நல்ல கறுப்பஞ் சாற்றுடன் தேன் கலந்து பால் கலந்து திகட்டாத தீங்கனிச் சுவை கலந்தாலும் இவை எல்லாம் ஏன் நான் அன்று கண்ட கனவைப் போல் இனிப்பதில்லை! அதை மீண்டும் மீண்டும் காண எனக்கு ஏன் இவ்வளவு ஆசையாக இருக்கிறது!'' என்று மகாமாயா தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

வானத்துத் தேவர்கள் நால்வர் மாயாவின் படுக்கையைச் சுமந்து வெள்ளிப் பனி மலைக்கு எடுத்துச் சென்றார்கள். வெள்ளை யானை ஒன்று அவள் படுக்கையை மும்முறை வலம் வந்து அவளுடைய கர்ப்பத்துக்குள் புகுந்தது. இந்த அற்புதக் கனவை மீண்டும் மீண்டும் எல்லாரிடமும் மாயா சொல்லி மகிழ்ந்தாள். பகலிலும் இரவிலும் தான் கண்ட கனவின் நினைவாகவே இருந்தாள் மாயா.


அவள் கண்ட கனவின் பொருளை அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட சுத்தோதன மன்னன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். உலகம் முழுவதும் ஆட்சி செய்ய வல்ல மகன் பிறக்கப் போவதற்கான சுப சூசகத்தை அறிந்த மன்னனின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

அதோ, எதிர்காலத்தைப் பற்றிய கவலை சிறிதும் இல்லாமல் அவர் எத்தனை ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார். காலதேவனின் தூரிகைகள் அவர் வதனத்தில் தீட்டியிருக்கும் ரேகைகள் தாம் எவ்வளவு மாறுதலைச் செய்து விட்டன. எனினும் கரிய மேகங்களிடையே உலவும் பூரண நிலவைப் போலவே, துயரக் கீற்றுக்களிடையே அவர் முகம் அமைதியாக இருந்தது.

பல ஆண்டுகளாக விரும்பித் தவம்கிடந்ததன் பயனாக, விரைவில் இளவரசைப் பெறப்போகும் எந்த மன்னனுக்குத்தான் இரவில் நிம்மதியாகத் தூக்கம் வராமல் இருக்கும்! தனக்குப் பிறக்கப் போகும் புதல்வன் எத்தகையவனாக இருப்பான் என்பதைச் சக்கரவர்த்தி சுத்தோதனன் எவ்வளவு அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறான்!

'உமது புதல்வன் உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளப் போகிறான்' என்று அறிஞர்கள் சொன்னதை எண்ணி எண்ணி மன்னன் இன்புற்ற நாட்கள் பல. ஆனால்...... ஆனால்!......அவர்கள்......அந்த அறுபத்து நான்கு பேர்களும் மற்றொன்றையும் தானே சொல்லி விட்டுச் சென்றார்கள்.

'......அல்லது உமது புதல்வன் உலகம் முழுவதும் அறிவு ஒளி பரப்பும் ஞானச் சுட



ஏன் அழுதார்?

விசாகன்

ராக விளங்கப் போகிறான்'—மிகவும் கசப்பான தீர்க்க தரிசனம். இதை நினைத்த பொழுதே மன்னனின் உடல் நடுங்கியது; தலை சுற்றியது.

'நாட்டையும் நகரத்தையும் துறந்து துவராடை அணிந்து என் அருமை மகன் தெருத் தெருவாகப் பிட்சைக்கு அலைவதா!'—அதற்கு மேல் சுத்தோதனனின் சிந்தனை ஓடவே இல்லை.

'முடியாது. என் மகன் காட்டிலே திரிந்து துறவியாவதை என்னால் அனுமதிக்க முடியாது' என்று மன்னன் தனக்குத்தானே பலதடவைகள் தைரியம் சொல்லிக் கொள்ளலானான்.

இதோ, மன்னன் சுத்தோதனன் கனவில் கூட 'முடியாது, ஒருகாலும் முடியாது' என்று முணுமுணுத்துக் கொண்டு புரள்கிறான்.

பிறக்கும் மகன் பரதேசியாகிவிடக் கூடாதே என்ற கவலை பகலிலும் இரவிலும் மன்னனை மிகவும் வாட்டிற்று.

பத்துத் தினங்களாகியும் பாலகன் பிறக்கவில்லையே என்ற வேதனை மகாமாயாவை வருத்திக் கொண்டிருந்தது.

★

விடிந்தது. மலர்களின் மலர்ச்சியும் பறவைகளின் எழுச்சியும் அதிகாலை நேரத்தை ரம்மியமாக்கின. முன்னிரவு முழுவதும் உறக்கம் இல்லாமையால் சற்றுத் தாமதித்து எழுந்தாள் மகா மாயா. மன்னரை உடனே பார்க்க வேண்டும் என்று மாயா பணிப் பெண்ணிடம் தெரிவித்தாள்.

என்றும் இல்லாதபடி, மகாமாயா தன்னை அதிகாலையில் அழைப்பதைக் கேட்டு, நெஞ்சு துடிக்க விரைந்து அந்தப்புரத்துக்கு வந்தான் சுத்தோதனன்.

"எனக்கு அரண்மனை வாழ்வு கசந்து விட்டது. போக வஸ்துக்களைக் கண்டாலே மனம் வெதும்புகிறது; என்னவோ வேதனை செய்கிறது. வேறு எங்கேயாவது சில நாட்கள் தங்கிக் கழிக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்" என்று மகாமாயா மெல்லத் தன் கருத்தைத் தெரிவித்தாள்.

'பலகாலம் தொடர்ந்து வாழ்ந்து, எல்லா வசதிகளும் உள்ள அரண்மனையை அவள் வெறுப்பானேன்! ஒரு வேளை உலக இன்பங்களை வெறுத்து ஒதுங்கித் துறவியாகி, உலகெங்கும் ஞான ஒளி பரப்பக்கூடிய குழந்தையின் தீவிர வைராக்கியத்தைத்தான், மாயா சொல்லாமல் சொல்லுகிறாளோ'—இப்படி ஒரு கணம் சிந்தனையில் மூழ்கி நின்று விட்டான் மன்னன் சுத்தோதனன்.

"ஏன், அப்படித் தயங்கி விட்டீர்கள்! பூரண கர்ப்பிணிகள் தங்கள் பிறந்தகம் செல்ல எண்ணுவது இயல்புதானே! என் தந்தை வாழும் தேவதஹா நகரத்துக்குச் சில நாள் என்னை அனுப்பி வைப்பதில் தங்களுக்கு என்ன தடை!" என்று மீண்டும் மாயா வேண்டிக் கொண்டாள்.

சுத்தோதனனின் மனத்தை ஒரு விநாடி ஊடுருவிச் சென்ற பீதியும் கவலையும் மாயாவின் தெளிவான சொல்லைக் கேட்டு மறைந்து ஒடுங்கி விட்டன.

மகாமாயாவின் ஆவலை உடனே நிறைவேற்றக் கட்டளையிட்டு விட்டு நிம்மதியாகச் சென்றான் மன்னன்.

★

கபிலவாஸ்து நகரத்திலிருந்து தேவதஹாவுக்குச் செல்லும் ராஜபாட்டை எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; பல வண்ணக் கொடிகள் வழியெங்கும் பறந்தன; மகாராணி மாயாதேவி தங்கி இளைப்பாறிச் செல்வதற்காக அங்கங்கே அலங்காரப் பந்தல்கள் அமைந்திருந்தன. பாட்டை நெடுக வாசனை கலந்த தண்புனல் தெளித்திருந்ததால் புழுதி அடங்கியிருந்தது. நறுமணம் காற்றில் கமழ்ந்தது. வாழையும் கமுகும் வழி முழுவதும் பசுமையான தோற்றத்தை அளித்தன.

அற்புதமான தங்கப் பல்லக்கில் மகாமாயா பணிப்பெண்கள் பின்தொடரத் தந்தையின் நகருக்குப் புறப்பட்டாள். ராஜபாட்டையின் இருமருங்கிலும் குழுமியிருந்த மக்களின் புன்னகை தவழும் முகங்களையும் கண்ணுக்கினிய வயல்களையும் பார்த்தவண்ணம் அலுங்காமல் குலுங்காமல் மகாமாயா பல்லக்கில் போய்க் கொண்டிருந்தாள்.

மகாமாயா செல்லும் வழியிலே லும்பினி வனம் என்னும் வனப்பு மிக்க தோட்டம் குறுக்கிட்டது. கபிலவாஸ்து, தேவதஹா இரு நகரத்து மக்களும் அடிக்கடி அங்கே வந்து இளைப்பாறிச் செல்லுவது வழக்கம். கனிந்த பழங்கள் தொங்கும் பசு மரங்கள், காற்றில் ஊசலாடிச் சாமரம் வீசும் மலர்க் கொடிகள், அன்னங்கள் பேடையோடு உல்லாசமாக நீந்தும் பொய்கைகள், வானுற ஓங்கி நிற்கும் சால மரங்கள், கொடிகளாலும் மலர்களாலும் போர்த்திய தண்மை மிக்க தழை வீடுகள்—இத்தனை எழில் நிறைந்த லும்பினி வனத்தைக் காதலர்களும் புதுமணத் தம்பதிகளும் நாடிச் செல்லுவதில் என்ன வியப்பு இருக்கிறது!

இனிய குரலெடுத்துக் கூவும் பறவைகளின் கானம், மலர்களில் உள்ள மகரந்தத்தையும் தேனையும் தேடிச் செல்லும் வண்டினங்களின் கீதம், தென்றலில் நீரோடையின் சலசல வென்ற ஒலி— இவை யாவும் பல்லக்கில்சென்று கொண்டிருந்த மகா மாயாவின் உள்ளத்துக்கு



இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது

பாமாலிவ்

டால்கம் டீ-லக்ஸ்



நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின் சகலகுணங்களுடன், ஒரு புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது! வெறியூட்டும் 17 ஸென்டுகளின் அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும் ... மணிக் கணக்காக உங்களுக்குக் குளுமை யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!



அன்னையில் சுத்தமும் சௌகர்யமும்



குழந்தைக்கு இதம் அளிக்க அதைத் தாராளமாகப் பூசுங்கள்




எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்



சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச்சியும் அளிக்க

பாமாலிவ்

டால்கம் டீ—லக்ஸ்



உலகை ஊட்டி விட்டன. எனவே சிறிது நேரமாவது லும்பினி வனத்தில் தங்கிக் களிப்பாற விரும்பினாள் மாயா.

எனவே பல்லக்கும் பணிப் பெண்களும் லும்பினி வனத்தருகே தங்க ஏற்பாடு செய்தார்கள். உற்ற தோழிகள் சூழ இயற்கை கொலுவீற்றிருக்கும் நந்தவனத்தைச் சுற்றி வரத் தொடங்கினாள். சிறிது நேரம் கழிந்தது. நெடிதுயர்ந்த சாலமரத்தின் கீழே மாயா வந்து நின்றாள். அவள் வந்து நின்றதும், கொத்துக் கொத்தாகப் பூத்து நின்ற மலர்கள் - மாயாவின் மெல்லிய உடலின் மேலே, பொல பொல வென்று உதிர்ந்தன. மரத்தின் கிளைகளில் பெடையோடு குலாவிய பறவை இனங்கள் தம் சின்னஞ் சிறு இறக்கைகளால் மாயா தேவிக்கு ஆல வட்டம் வீசின. கைக்கு எட்டியது போல இருந்த ஒரு கிளையில் உள்ள மலர்களைத் தன் கையாலேயே பறிக்க எண்ணினாள் மாயா. எனவே அவள் குதிகாலை ஊன்றி நிமிர்ந்து கிளையை வளைத்து மலரைக் கொய்தாள். அப்பொழுது வெட்பமும் தண்மையுமான இரண்டு நீரூற்றுக்கள் பூமியிலிருந்து எழுந்து அங்கே திருமஞ்சனம் செய்தன. அந்தச் சமயத்தில் தேருருளையைப் போலப் பெரிதாக மலர்ந்துத் தோன்றிய நீலத் தாமரை மலரின் மேல் மாயாவின் கருப்பையிலிருந்து குழந்தை ஒன்று விழுந்தது. 'நோவு நொம்பலம் நோக்காடு' இன்றி மாயா மகவினைப் பெற்று மகிழ்ச்சியுற்றனள்.



இக் குழந்தை பிறந்தது வைசாக சுத்த பூர்ணிமையும் விசாக நட்சத்திரமும் கூடிய வெள்ளிக் கிழமை. மாயா குழந்தையைப் பெற்றெடுத்ததும் வானவர் மலர்மழை பொழிந்தனர்; முகிலின் சிறு சின்னமும் தெரியாத வகையில் வானம் தூய்மையாக இருந்தது. தீயவைக்குத் தலைவனான மாரன் என்னும் தேவனைத் தவிர உலகம் முழுவதும் மகிழ்ந்தது.

★

லும்பினி வனத்தில் குழந்தை பிறந்தது கேட்டுச் சுத்தோதனன் அங்கே விரைந்து வந்தான். தன் தவம் பலித்தது என்று எண்ணி அன்பு மிகுதியால் குழந்தையை இரு கைகளாலும் வாரி எடுத்து அணைத்துக் கொண்டான். அடங்கா மகிழ்ச்சியுடன் குழந்தையையும் மாயாவையும் அழைத்துக் கொண்டு, கபில வாஸ்து அடைந்தான்.

இந்தச் செய்தி கேட்டு மக்களின் குதூகலம் கரை கடந்தது. வீதிதோறும் தோரணம் நாட்டினர்; வீடுதோறும் கோலமிட்டனர்; வாயிலெங்கும் குலை வாழை கட்டினர். எங்கும் மக்கள் விழாக் கொண்டாடினார்கள். எந்த வீட்டிலும் சோகத்தைக் காணவில்லை. கேளிக்கையும் களிப்பும் எங்கும் நிலவின.

சித்திரச் சேலை நிலுககளும் செம்பொற் சரிகையும் ஏந்திப் பல வணிகர்கள் குழந்தையைப் பார்க்க வந்தனர். இன்னும் சிலர் காட்டில் கிடைத்த கஸ்தூரியையும் மஞ்சளையும் கொண்டு வந்தனர். நகரத்தில் இருந்த ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைத்த அருமையான பொருளைப் பரிசாக எடுத்து வந்து குழந்தைக்குச் சமர்ப்பித்தார்கள்.

குழந்தையைக் கண்டவர்கள் எல்லோரும் அதன் தெய்விக ஒளியைக் கண்டு வியந்தனர். அங்க அடையாளங்களைக் கவனித்து, 'இவன் எதிர் காலத்தில் பெரிய ஞானியாக விளங்குவான்' என்றனர் சிலர். உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளும் தகுதி வாய்ந்தவன் என்றனர் சிலர்.

குழந்தை துறவியாகி விடுவான் என்று யாராவது சொன்ன உடனே மன்னன் நெஞ்சு துணுக்குறும். அருமை மகன் உலகைத் துறந்து விடுவானோ என்று மன்னன் நினைந்து உருகுவான். உலகாளப் பிறந்தவன் என்னும் சொல்லைக் கேட்கும்பொழுது அவன் மற்றதை மறந்து பெருமை கொள்வான். புதல்வனை உலகத் துன்பம் தெரியாதவகையில் வளர்க்க வேண்டும் என்று சுத்தோதனன் உறுதிகொண்டு விட்டான்.

★

கபிலவாஸ்து நகரத்தில் நடந்த கோலாகல விழாவைப் பற்றிய சமாசாரம் இமயமலைச் சாரலில் தவம் புரிந்த அசித முனிவருக்குத் தெரிந்தது. சில தினங்களுக்கு முன்புதான் அவர் வானத்தில் நிகழ்ந்த சில அற்புதங்களைக் கண்டிருக்கிறார். 'எங்கோ ஓரிடத்தில் ஒரு மகான் பிறந்திருக்கிறார். சத்தியத்தைக் காண வேண்டும் என்று பல ஆண்டுகள் தவம் கிடந்தும் பயன் காணாமல் என் வாழ்நாள் கழிந்து விட்டது. வயதும் எண்பதுக்கு மேலாகி விட்டது. ஞானத்தை இப் பிறவியிலேயே அடைய முடியவில்லை. ஒரு வேளை கபிலவாஸ்துவில் சமீபத்தில் பிறந்த குழந்தை உலகை உய்விக்க வந்த ஞானமூர்த்தியாக இருக்கலாம். எதற்கும் அந்தக் குழந்தையைப் பார்த்து வரலாம்' என்று அசிதமுனிவர் எண்ணிக் கபிலவாஸ்துவுக்கு வந்து சேர்ந்தார்.

அசிதரின் வரவை அறிந்து மன்னன் அவரை எதிர் கொண்டழைத்தான். உயர்ந்த ஆசனம் அளித்து மரியாதை செய்தான். சுத்தோதனரின் பணிவைக் கண்டு அசிதர் மகிழ்ந்தார்.

'' உனக்குக் குழந்தை பிறந்தது தெரிந்து காண வந்தேன் '' என்றார் அசிதர் ஆவலுடன்.

மாயை, குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு வந்து முனிவரிடம் தந்தாள்.

'' ஆஹா! குழந்தையின் உடலில் உள்ள மச்சங்களும் அடையாளங்களும் சக்கரவர்த்திக்கு உரியனவாக இருக்கின்றனவே. இவன் நகரத்திலேயே இருந்தால் நிச்சயம் உலகையே

ஆளும் திறமையும் கலன்களும் இவனே வந்தடையும்'' என்று அசித முனிவர் குழந்தையைப் பார்த்த உடனே சொல்லி மிகவும் ஆச்சரியப்பட்டார்.

சுத்தோதனனின் காதில் அந்த வார்த்தைகள் அமுதம் போலப்பட்டன.

''நிச்சயமாகவா!'' என்று சுத்தோதனன் இரண்டாம் தடவை முனிவரைக் கேட்டான். அவனுக்குச் சொல்லி முடியாத மகிழ்ச்சி.

''ஆம்! இதோ இந்தக் குழந்தையின் பாதத்தில் ஸஹஸ்ரார சக்ர ரேகை இருக்கிறது. இக் குழந்தை நகரத்தைத் துறந்து காட்டுக்குச் சென்றால் உலகம் புகழும் ஞானியாகவும் கூடும். நிச்சயமாகப் பரிபூர்ண புத்தர்களுக்கு உரிய அங்க அடையாளங்கள் குழந்தையிடம் உள்ளன. ஆயிர வாரத்து ஆழியனாக இவன் இருக்கிறான். பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் கருமலரைப் போன்றது இந்தக் குழந்தை. இதைப் பெற்றெடுத்த நீங்கள் பாக்கியசாலிகள்'' என்றார் அசிதர்.

மன்னரின் மனம் உவகையால் நிரம்பியதா, துயரத்தால் சூழ்ந்ததா என்று யாராலும் சொல்ல முடியவில்லை.

அடுத்தகணம் அசிதர் விம்மி விம்மி அழுதார். மன்னன் அதைக் கண்டு பிரமித்தான்.

''ஸ்வாமி! ஆச்சரியமான இந்தக் குழந்தைக்கு ஏதாவது துரதிர்ஷ்டம் இருக்கிறதா!'' என்று மிகுந்த வருத்தத்தோடு கேட்டான் சுத்தோதன மன்னன்.

''அப்பா, குழந்தைக்கு ஒரு துரதிர்ஷ்டமும் வராது. என் துரதிர்ஷ்டத்தை எண்ணியே நான் அழுகிறேன். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்!'' என்றார் முனிவர்.

''ஸ்வாமி! நாமெல்லாம் குழந்தையின் பிறப்பையொட்டி விழாக் கொண்டாட நீங்கள் மட்டும் புலம்புவானேன்!''

''சுத்தோதனா! எனக்கு இப்பொழுதே வயது எண்பது கடந்து விட்டது. இந்த ஞானக் குழந்தை உரிய வயது அடைந்ததும் புத்தராகப் போகிறான். உலகம் முழுவதும் புத்தரின் உபதேசங்களைக்கேட்டு அறவழியை உணர்ந்து நிர்வாண பதவியை அடையப் போகின்றன. இந்த ஞான முத்தின் ஒளியால் உலகத்தில் உள்ள துன்ப இருள் ஒழிந்து போய்விடப் போகிறது. அந்த அதிசயத்தைக் காண, அறவுரையைக் கேட்டு உய்ய, எனக்கு அதிர்ஷ்டம் இல்லையே என்று எண்ணி அழுதேன்'' என்று உருக்கமாகப் பேசினார் அசிதர்.

உலகம் போற்றும் குழந்தைக்குத் தகப்பனாக இருக்கும் பாக்கியம் பெற்றோமே என்று சுத்தோதனன் அகமகிழ்ந்தான். அவன் அன்புடன் அளித்த விலையுயர்ந்த பரிசில்கள் எதையும் தொடாமலேயே கோலூன்றி மெல்ல மெல்ல அடி எடுத்து அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டுச் சென்றார் அசிதர். தாமரை இலையின் மீது விழும் நீர்த் துளியை நினைவூட்டின, அசிதரின் கண்களில் துளித்திருந்த நீர்த்திவலைகள்.

போதிதர்மர்

பகவான் புத்தரின் 2500வது ஜயந்தி விழாவைக் கொண்டாடப்படும் இந் நாளில் தமிழர்கள் யாருக்குமில்லாத வகையில் பெருமையும் குதூகலமும் கொள்ளக்கூடிய ஓர் சரித்திர நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறோம்.



பாரதத்தில் தோன்றிய புத்த தருமம் கடல் கடந்து சீனா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்றது என்றால் அதில் தமிழர்களுக்குத் தனிப் பங்குண்டு.

கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்திலே சீனத்தில் புத்த தருமம் பரவத் தொடங்கி விட்டது. ஆனால் அந்த புத்த மதத்திலே தியான முறையைப் பரப்பியவர் தமிழ் அரச குலத்தில் தோன்றிய போதி தர்மர். காஞ்சியில் கி. பி. 500ல் ஆண்டு வந்த மன்னனுக்கு மூன்றாவது குமாரராகத் தோன்றியவர் போதி தர்மர். அவர் தம் குருவிடம் நாற்பது ஆண்டுகள் புத்த தருமத்தில் பயிற்சி பெற்று, கி. பி. 522ம் ஆண்டு சீனத்தில் அடியெடுத்து வைத்து அங்கு 'சான்' என்று வழங்கும் புத்த தருமத்தை நிலைநாட்டினார். அவர் நிலைநாட்டிய இந்த மதம் ஜப்பானிலும் பரவியது. இன்றும் அங்கு நிலவி வருகிறது.

இதோ பக்கத்திலிருக்கும் திருவுருவமே சீனர்கள் வழிபடும் போதி தர்மம். இத்தகைய உருவத்தில் போதி தர்மரைச் சீனத்தில் எங்கும் காணலாம் என்று கூறுகிறார்கள்.

இன்றையச் சிவனடியார்கள் காதுகளில் அணிந்து கொள்வது போன்ற தங்க வளையங்கள், போதி தர்மர் காதில் தொங்குவதைப் பாருங்கள்! இதைப் பார்த்த மாத்திரத்திலேயே 'இவர் காஞ்சியிலிருந்து வந்தவர் தான்' என்று 'பளீர்' எனத் தெரிகிறதல்லவா!

போதி தர்மர் தமிழ் அரச பரம்பரையில் உதித்தவர் என்றும் இன்றைக்கு ஆயிரத் தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் வடகோடியில் நேப்பாள ராஜ்யத்தில் தோன்றிய மகானின் கொள்கைகளைப் பரப்பக் கடல் கடந்து ஆயிரக்கணக்கான மைல்கள் சென்றிருக்கிறார் என்பதையும் நினைக்கும்போது மெய்சிலிர்க்காத தமிழர் யார் உண்டு!

காட்லிவர் ஆயில்

கூடிய

மால்ட் சத்து



இது ஒரு புஷ்டியளிக்கும் உணவுதான்- மருந்து அல்ல

ஏ. & டி. விடமின் சத்துக்கள் நிரம்பிய மிகநேர்த்தியான காட்லிவர் ஆயில் மற்றும் மால்ட் சத்தைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட இந்த ஐ. டி. எல். விசேஷத் தயாரிப்பில், முதிர்ந்த தானியவிதைகளில் காணப்படும் உடல் போஷாக்கு அம்சங்கள் யாவும் அடங்கியுள்ளன.

தயாரிப்பவர்கள்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிட்.,

மல்லேஸ்வரம், பெங்களூர்-3.

ஒரு ஐ. டி. எல். தயாரிப்பு


I·T·L

விற்பனை டிப்போ: 35/37, தம்பு செட்டி தெரு, சென்னை-1.

HITE-6 TM

கூந்தல் பெருகினால் விதவிதக் கொண்டைகளை ஜோடிப்பது வெகு எளிதே!

கேசவர்த்தினி





கேசவர்த்தினி கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள். இனி பொடுகைத் தலையில் சுமப்பானேன்? தலை அரிப்பை நிறுத்துங்கள். இள நரையைத் தடுங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.

மறைந்துள்ள கூந்தலழகை

கேசவர்த்தினி

கொண்டு எடுத்துக் காட்டுங்கள்

ஷாம்புவினுல் கூந்தலை சுத்தமாகவும் சுகந்தமாகவும் ஆக்குங்கள்


கேசவர்த்தினி அவுன் 14. ஷாம்பு அவுன் 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்


No. 8

காான்க்ரீட் ரஸ்தாக்கள்

எல்லாவிதமான பளுவுகளுக்கும், அலுவல்களுக்கும் ஏற்றவாறு தயாரிக்கமுடியும்.




திருவனந்தபுரம்—நாகர்கோயில் ரஸ்தா



பலாக போக்குவரத்து சாதனங்களின் தேவைகளை கான்க்ரீட் ரோடுகள் நன்கு சமாளிக்கின்றன. அவைகள் நீடித்த காலம் உறுதியாயிருக்கின்றன. பராமரிப்பு செலவும் குறைவு. கொள்முதல் செலவுகளும் மிதமானது.

ஏசிசி



கோடை கழிந்தது

சி. மா.

நீதிபதியின் வாயிலிருந்து வரப்போகும் ஒவ்வொரு வார்த்தையையும் பரபரப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர், இரு கட்சிக் காரர்களும். மண விலக்குக் கோரும் இரு கட்சிக்காரர்களையும் நீதிபதி ஒருமுறை நுணுக் கத்துடன் கவனித்தார். எவ்வளவோ பெரிய வழக்குகளையும் அனாயாசமாக முடித்துவிடும் நீதிபதியின் முகத்தில் இந்த வழக்கைப் பற்றிய ஒரு கவலை தென்பட்டது. அவர் இப்படிப் பட்ட வழக்குகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், இவருக்கு முன்னாலிருந்த நீதிபதிகளெல்லாம் சட்டப் புத்தகத்தில் என்ன கூறுகிறதோ, அதையே கட்சிக்காரர்களுக்குத் தீர்ப்பாகக் கூறுவர். ஒன்றுமட்டும் நிச்சயம். இரண்டு கட்சிக்காரர் களில் ஒருவர் வெற்றி பெறுவார்; மற்றவர் தோல்வி பெறுவார். ஆனால் இந்த நீதிபதியின் தயக்கத்திலிருந்து இவர், பழைய முறையி லிருந்து சிறிது மாறுபடுகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

அந்த இளம் தம்பதிகள் இருவரையும் பார்த்து நீதிபதி கேட்டார்: "நீங்கள் கண் டிப்பாக மணவிலக்கு செய்து கொள்ளத்தான் போகிறீர்களா!"

"ஆம்" என்று இருவரும் ஒரே குரலில் பதில் அளித்தனர்.

"இந்த இளம் வயதில் நீங்கள் பிரியவேண்டி யதின் காரணம் என்ன!" என்றார் நீதிபதி.

"ஐயா, அவருடைய மனத்தை யாரோ கலைத்து விட்டார்கள். அவருடைய அன்பும் இருதயமும் என்னிடத்தில் இல்லை. பெற்ற குழந்தையினிடத்திலும் இல்லை. அது வேறு எவர்க்கோ உரிமையாகிவிட்டது. விரும்பாத வரோடு வாழவும், அவருக்குச் சுமையாக இருக்கவும் நான் விரும்பவில்லை. எனக்கும் என் குழந்தைக்கும் அவரிடத்திலிருந்து விடுதலை வேண்டும்" என்றாள் அந்தப் பெண்.

அவள் முடித்ததும், இளைஞன் சொன்னான்: "ஐயா! அவளுடைய மனத்தை யாரோ கலைத்துவிட்டார்கள். என்னுடைய ஒவ்வொரு செயலையும் ஆராய விரும்புகிறாள். கண்ணீர் விட்டுக் கண்ணீர் விட்டு என் ஆனந்த வாழ்க் கையைக் கெடுத்துவிட்டாள். நான் என் நண்பர்களுடைய தொடர்பை விட்டு விட வேண்டுமாம். என்னோடு ஒத்து வாழாத மனைவியை விலக்கிவிடுவதால் ஏற்படும் பழியை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக் கிறேன். தயவு செய்து குழந்தையை என் னிடத்தில் ஒப்படையுங்கள்."

இந்த இரு கட்சிக்காரர்களுக்கும் சட்டப் புத்தகம் வெகு சுலபமாகத் தீர்ப்புக் கூறிவிடும். ஆனால், நீதிபதி சிறிது யோசித்த பின், "இந்த வழக்கில் உங்கள் இருவரையும் விட இந்தக் குழந்தைதான் பாதிக்கப்படும். ஆகவே, இந்த வழக்கைப் பற்றி விரிவாக ஆராய வேண்டும். கோடை விடுமுறைக்குப் பின் மீண்டும் இந்த வழக்கை எடுத்துக் கொள்வோம்" என்றார். நீதிமன்றத்தின் நடவடிக்கை முடிவடைந்தது. நீதிபதியின் மனம் மட்டும் இந்த வழக்கில், ஒரு புதுமை செய்ய வேண்டும் என்று எண்ண மிடத் தொடங்கியது.

* * *

அந்த மேல்மாடி வீட்டில் எத்தனையோ மனிதர்கள் குடியிருந்திருக்கிறார்கள். அவர்க ளெல்லாம் கீழே குடியிருக்கும் வீட்டுச் சொந் தக்காரர்களோடு அவ்வளவாகப் பழகியதில்லை. ஆனால், இந்தப் பெரியவர் குடி வந்து இரண்டு நாட்கள்தான் ஆகியிருந்தன. என்றாலும் அவ ருடைய அன்பும் அறிவுத் தெளிவான பேச்சும், படர்ந்த முகத்தில் வளர்ந்த வெண்ணிறத் தாடி யும் வீட்டுச் சொந்தக்காரர்களான அந்த இளம் தம்பதிகளையும் கவர்ந்தன. அந்தப் புது மனிதரோடு அந்தத் தம்பதிகள் தனித் தனியே வந்து அன்பாகப் பழகினார்கள்.

ஆனல் அந்தம்பதிகள் தங்களிடையே பழகும் முறைதான் விசித்திரமாயிருந்தது.

காலையில் அந்த வீட்டு வேலைக்காரச் சிறுமியோடு பேச்சுக் கொடுத்தபொழுது அவள், அந்தத் தம்பதிகளைப் பற்றிச் சொன்னதை அந்தக் கிழவர் நம்பவேயில்லை. ஏனென்றால் இவ்வளவு இளம் வயதில் மண விலக்குக் கோரி நீதிமன்றத்தில் எந்தத் தம்பதிகள்தான் நிற்பார்கள்! அதுவும் நம் நாட்டு ஆண்களும் பெண்களும் மனமொப்பாமல் மணப்பதில்லை; மணந்த பின் பிரிவதில்லை. இது உலகம் அறிந்த உண்மை. ஒருவேளை இது இந்தப் புதிய சட்டம் வந்ததனால் வந்த வினையாக இருக்குமோ!

"அம்மா கணவரோடு வாழ விரும்பாமல் ஒரு மாதத்துக்கு முன் தாய் வீடு சென்று விட்டார்கள். ஆனல் குழந்தையின் ஏக்கத்தினால் ஐயா அழையாமலே மீண்டும் திரும்பி வந்து விட்டார்கள். நீதிமன்றத்தின் முடிவு தெரியும் வரையில் குழந்தைக்காகவே அவர்கள் ஒரே வீட்டில் இருப்பதென்றும் முடிவு செய்திருக்கிறார்கள். இருவரும் ஒரே வீட்டில் பார்வைக் கெதிரேயே இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் மட்டும் பல மைல் தொலைவு இடைவெளி விட்டிருக்கிறது!" என்று வேலைக்காரச் சிறுமி சொன்னாள்.

அந்த வார்த்தைகள் கிழவரின் காதில் வெகு நேரம் வரையில் ஒலித்துக் கொண்டிருந்தன. பிறகு தம்முடைய நாட் குறிப்பு ஏட்டில் விறுவிறுவென்று ஏதோ எழுதினர்.

* *

"தங்கய்யா! உங்களுக்கு ஓவியத்தில் பழக்கமுண்டா!" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் கிழவர்.

"ஓவியத்திலா! எனக்கு அவ்வளவு பழக்கமில்லையே!" என்றான் தங்கய்யா.

"பழக்கமில்லா விட்டால் பரவாயில்லை. இந்த ஓவியத்தின் கருத்தைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்" என்று தம் கையிலிருந்த ஓவியச் சுருளைக் கொடுத்தார்.

தங்கய்யா ஓவியத்தைப் பார்த்தான்.

"இந்த அன்றில் பறவைகளின் இணையான தோற்றம் எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்றான் வியப்போடு.

பெரியவர் அதன் கருத்தை விளக்க ஆரம்பித்தார். "இதில் அழகு மட்டுமல்ல, நல்ல கருத்தும் இணைந்திருக்கிறது. இந்தப் பறவைகள் ஆணை விட்டுப் பேடும், பேடையை விட்டு ஆணும் ஒரு நாளும் பிரிவதில்லை; பிரிந்தால் வாழ்வதுமில்லை. இவைகள் மனமுறிவு தேடுவதுமில்லை" என்று கூறிவிட்டுக் கிழவர் தங்கய்யாவின் முகத்தை ஆராய்ந்தார். தங்கய்யாவின் முகம் ஒரு விநாடிக்குள் கார் காலத்து வானம்போல் கறுத்துத் தெளிந்தது. தங்கய்யா அந்த ஓவியத்தை வைத்து விட்டு அடுத்ததை எடுத்தான்.

"இந்தப் படத்தில் அழகு இல்லை. இது அவலச் சுவை ஓவியம். கருத்து உண்டு. அம்பு தைத்த ஆண் பறவை நிலத்தில் பிணமாய்க் கிடக்கிறது. பேடு, தன் இதயத்திலே ஓராயிரம் அம்புகள் பாய்ந்ததாக எண்ணி அலறுகிறது. இந்தப் பறவைகளிடமிருந்து காதலர்கள் பெறவேண்டிய படிப்பினை எவ்வளவோ உள்ளது!" என்று அவன் கையிலிருந்த படத்துக்கு வியாக்கியானம் செய்தார் பெரியவர்.

மூன்றாவது ஓவியத்தைப் பார்த்த தங்கய்யாவின் மனம் கலங்கியது. பெரியவர் சொன்னர்:

"தன் துணையை இழந்த பேடு துயரம் தாளாமல் அலறி அலறித் தன் ஆவியை நீக்கும் காட்சி. வேடுவனுடைய அம்பு ஒரு பறவையினுடைய உடலில்தான் பாய்ந்தது. ஆனல், இரண்டு பறவைகளின் உயிரும் பிரிந்தது!

"தங்கய்யா! இதேபோல்தான் கருத்துவேறுபாடு என்ற வேடுவனுடைய பொல்லாத அம்புக்கு எத்தனையோ இளங் காதலர்களின் வாழ்வு பலியாகின்றது. ஒரு கணம் இந்த அன்றிலின் ஓவியத்தைக் கண்டு மனம் உருகும் மனிதன் மறுவினாடி சொல்லம்பு கொண்டு தன் பேடின்மீதே எறிகிறான். அந்தப் பேடும் அதே அம்பைத் தன் துணையின்மீது எறிகின்றது. என்ன கொடுமையப்பா!" என்று கூறி அறையை விட்டு வெளியே வந்தார் பெரியவர். அறைக்கு வெளியே கதவின் அருகில் தங்கய்யாவின் மனைவி அன்னம் கண்ணீர் விட்டுக் கொண்டு நிற்பதைக் கண்டு விட்டார். ஆனல் கண்டும் காணாதவரைப் போல் தமது அறைக்குச் சென்று விட்டார்.

மாடிப் படிகளில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டுப் பெரியவர் எட்டிப் பார்த்தார். அன்னம்மாதான் வந்து கொண்டிருந்தாள். அவளுடைய மலர் முகம் கவலையால் வாடிக் கிடந்தது. அன்னம்மா தன் கணவரைப் பற்றிச் சொன்ன குறைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த கிழவர் சொன்னர்:



"அம்மா! தவறு அவருடையது என்றாலும் பொறுமை கொள்ள வேண்டியது உங்கள் கடமை. நீங்கள் உங்கள் கணவருக்காகப் பொறுத்தது குறைவுதான். கோவலனுக்காகக் கண்ணகி எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருந்தாள்! மணமுறிவு என்று செய்து கொண்ட பின் காதலர்கள் மீண்டும் பழைமையை மறந்து ஒன்றாய்க் கூடினாலும் அவர்களுடைய நெஞ்சக் குருவிகள் ஒன்றாய்க் கூடுவதில்லை. குருவிகள் தங்கள் இனத்திலிருந்து ஒருவன் அல்லது ஒருத்தி ஒரு விநாடி நேரம் பிரிந்து விட்டாலும் மறு விநாடி தங்கள் இனத்தோடு சேர்த்துக் கொள்வதில்லை. மண முறிவுக்ுப் பின் கூடும் காதலர் நெஞ்சமும் இப்படித்தான் அம்மா! நான் யாரோ ஒருவன். இரண்டு மாத காலம் தங்கி யிருக்க வந்தவன். உங்கள் பகையில் நான் தலையிடக் கூடாதுதான். ஆனாலும் நீங்கள் இணைபிரியாமல் அன்றில் பறவைகளைப் போல் வாழ வேண்டும் என்பது என் ஆசை! அதனால் சொல்லி விட்டேன்."

கிழவரின் இந்த அறிவுரை அன்னம்மாவின் இதயத்தில் வெகு ஆழமாகப் பதிந்து அவளைக் கசிந்துருகச் செய்தது. மறுபடியும் மாடிப் படிகளில் யாரோ ஏறிவரும் சப்தம் கேட்டது. பெரியவர் எட்டிப் பார்த்தார். தங்கய்யா வந்து கொண்டிருந்தான். வருவது தன் கணவர் என்பதை அறிந்ததும் அன்னம்மா எழுந்து பக்கத்து அறைக்குச் சென்றாள். அங்கேயே இருக்கும்படி பெரியவர் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அவள் மறுத்து விட்டாள். இருவரையும் எதிரெதிரே வைத்துக் கொண்டு பேசினால் பிணக்கு தீர்ந்துவிடும் என்று அவர் எண்ணினார். ஆனால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை.

தங்கய்யா பெரியவரிடம், "பறவைகளின் ஓவியத்தைப் பார்த்ததிலிருந்து என் மனம் கலங்கிவிட்டது. ஒரு வேலையும் ஓடவில்லை" என்று சொன்னான்.

"தம்பதிகள் மனம் ஒத்தவர்களாகி விட்டால், எல்லாம் தானாகச் சரியாகி விடும்!" என்று உபதேசம் செய்தார் கிழவர்.

"உண்மைதான். ஆனால் அன்பில்லாதவளோடு, என் உரிமையில் தலையிடுபவளோடு வாழ்ந்து பயன் என்ன! அவளிடத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைக்க வேண்டும். இந்தக் கோடை விடுமுறைக்குப் பின் கட்டாயம் விடுதலை கிடைத்து விடும்" என்று சொல்லிக் கொண்டே தங்கய்யா சென்று விட்டான்.

பெரியவருடைய உள்ளம் வெகு நேரம் வேதனையால் தவித்தது. அறையிலிருந்து அன்னம்மா கண் கலங்கிக் கொண்டே வெளியே வந்தாள். "நான் சொல்லவில்லையா, அவருடைய அன்பும் இதயமும் எவருக்கோ உரிமையாகி விட்டன என்று!" என்றாள். பெரியவர் அவள் சொல்லைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றார். பிறகு, "என் எண்ணம் தோல்வி! என் முயற்சி தோல்வி!" என்று முணுமுணுத்தார். அன்று ஆரம்பித்த முணுமுணுப்பு பெரும் தொண தொணப்பாக முடிந்தது. மூளை பிறழ்ந்து விட்டதாக முடிவுகட்டித் தங்கய்யா–அன்னம் தம்பதிகள் அவரை மருத்துவ விடுதியில் சேர்த்து விட்டனர்.

பெரியவருடைய அறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த தங்கய்யாவின் கண்களில் மேஜைமேல் நாட்குறிப்புப் புத்தகம் திறந்து கிடப்பது தெரிந்தது. 'ஒருவர் குறிப்பை இன்னொருவர் படிக்கக் கூடாது' என்பது தெரிந்திருந்தும் அவனால் மனத்தை அடக்க முடியவில்லை. நாட்குறிப்பைப் படித்ததும் அவன் தன்னை மறந்தான்.

'அன்னம், அன்னம்' என்று கூப்பிட்டுக் கொண்டே கீழே ஓடி வந்தான். அன்னத்துக்கு ஆச்சரியமாகி விட்டது. அவள் கணவர் அவளைப் பெயரிட்டு அழைத்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன! என்றைக்கும் இல்லாத அழைப்பு!...



கணவனும் மனைவியும் மாடிப் படிகளில் சந்தித்தனர். அந்தப் பார்வையில் முன்போல் வெறுப்பில்லை. ஒரு வகை ஆவல்தான் தாண்டவமாடியது. "அன்னம்! இதைப் படி" என்று நாட் குறிப்பை அன்னத்தின் கையில் கொடுத்தான் தங்கய்யா. "என் எண்ண மெல்லாம் இந்த இளம் தம்பதிகளைப் பிரியவிடக் கூடாது என்பதுதான். இவர்களுடைய பிணக்கைத் தீர்க்க எந்தச் சட்டங்களாலும் ஆகாது. சட்டம் தண்டிக்கத்தான் பயன்படும். என் கோடை விடுமுறையில், இந்தத் தம்பதிகளின் பிணக்கை எவ்வகையிலாயினும் தீர்த்து வைத்து வெற்றி கண்டால் தான் என் ஆவி அமைதியாகப் பிரியும்" என்று அதில் எழுதி யிருந்தது.

அந்தக் குறிப்பைப் படித்ததும் அன்னம்மாளின் இதயம் படபடவென்று வேகமாகத் துடித்தது.


ரின்ஸோவிலும் வெளுத்த மூர்த்தியின் சட்டையைப்
பார்க்காதவரையில், தனது சட்டைதான் வெண்மை
என்று நினைத்திருந்தான்
ஆமாம்! ரின்ஸோ அதிவெண்மையாக
வெளுக்கிறது
அற்புத சோப் பவுடராகிய ரின்ஸோ, அடித்துத் துவைக்கவும் அழுத்தித் தேய்க்கவும் அவசியமில்லாமல், வெள்ளைத் துணிகளை கண்ணைப் பறிக்கும் வெண்மையாக வெளுக்கிறது. பிரமிக்கத்தக்க முறையில் அது எல்லா அழுக்குகளையும் அகற்றுகிறது. உங்கள் வீட்டின் சகல துணிகளுக்கும், வெண்மையோ, நிறமுள்ளவையோ எல்லாவற்றிற்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்.
...இந்த அற்புத சோப் பவுடரை
உபயோகிக்கும்போது, அழுத்தித்
தேய்க்க வேண்டியதேயில்லை
Rinso
RINSO
R. 6-50 TM

"அன்னம்! நமக்காக ஒரு பெரியவர் தம் வாழ்க்கையே தியாகம் செய்து விட்டார்! நம் பிணக்கைத் தீர்க்க எண்ணிய அவர், தமது முயற்சி தோல்வியுற்று விட்டதாக எண்ணி இன்று நிலை குழம்பி மருத்துவ மனையில் இருக்கிறார்! காரணம் நாம்தானே!" என்றான்.

"ஆமாம், நாம் இருவரும் இன்று பிணக்கு நீங்கி வாழ்கிறோம் என்பதை அவர் அறிந்தால், நாம் இருவரும் ஒன்றாக அவர் முன் தோன்றினால் அவர் தன் நிலை அடையலாம் அல்லவா!" என்றாள். அவனும் அதற்குத் தலை யசைத்தான்.

இருவரும் மறுநாள் பெரியவரைக் காண்பதற்காக மருத்துவ மனைக்குச் சென்றார்கள். அவர்களைக் கண்டதும் ஒரு உருவம் வேகமாக உள்ளே ஓடி மறைந்தது. அவர்கள் அதைக் கவனிக்கவில்லை. அந்த உருவம் உள்ளே சென்று கொஞ்ச நேரத்துக்குள் ஒரு காவலாளி வெளியே வந்து அவர்களைத் தடுத்து நிறுத்தினான்: "நீங்கள் அந்தப் பெரியவரைத்தானே பார்க்கப் போகிறீர்கள்! அவர் நிலை மிகவும் கவலைக்கிடமாய் விட்டது. அவர் தலையைச் சுவரில் மோதிக் கொண்டு 'என் எண்ணம் தோல்வி; என் முயற்சி தோல்வி!' என்று தினம் அலறுவார். இன்று காலையில் சுவரில் பலமாக மோதிக் கொண்டதால் காயம் பட்டு மருத்துவஅறையில் இருக்கிறார். இப்பொழுது அவரைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள்!"

அந்த இளம் தம்பதிகள் அலறித் துடித்தனர். பெரியவரை எண்ணிக் கண்ணீர் விட்டனர். யாரையும் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது என்று காவலாளி சொல்லி விடவே தம்பதிகள் இருவரும் வீடு திரும்பினர்.

* * *

விடுமுறை கழிந்து நீதி மன்றமும் ஆரம்பமாகியது. மணவிலக்கு வழக்கும் வந்தது. அந்த வழக்கைக் கவனிக்க, இந்த வழக்கை முதலில் ஒத்திவைத்த அந்த நீதிபதியே வந்தார். நீதிமன்றம் எழுந்துநின்று அவருக்கு மரியாதை செலுத்தியது. மணவிலக்குக் கோரும் அந்த இளம் தம்பதிகள் கூண்டில் ஏறி நின்றார்கள். அந்த இளம் தம்பதிகள் முன்னொரு முறை அதே கூண்டில் நின்று சீரும் பாம்பும் போல் பார்த்த பார்வையும், இப்பொழுது அன்பாக ஒருவரை யொருவர் பார்க்கும் பார்வையும் கூடியிருந்த மக்களிடையே பரபரப்பு நிலவக் காரணமாகியது.

நீதிபதி மிக மிகத் தாழ்ந்த குரலில் கேட்டார்: "நீங்கள் மண விலக்குச் செய்து கொள்ளத்தான் போகிறீர்களா?"

"இல்லை, இல்லை" என்றனர் அந்தத் தம்பதிகள் ஏககாலத்தில். நீதிமன்றத்துக்குள் கூடியிருந்த மக்களுக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. நீதிபதி மீண்டும் கேட்டார்: "என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நாங்கள் இருவரும் பழையபடி ஒன்றாய் வாழ விரும்புகிறோம்" என்றான் அந்த இளைஞன்.

"அம்மா, உங்கள் எண்ணம் என்ன?" என்று கேட்டார் நீதிபதி.

"ஆம், அவர் எண்ணமேதான் என் எண்ணமும்" என்றாள் பெண்மணி.

நீதிபதி இளம் தம்பதிகளின் மனமாற்றத்தை வரவேற்று அவர்களுக்குச் சில அறிவுரைகளையும் கூறி, வழக்கை முடித்தார். நீதி மன்றம் மகிழ்ச்சியோடு கலைந்தது.

இளம் தம்பதிகளும் புறப்பட்டனர். ஆனால் நடு வழியிலேயே நிறுத்தப்பட்டு நீதிபதியின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நீதிபதி அந்தத் தம்பதிகளை அன்போடு வரவேற்று, "என்னை எங்காவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா! உங்களை எங்கேயோ பார்த்ததாக எனக்கு நினைவு" என்றார்.

"எங்கேயோ பார்த்து உங்களோடு பழகி இருக்கிறோம். எங்கே யென்றுதான் நினைவில்லை!" என்றான் இளைஞன்.

நீதிபதி தம் சட்டைப்பைக்குள்ளிருந்து ஒரு சிறு புகைப்படத்தை எடுத்து அந்த இளைஞனிடத்தில் கொடுத்தார். அதைப் பார்த்த இருவர் விழிகளும் வியப்பால் விரிந்தன.

அழகிய வெண்ணிறத் தாடி வளர்த்துத் தங்கள் வீட்டு மாடியில் குடியிருந்த கிழவர் அந்த நீதிபதிதான் என்பதைத் தெரிந்து கொள்ள அவர்களுக்கு நேரம் பிடிக்கவில்லை.

"இந்த ஆண்டின் கோடை நல்ல கோடை. இரண்டு உள்ளங்களின் பிணக்கை நீக்கி விட்டுக் கழிந்ததல்லவா!" என்றார் நீதிபதி அளவற்ற மகிழ்ச்சியோடு.

என்ன பயன்?

ஒரு நாள் பகவான் புத்தர் தமது வழக்கமான சுற்றுப் பிரயாணத்தைச் செய்து வந்தபோது. ஒரு இல்லறத்தான் கண்டபடி வைது விட்டான்.

பகவான் புத்தர் கோபமடையவில்லை. அன்போடு, "அப்பனே! ஒரு பிச்சைக்காரன் வருகிறான் என்று வைத்துக்கொள். அவனுக்குச் சோறுதருகிறோம். பிச்சைக்காரன் அந்தச் சோறு தனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டால், அந்தச் சோறு யாருக்கு உரிமை யாகும்?" என்று கேட்டார்.



உடனே அவர், "ஏன், சோறு போட முன் வந்த வீட்டுக்காரருக்குத் தான் உரிமையாகும்!" என்றார்.

"அப்படியானால், நீங்கள் என்னைத் திட்டிய வசவுகளை யெல்லாம் நான் அங்கீகரிக்கவில்லை யென்றால் அவையெல்லாம் உங்களைத் தானே வந்து சேரும்! இதனால் என்ன பயன், நான் ஒரு நண்பரை இழந்து விட்டேன் என்பதைத் தவிர?" என்றார் பகவான்.

லண்டனில் பாலிமொழிச் சங்கம் தோன்றி எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. மேற்படி சங்கம் பௌதத சமயத்துக்கு மகத்தான முறையில் தொண்டாற்றி வரும் விவரங்களை அதன் செயலாளர் விவரிக்கிறார்.

பிரிட்டனில் பௌத்த மதம்

ஸ்ரீமதி ஐ. பி. ஹார்னர்

சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு நாள் லண்டன் காக்ஸ்டன் ஹாலில் பேராசிரியர் மாலாலசேகர, 'அணுயுகத்தில் புத்தமதம்' என்ற பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். நூற்றுக்கணக்கான மக்கள் அச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர். இதற்குக் காரணம் என்ன! புத்தருடைய உபதேசங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக மேனாட்டாரிடம் இருப்பதுதான். நவீன வாழ்க்கையில் அலுப் புத்தட்டி, சிறிது ஓய்வை விரும்பும் போது, தியானம் சிறந்த பலன் தருவதை, மக்கள் உணரலானார்கள்.

பிரிட்டனில் பௌத்த சமயம் இடிரெனப் பரவி விடவில்லை. இந்தத் துறையில், இரண்டு ஸ்தாபனங்கள் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகின்றன. பாலி மொழிச் சங்கம் 1881-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பாலி மொழிக் கிரந்தங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கம் தருவதே இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கம். சங்க ஆராய்ச்சியாளர்கள் பௌத்த நூல்கள் பலவற்றைத் தொகுத்து மொழி பெயர்த்திருக்கிறார்கள். இது வரையில் நாற் பத்தெட்டு தொகுப்பு நூல்களும், ஐம்பத்து மூன்று விமரிசன நூல்களும், நாற்பத்தேழு மொழிபெயர்ப்புக் கிரந்தங்களும் வெளி வந்துள்ளன.

கிறிஸ்துமஸ் ஹம்ப்ரீஸ் தம்பதிகள் 1924-ஆம் ஆண்டில் பௌத்த சங்கத்தை அமைத்தார்கள். சமயப் பிரசாரம் செய்வதும், ஆராய்ச்சி நடத்துவதும் சங்கத்தின் முக்கிய நோக்கம். 'தி மிடில் வே' என்ற முத்திங்கள் வெளியீட்டை இது பிரசுரிக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்த வெளியீட்டின் உருவத்தைப் பெரிதாக்கி அதிகப் பக்கங்களுடன் வெளியிட்டார்கள். விற்பனையும் பெருகிற்று.

பௌத்த தர்மத்தை எடுத்துக் கூறவும், தியானம், வழிபாடு முதலிய துறைகளில் பயிற்சியளிக்கவும் இந்தச் சங்கம் வாரம் மும்முறை வகுப்பு நடத்தி வருகிறது. அவ்வப்போது சமயப் பிரசாரக் கூட்டங்களையும் நடத்தி வருகிறது. 1952-ல் சங்கத்தின் ஆதரவில் ஆண்டு தோறும் கோடைகால வகுப்பு நடத்தி வருகிறார்கள்.


பௌத்த சங்கத்துடன் இணைப்பாக, கேம்பிரிட்ஜ், பிரைட்டன், மான்செஸ்டர் முதலிய இடங்களில் பிரசார நிலையங்கள் பணியாற்றுகின்றன. லண்டனிலோ, அதன் அருகிலோ பௌத்த விஹாரம் நிர்மாணிக்கும் நோக்கத்துடன் 1949-ல் பௌத்த விஹாரச் சங்கம் அமைக்கப்பட்டது. ஸர் ஸிரில் தே ஸாய்ஸா, கனம் பால் நாயக, திரு அமரசூர்யா, திரு நவின் மூனேஸிங்க, திரு ராஜா ஹேவவிதர்னே முதலிய இலங்கை வள்ளல்கள் உதவியால் 1954-ல் விஹாரம் எழுப்பப்பட்டது.


லண்டனிலுள்ள ஸயாம் இராஜதூதர் 1954 விசாகப் பெருநாளில் விஹாரத்தைத் திறந்து வைத்தார். பூஜ்யர் நாரதா லண்டனில் சில காலம் தங்கி, ஸ்தாபனப் பணி செய்தார்கள். தாய்லாந்தில் வாழ்ந்த போது பௌத்த சமயத்தைத் தழுவிய ஆங்கிலேயர், பூஜ்யர் கபிலவேதோ என்ற திருநாமத்துடன், புத்த விஹாரத்தில் எழுந்தருளி யிருக்கிறார். அவருக்கு உதவியாக பூஜ்யர் பண்டித பிரிசிருணஸ்ரீ, பூஜ்யர் மகாநாம தேரா என்ற பிக்ஷுக்கள் பணியாற்றுகிறார்கள்.

சென்ற ஆண்டு ஜூலையில், இந்த விஹாரத்தில் பௌத்த சாதகர் ஒருவர் சந்நியாசம் ஏற்றார். பிரிட்டனில் நடந்த முதல் சமயச் சடங்கு இது.

பிரிட்டனில் பௌத்த சமயம் பரவுவதற்கு பூஜ்யர் ஸயாதா-ஊ-திட்டிலா-அவர்களது சலியாத உழைப்பே காரணம். அவர்கள் பிரிட்டனில் பதினான்கு ஆண்டுகள் தங்கியிருந்து சமய போதனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு நான்காண்டுகளாயின என்றாலும் அவர்களுடைய சீடர்கள், பாலி மொழி போதிக்கவும் சமய நூல்களைப் பாடம் சொல்லவும் வாரம் மும்முறை வகுப்புக்கள் நடத்தி, சிறந்த சேவை செய்து வருகிறார்கள்.

திருடன், திருடன், பிடி !




வேர்க்குரு விலிருந்து
நிச்சயம் நிவாரணம் பெற
இரு-வழி
சிகித்சை
2
நாள்முழுதும் சுகமாயிருக்க ஸ்நானத்திற்குபின் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரை தேகத்தில் தாவிக் கொள்ளுங்கள். சருமத்தை மென்மையாக்கும், இதன் சக்திவாய்ந்த கிருமி நாசினி குணங்கள் உங்களுக்குக் குளுமையும், இதமும் அளிப்பதுடன், கொடிய வெப்பத்திலும் உங்கள் சருமத்தை புதுமையுடனும் சுகமாயும் வைக்கின்றன.
1
வேர்க்குருவிலிருந்து உடனடியாக நிவாரணம் பெற ஸ்நானத்தின்பொழுது ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப் உபயோகியுங்கள். அதன் செழுமையான ஔஷத சக்தி வாய்ந்த நுரை சருமத்தினூடே புகுந்து, வேர்க்குரு ஏற்படுவதற்குக் காரணமான அமிலங்களால் அடைபட்ட சருமத் துவாரங்களுக்கு உடனே நீடித்த நிவாரணம் அளிக்கிறது.
PRICKLY HEAT POWDER
PRICKLY HEAT SOAP
Johnson's
ஜான்ஸன்ஸ்
ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர்
JPH. 3311

புத்தர் மணி மொழிகள்



இன்று நாம் இப்படியிருப்பதற்குக் காரணம் நமது சிந்தனையே! சிந்தனைகள் தான் நமது வாழ்வின் அஸ்திவாரம். வாழ்வே சிந்தனைகளால் ஆக்கப்பட்டது தான். ஒருவன் கெட்ட எண்ணத்தோடு பேசினாலோ, காரியங்கள் செய்தாலோ உடனே துன்பம் அவனைத் தொடர்ந்து வருகிறது—வண்டியை இழுக்கும் மாட்டின் பின்னாலேயே சக்கரங்கள் சுழன்று சுழன்று வருவது போல!

★

அவன் என்னைத் திட்டினான், அவன் என்னை அடித்தான், அவன் என்னைத் தோற்கடித்தான், அவன் என்னைக் கொள்ளை யடித்தான் — இப்படிச் சதா நினைத்துக் கொண்டிருப்பவர்கள் உள்ளத்தை விட்டுப் பகைமை நீங்குவதில்லை.

பகைமையை என்றும் பகைமையினால் போக்க முடியாது. பகைமையைப் போக்குவது அன்புதான். இதுவே மிகப் பழம் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் விதி.

★

துன்பம் என்பது பாபத்தின் விளைவே!

★

மூடர்கள் "இந்தப் பிள்ளைகள் எனக்குச் சொந்தம். இந்தச் சொத்து எனக்கு உரியது" என்று சொல்லிக் கொண்டு தங்களைச் சொல்லி முடியாத துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறார்கள்.

அவர்கள், தங்களுக்கே உரியவர்கள் அல்லாதபோது, புதல்வர்களும் சொத்துக்களும் எந்த அளவுக்கு அவர்களுக்கு உரியன?

★

தூய்மையான உள்ளத்தோடு பேசிக் காரியங்கள் செய்பவர்களை நிழலைப் போல் என்றும் இன்பம் தொடர்ந்து செல்லும்.

★

பிரார்த்தனைகளில் எல்லாம் வைத்துப் பெரிய பிரார்த்தனை பொறுமையே.

புஷ்பத்துக்கோ, அதன் நிறத்துக்கோ மணத்துக்கோ எத்தகைய ஊறும் விளைவிக்காமல் தேனீ தேனைத் திரட்டிக் கொண்டுபோய் விடுகிறது. அம்மாதிரிதான் ஒவ்வொரு பிக்ஷுவும் கிராமத்துக்கு வந்து போக வேண்டும்!

★

கண்ணைக் கவரும் வர்ண அழகு பெற்ற மலர்கள் சிலவற்றில் மணம் இருப்பதில்லை. இந்த வகையைச் சேர்ந்ததுதான், தான் உபதேசிப்பது போல் வாழ்க்கை நடத்தாதவனின் அழகிய பேச்சும்-ஒரு பயனுமில்லை!

★

ஓடும் ரதத்தை எவன் நினைத்த மாத்திரத்தில் நிறுத்துகிறானோ அவனே சாரதி. அத்தகைய சாரதி, எழுகின்ற கோபத்தை அடக்கி வைப்பவன்! மற்றவர்கள் சும்மா கடிவாளத்தைக் கையில் பிடித்திருப்பவர்கள்தான்!

★


வெற்றி பகைமையை வளர்க்கிறது. ஏனெனில் தோல்வி யடைந்தவன் எப்பொழுதும் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறான். அதனால் எவன் வெற்றியையும் தோல்வியையும் துறந்து விட்டானோ அவன் மன நிறைவு பெற்று வாழ்கிறான். பேர் இன்பத்தில் திளைக்கிறான்!

★

நோய்களில் வைத்துக் கொடிய நோய் பசி; உடலின் தேவைகள்தான் பெருந் துன்பங்கள். இதை யொருவன் உண்மையாக உணர்வதே நிர்வாணம்; அதுவே பேர் இன்பம்.

★

மூடர்களோடு செல்பவன் நெடுந் தூரத்துக்குத் துன்பப்படுகிறான். ஆம், பகைவனுடைய கூட்டுறவைப் போலவே மூடர்களுடைய கூட்டுறவும் துன்பம் தருவனவாகும். அறிவாளிகளின் கூட்டுறவு, பந்துக்களைக் காண்பதைப் போன்ற இன்பத்தை அளிக்கும்!



"அப்பனே! கன்றை ஏமாற்றிப் பால் கறந்து கொண்டு போகிருய். அதில் தண்ணீர் சேர்த்து விற்கிருயே. என்னுடைய பால் நன்ருக இல்லை என்று எல்லாரும் ஏசுகிற பேச்சு எனக்குக் கேட்கக் கஷ்டமாக இருக்கிறதே!" என்று நெல்லூர் பசுமாடு எஜமானனிடம் சொல்லிற்று. கன்றை நக்கிய வண்ணமாக. அவனுக்குப் பசுவின் பாஷை விளங்கவில்லை.

"நல்ல தீனியாவது தரக்கூடாதா?" என்றது பக்கத்திலிருந்த எருமை.


"தண்ணீர் சேர்க்கும்போது நல்ல தண்ணீரையாவது சேர்" என்ருர் அந்த வீட்டுக்காரர். அவர் ஒரு டாக்டர்.

"தண்ணீர் சேர்ப்பேனு நான்? அந்த வியாபாரம் என்னிடம் கிடையாது" என்ருன் பால்கார கந்தசாமி, படியைச் சாய்த்து.

"டின் பாத்திரத்தின் ஓசையைப் பாருங்கள். தண்ணீர் இருந்தால் இப்



'உப்புக்காக நக்குகிறது'



படிச் சத்தம் உண்டாகுமா?" என்று சொல்லி அவசர அவசரமாகக் கறந்தான் பால்.

"இந்தப் பட்டணத்தில் மாட்டுக்கே தண்ணீர் சேர்த்து விடுகிறார்கள்" என்றான் கம்பவுண்டர் சிறுவன்.

"அது எபபடி?" என்றார் டாக்டர்.

"மாட்டுக்குத் தின்ன நிறைய உப்பு கொடுத்தால் நிறைய தண்ணிப் பாலாகக் கறக்கும்" என்றான் கம்பவுண்டர்.

"கொஞ்சம் கூடச் சேர்த்துப் பணம் கொடுத்தால் ஒன்றும் கலக்க மாட்டோம். நல்ல பாலே தருவோம்" என்றான் பால்காரன்.

"இப்போதே விலை அநியாயமாக ஏறிப்போச்சு. இன்னும் வேண்டும் என்கிறாயா? என்ன தந்தாலும் தண்ணீர் சேர்த்துத்தான் விடுவீர்கள்" என்றாள் டாக்டர் மனைவியம்மாள்.

"புல் விலை என்ன? தவுடு விலை என்ன? புண்ணாக்கு விலை என்ன? எல்லாம் ஏறிப் போச்சு. பாலும் மோரும் மட்டும் ஏறாமல் இருக்குமா? உங்கள் சம்பளம் எல்லாம் ஏற்ற வில்லையா?" என்றான் பால்காரன். அவன் தைரியசாலி. போக்கிரியுங்கூட.


இந்தப் பேச்சை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கன்றுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பால் என்றால் என்ன? அதற்கு எப்படித் தண்ணீர் சேர்க்கிறது? ஒன்றும் அதற்குத் தெரியவில்லை.

"அம்மா! பால், பால் என்கிறார்களே அது என்ன அம்மா?" என்றது.

பசுவின் கண்களில் நீர் வடிந்தது. தன் கன்றை அழுத்தி நக்கிற்று.

"அண்ணா! பசு ஏன் இப்படிக் கன்றை சும்மா நக்குகிறது?" என்றான் டாக்டரின் கடைசி மகன்.

"கன்றின் உடம்பில் உப்பு ஊறுகிறது. தாய்க்கு உப்பு வேண்டும். அதற்காக நக்குகிறது" என்றார் டாக்டர். அவர் இந்த விஷயமெல்லாம் படித்தவர். படித்துக் கல் மனம் பெற்றவர்.






சுந்தரத்தின் செல்வம்

'விசுவம்'

சுந்தரத்தின் வீட்டில் ஒரு நாய்க் குட்டி வளர்த்து வந்தார்கள். அதற்குச் 'செல்வம்' என்று பெயர். சுந்தரம் எப்போதும் அதனுடனேயே விளையாடிக் கொண்டிருப்பான். அந்த நாய்க் குட்டியிடம் சுந்தரத்துக்கு அத்தனை அன்பு!

செல்வக் குட்டி இரண்டொரு வருஷங்களில் பெரிய நாயாக வளர்ந்தது. சுந்தரமும் முன்னைக் காட்டிலும் கொஞ்சம் பெரியவனாக வளர்ந்தான். நாய்க்கும் சுந்தரத்துக்கும் இடையில் அன்பும் வளர்ந்து கொண்டே வந்தது.




சுந்தரத்தின் வீடு ஊருக்கு ஓரத்தில் இருந்தது. அது ஒரு சின்ன வீடு. சுந்தரத்தின் அப்பா ஒரு தொழிற்சாலையில் உழைத்துச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவன் அம்மாவும் கூலி வேலை செய்து கொண்டிருந்தாள். இருவரும் உழைத்துக் காலம் தள்ளியதோடு சிறுவன் சுந்தரத்தையும் படிக்க வைத்தார்கள்.

ஒருநாள் அந்தத் தெரு வழியாக ஒரு பணக்காரக் குடும்பத்தினர் தங்களுடைய அருமை நாயுடன் போய்க் கொண்டிருந்தார்கள். அந்த நாய் பார்ப்பதற்கு மிகவும் ஒய்யாரமாக இருந்தது. அதைப் பார்த்த சுந்தரத்தின் நாய் பொறுமைப் படவில்லை. தானும் அந்த மாதிரி ஒரு பணக்கார வீட்டில் வாழவேண்டும் என்றும் நினைக்கவில்லை. பணக்கார வீட்டில் வாழ்ந்தாலும் ஏழை வீட்டில் வாழ்ந்தாலும் அன்பு எல்லா இடங்களிலும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று எண்ணியது.

சுந்தரத்தின் குடும்பம் ஏழைக் குடும்பமாயிற்றே; தான் எதற்கு அங்கே இருக்க வேண்டும்? தனக்கு அங்கே என்ன வேலை? என்று செல்வம் நினைக்கவில்லை. சுந்தரத்தினிடமும் அவனுடைய தாயார் தகப்பனாரிடமும் செல்வம் அளவு கடந்த நன்றியும் விசுவாசமும் வைத்திருந்தது.


ஒருநாள் சாயந்திரம் சுந்தரம் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அந்த நாய் தரையில் தன் முன் கால்களால் எதையோ தோண்டிக் கொண்டிருந்தது. சுந்தரம் அந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தபோது நாய் தோண்டிக் கொண்டிருந்த பள்ளத்திலிருந்து பளிச்சென்று ஒரு முத்துமாலை வெளியே வந்து விழுவது தெரிந்தது. அதைக் கண்ட சுந்தரத்துக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவசரமாக ஓடிப் போய் அந்த முத்து மாலையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போய்த் தாயார் தகப்பனாரிடம் அதைக் காட்டி விஷயத்தைச் சொன்னான். அவர்களும் ஆச்சரியம் தாங்காமல் வெளியே ஓடிவந்து பார்த்தார்கள். நாய் மேலும் மேலும் வேகமாகப் பள்ளம் தோண்டிக் கொண்டே இருந்தது.

நாய் தோண்டத் தோண்ட அந்தப்



பள்ளத்தில் இருந்து ஏராளமான நகைகளும் முத்துக்களும், பவுன்களும் வெளியே வந்து வேகமாக விழுந்து கொண்டேயிருந்தன!

சுந்தரத்தின் தாயார் தகப்பனருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாக அந்த உயர்ந்த நகைகளையும் முத்துக்களையும் எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய கஷ்டங்களும் ஏழ்மையும் அன்றோடு தொலைந்தன.




பூனை :- யார் சொல் பார்க்கலாம்!

இப்போது சுந்தரத்தின் குடும்பம் பெரிய பணக்காரக் குடும்பம் ஆகிவிட்டது. பணம் வந்தவுடன் சுந்தரத்தின் அப்பா ஒரு பெரிய பங்களாவை விலைக்கு வாங்கினர். ஒரு நல்ல நாளில் தம்முடைய பழைய சின்ன வீட்டைக் காலி செய்து விட்டு அந்தப் பங்களாவுக்குக் குடியேறினர். போகும்போது தம்முடைய சின்ன வீட்டிலிருந்த சாமான்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எடுத்துச் சென்றார். ஆனல் செல்வத்தை அழைத்துச்செல்ல மறந்து விட்டார். பொக்கிஷம் தேடித் தந்த நாயை எங்கும் ஓடாமல் ஒரு கம்பில் கட்டிப்போட்டு வைத்திருந்தார்.

இவர்கள் அந்த வீட்டைக் காலி செய்து விட்டுப்போவதைப் பார்த்த அந்த நாயும் அவர்களோடு போக விரும்பியது. ஆனல் தன்னைக் கட்டிப் போட்டிருந்ததால் பலமாகக் குரைத்துத் தன் ஆசையைத் தெரிவித்துக் கொண்டது. சுந்தரம் மட்டும் நாய் குரைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் நீர் துளித்தது. பாவம்! செல்வம் தேடித்தந்த நாயைத் தனியாக விட்டு விட்டுப் போகிறோமே என்று அவன் மனம் மிகவும் சங்கடப்பட்டது.

'' அப்பா அப்பா! நம் நாயை மறந்து விட்டோமே '' என்றான் சுந்தரம்.

அவன் தந்தைக்கும் அப்போதுதான் நினைவு வந்தது. '' நாய் தேடித்தந்த பொக்கிஷத்தால் வேறு புதிய பங்களாவுக்குச் செல்கிறோம். ஆனல் அந்தப் பங்களாவுக்கு நாயை அழைத்துச் செல்ல மறந்து விட்டோம். நாய்க்குள்ள நன்றியும் விசுவாசமும் நமக்கு இல்லையே'' என்று அவரும் வருத்தப்பட்டார்.



உடனே நாயை அவிழ்த்து விட்டு அதையும் அழைத்துச் சென்றார்கள். நாயும் சந்தோஷமாக வாலை ஆட்டிக் கொண்டே அவர்களுடன் சென்றது. சுந்தரமும் நாயும் பழையபடி புதிய பங்களாவில் அன்போடு சந்தோஷமாக வாழ்ந்துவந்தார்கள்!

செல்வம் தான் பணக்கார வீட்டில் வாழ வேண்டும் என்று நினைக்காவிட்டாலும் இப்பொழுது பணக்கார வீட்டில் வாழ்கிறது. இப்பொழுது செல்வத்தைப் பார்த்தால் அடையாளமே தெரியவில்லை.



யார் அழகு?

ஒரு மரத்தில் இருந்த ஆப்பிள் பழங்கள் எல்லாவற்றையும் தோட்டக்காரன் பறித்து விட்டான். ஒரே ஒரு கிளையில் இருந்த மூன்று பழங்களை மட்டும் அவன் பறிக்காமல் விட்டு விட்டான். அந்த மூன்று பழங்களும் சில தினங்களுக் கெல்லாம் திடீரென்று அடித்த புயலினால் கீழே விழுந்தன. கீழே விழுந்த பழங்கள் மூன்றும் ஒன்றுக்கொன்று சண்டை யிட்டன.

"நம் மூவரில் யார் அழகு?" என்பதே சண்டைக்குக் காரணம்.

"நானே அழகு!" என்றது ஒரு ஆப்பிள்.

"இல்லை; நான்தான் அழகு!" என்றது இன்னொன்று.

"இல்லை, இல்லை; நான் தான் அழகு!" என்றது மற்றொன்று.

அப்போது அங்கே வந்த ஒரு குருவி, "உங்களுக்குள் என்ன சண்டை?" என்று கேட்டது.

"எங்கள் மூவரில் யார் அழகு சொல், பார்க்கலாம்" என்று மூன்று பழங்களும் கேட்டன. குருவி சொல்லிற்று:

"நீங்கள் மூவரும் சண்டை போட்டுக் கொண்டதும் எனக்குத் தெரியாது. பிறகு ஒன்று கூடியதும் தெரியாது, ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது" என்றது குருவி.

"அது என்ன?"


"நீங்கள் மூவருமே அழகானவர்கள் தான். சண்டையிட்டுக் கொள்வதால் தான் உங்கள் அழகு கெடுகிறது. நீங்கள் எப்போதும் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் அழகாகவே இருப்பீர்கள். எங்கே சிரியுங்கள் பார்க்கலாம்" என்றது குருவி.

குருவி சொன்ன புத்திமதியைக் கேட்டு ஆப்பிள் பழங்கள் தத்தம் முகத்தைச் சந்தோஷமாக வைத்துக்கொண்டு சிரித்தன. குருவி சொன்னபடியே அப்போது ஆப்பிள் பழங்கள் மூன்றும் ரொம்ப அழகாகக் காணப்பட்டன! (ஒரு சீனக் கதை)

யார் கண்டு பிடி!

இந்த விளையாட்டில் எத்தனை பேர் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

மொத்தம் உள்ள சிறுவர்கள் இரண்டு பகுதியாகப் பிரிந்து கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள ஏதாவது ஒரு வாசற்படியில் பத்திரிகைத் தாளை ஒட்டித் திரை போல் செய்து தொங்க விட வேண்டும். படத்திலிருப்பதைப் போலவே திரையின் நடுவில் இரண்டு துவாரங்கள் செய்யவும். இப்போது சிறுவர்களில் பாதிப் பேர் திரைக்குப் பின் பக்கம் மறைந்து கொள்ள வேண்டும். மற்றப் பாதிப்பேர் முன் பக்கத்தில் இருக்கலாம். திரைக்குப் பின்னால் இருக்கும் சிறுவர்களில் ஒருவன் திரைக்கு நேராக வந்து திரையை ஒட்டினாற்போல் நின்று கொண்டு துவாரத்தின் வழியாக வெளியே பார்க்கவும். திரைக்கு வெளியிலுள்ள சிறுவர்களில் ஒருவன் திரைக்குப் பின்னால் நிற்கும் பையன் யார் என்பதைக் கீழே தெரியும் கால்களிலிருந்தும் துவாரத்தில் தெரியும் கண்களிலிருந்தும் கண்டு பிடிக்க வேண்டும். தவறாகச் சொன்னால் சொல்கிறவன் 'அவுட்.' சரியாகச் சொன்னால் திரைக்குப் பின்னால் இருப்பவன் 'அவுட்.'




வேடிக்கை விளையாட்டு
ஒட்டைச் சிவிங்கியால் கத்த முடியாது. காரணம், அதற்குக் குரல் கிடையாது.
மணி விமானத்தில் போனான். பாதி வழியில் தவறிக் காட்டில் விழுந்தான். காட்டிலிருந்த யானை அவனைத் தூக்கி எறிந்தது. தூக்கி எறிந்த மணியைப் புலி விழுங்கியது. இவ்வளவுக்கும் பிறகு மணி உயிரோடு இருக்கிறான். இது ஆச்சரியமா இல்லையா? இல்லை. ஏனென்றால் இது அவ்வளவும் கனவில் நடந்ததுதானே?
பந்தயத்தில் மானை விட ஆமை தான் வேகமாய்ப் போகும்! அது எப்படி முடியும் என்று கேட்கிறீர்கள்? மானையும் ஆமையையும் தண்ணீரில் பந்தயம் விட்டுப் பாருங்கள்!
அந்தப் படத்தை எனக்குக் கொடடா!
முடியாது!
நான் அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவேன்!
அதுவும் முடியாது!
சொன்னால் கேட்டாயா? ஏமாந்தாயா? அது சுவரில் எழுதிய படமாக்கும்!
சாமா

எல்லோருக்கும் தெரியும் —



ஆகையால்தான்
மற்றெந்தத்
தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்

ப்ரூக் பாண்ட் தேயிலையையே

வாங்குகிறார்கள் !

சீன நாட்டுக் கதை

ஊதாரியும் ரஸவாதியும்

மொழிபெயர்ப்பு:
எஸ்.வி.எஸ்.

அவன் பெயர் டூ சீ சுன் என்பது. அவன் ஒரு செல்வர் மகன்தான். என்ன பிரயோசனம்! அவன் தன் செல்வத்தை யெல்லாம் கண்டபடி ஊதாரித்தனமாக விலைகளிலும் கேளிக்கைகளிலும் செலவழித்து விட்டு இன்று பரம தரித்திரனாகி விட்டான். அவன், தன்னைக் கைதூக்கி விடும்படி தன் உறவினர்களை யெல்லாம் கேட்டான். அவர்களும் ஏதாகிலும் உதவி செய்திருப்பார்கள். ஆனால் அவனோ உடம்பு வணங்கி வேலை செய்ய மறுத்து விட்டானே! அப்படிப்பட்டவனுக்கு யார் என்ன செய்ய முடியும்! வெறும் கையோடு தான் அனுப்பி வைத்தனர்.

மழை காலம் வந்து விட்டது. டூ என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். ஊர் எல்லாம் அலைந்தான். கடைசியில் வயிற்றில் பசி 'கிள்ள, ஊருக்குக் கிழக்கேயுள்ள மார்க்கெட்டின் மேற்கு வாசலில் வந்து நின்றான். அப்போது அவனைப் பார்த்தால் துன்பம்தான் மானிட உருவம் எடுத்து வந்ததோ என்று நினைக்கும்படி யிருந்தது.

ஒரு கிழவர் தடியை ஊன்றி நடந்து வந்து கொண்டே யிருந்தார். அவர் டூவைப் பார்த்ததும் நின்றார். "ஏன் அப்பா! இப்படிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு நிற்கிறாய்! உனக்கு என்ன கஷ்டம் வந்தது!" என்று மிகுந்த பரிவோடு கேட்டார்.

டூ தனது கஷ்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. தனக்கு உதவ மறுத்த உறவினர்களை ஒரு ஆவர்த்தனம் மனமார வைதான். அவர்களுடைய இரக்கமில்லாத சுபாவத்தை முகத்தில் கோபக்குறிகள் பிரதிபலிக்கச் சொன்னான்.

"அதிருக்கட்டும். உனக்கு என்னப்பா வேண்டும்! பணந்தானே! எவ்வளவு தேவைப்படும்!" என்று கேட்டார்.

"முப்பது அல்லது நாற்பதாயிரம் இருந்தால் போதும். சமாளித்துக் கொள்வேன்" என்றான்.

"அது போதாது. இன்னும் கொஞ்சம் வேண்டும். சரியாக யோசித்துச் சொல்" என்றார் கிழவர்.

"ஒரு லட்சம்" என்றான் டூ.

கிழவர், "இது கூடப் போதாது!" என்றார்.

"பத்து லட்சம்!"

"ஊஹூம், இதுவும் உனக்குப் போதாது!"

"முப்பது லட்சம்!"

"பரவாயில்லை. கிட்டத்தட்டச் சரியாகச் சொல்லி விட்டாய்!" என்று கூறிக் கொண்டே தம் சட்டையிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக் கொடுத்தார். பிறகு, "இது இன்றையச் செலவுக்கு வைத்துக் கொள். நாளை மத்தியானம், மேற்கு மார்க்கெட்டிலுள்ள பாரசீக ஹோஸ்டலுக்கு நேரே உனக்காகக் காத்திருக்கிறேன். அங்கு வந்து நீ கேட்ட தொகையை வாங்கிக் கொள். சொன்ன மணிக்குத் தவறாமல் வந்து சேர்!" என்றார் கிழவர்.

டூ மறுநாள் குறித்த வேளைக்குப் போய்ச் சேர்ந்தான். கிழவர் சொன்னாற் போல் முப்பது லட்ச ரூபாய் கொடுத்தார். ஆனால் தம் பெயரோ ஊரோ விலாசமோ ஒன்றும் தெரிவிக்காமல் போய் விட்டார்.

* * *

டூ மீண்டும் பணக்காரனாகி விட்டான். கேட்க வேண்டுமா! பழையபடி பெரும் செலவாளியானான். இனி பழைய ஏழைமை நிலையை அடைய மாட்டோம் என்று தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்டான். குதிரைகள் வாங்கினான்; அழகான ஆடையாபரணங்கள் வாங்கினான். துர்ச்சகவாசம் ஏற்படுத்திக் கொண்டு பாட்டு, கூத்து, கணிகையர் என்று கண்டபடி செலவழிக்கத் தொடங்கினான். ஒரு தடவையாவது தன் பணத்தில் ஒரு பகுதியை மிச்சப்படுத்தி வைக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவே யில்லை. ஆகவே இரண்டு வருஷங்களில் அவன் பணம் எல்லாம் தீர்ந்து விட்டது. அவனுடைய விலையுயர்ந்த ஆடைகளை விற்க வேண்டியதாய் விட்டது. வண்டிகளை விற்றான்; குதிரைகளை விற்றான். விற்று மலிவான மட்டக் குதிரைகளை வாங்கினான். கடைசியில் அவற்றையும் விற்று ஒரு கழுதையை வாங்கினான். கொஞ்ச நாட்களில் அந்தக் கழுதையையும் விற்றுவிட்டு நடந்து போக வேண்டியதாயிற்று. அதிகம் வளர்ப்பானேன்! பழையபடி அவன் பரம ஏழையாகி விட்டான்.

மீண்டும் முன் போலவே என்ன செய்வது என்று தோன்றாமல் தன் தலைவிதியை நொந்து



கொண்டு மார்க்கெட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே அந்தப் பழைய கிழவர் எங்கிருந்தோ வந்து சேர்ந்தார். அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, "என்ன நீ! பழையபடி இந்த நிலைக்கு வந்து விட்டாயே! சொல், உனக்கு இப்பொழுது எவ்வளவு பணம் வேண்டும்!" என்று கேட்டார்.

டூவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவனுக்கு, வெட்கமாக இருந்தது. கிழவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டார். பதில் சொல்லவில்லை. கடைசியில் கிழவரே, "நாளை மத்தியானம் முன்னே நாம்

சந்தித்த இடத்துக்கு வந்து சேர் !" என்று சொல்லி விட்டுப் போனார்.

டுவுக்குப் பணம் வாங்க அவமானமாக இருந்தாலும் கிழவர் குறித்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். ஒரு கோடி வாங்கிக் கொண்டான். ஆனால் இந்தத் தடவை ஒரு சங்கற்பம் செய்து கொண்டான். தனது வாழ்க்கையில் புது ஏட்டைத் திருப்புவது என்று தீர்மானித்துக் கொண்டான். அதாவது தான் ஒரு வியாபாரம் தொடங்கி ஊரிலுள்ள பெரிய பணக்காரனை விடப் பெரிய பணக்காரனாகி விடவேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் அவன் கையில் பணம் வந்ததோ இல்லையோ இந்த நல்ல தீர்மானங்கள் எல்லாம் காற்றில் பறந்து விட்டன. பழையபடி கேளிக்கை வாழ்வில் ஈடுபடலானான். ஆக, மூன்று நான்கு ஆண்டுகளில் பழையபடி ஆண்டியானான்.

இந்தத் தடவையும் அதே பழைய இடத்தில் கிழவரைச் சந்தித்தான். அவமானம் தாங்க மாட்டாமல் டு முகத்தை மறைத்துக்கொண்டு அவர் கண்ணில் படாமல் போகத் தலைப் பட்டான். அந்தச் சமயம் கிழவர் அவன் சட்டையைப் பற்றி இழுத்து, "இது என்ன ! இவ்வளவு மோசமாக நடந்து கொள்ளு கிறாயே !" என்று சொல்லி மீண்டும் மூன்று கோடி பணம் கொடுத்தார். "இந்தப் பணமும் உன்னைச் சீர்திருத்தவில்லையென்றால், இனி உன்னை யாராலுமே சீர்திருத்தவும் முடியாது ; காப்பாற்றவும் முடியாது!" என்று சொன்னார்.

டு நினைத்தான் : "ஆகா ! நான்தான் எவ்வளவு கேவலமான வாழ்க்கை வாழ்ந்திருக் கிறேன்! பணத்தை யெல்லாம் எப்படி எப்படிச் செலவழித்திருக்கிறேன். இவ்வளவு கேவல நிலை அடைந்து, பணத்தையும் ஒழித்துப் பரம தரித்திரனானேன். இந்த நிலையில் என் உற வினர்கள் யாரும் எனக்கு உதவ முன்வர வில்லை. ஆனால் இந்தக் கிழவரோ எனக்கு மூன்று முறை பணம் கொடுத்து [illegible] இருக்கிறார். இவருக்கு நான் எந்த விதத்தில் [illegible] மாறு செய்யப்போகிறேன்!"

இப்படி யோசித்துக் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து, கிழவரிடம் சொன்னான் :

"இந்தப் பணத்தைக் கொண்டு இந்த உலக விவகாரங்களில் நான் சிக்கியுள்ள தொல்லைகளிலிருந்து விடு பட்டு விடுவேன். என்னைச் சார்ந்திருக்கும் உறவினர்க ளுக்கும் உதவ இப் பணத்தி லிருந்து தக்க ஏற்பாடு செய்து விடுவேன். நான் உங்களுக்கு ரொம்பவும் கட மைப் பட்டிருக்கிறேன். என் தொல்லைகளை யெல்லாம் தீர்த்துக் கொண்ட பிறகு நீங்கள் இட்ட பணியைச் செய்து கொண்டு உங்களு டன் இருக்கப் போகிறேன்."

உடனே கிழவர், "இதைத் தான் நானும் விரும்பினேன். உன் தொல்லைகளை யெல்லாம் தீர்த்துக் கொண்ட பிறகு, அடுத்த வருஷம் ஏழாம் மாதம், பதினைந்தாம் தேதி உள்ளூர் கோவிலின் முன்னாலிருக்கும் இரட்டை மரங் களின் கீழ் என்னை வந்து சந்திப்பாயாக" என்று கூறினார்.

டுவின் உறவினர்கள் பெரும்பாலோர் தென் ஜில்லாக்களி லிருந்ததால் அவர்களுக்காக வேண்டி ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் வாங்கினான். ஆயிரக் கணக்கில் வீடுகள் கட் டிக் கொடுத்தான். கல்யாணமாகாதிருந்த சொந்தக்கார இளைஞர்களுக்கும் பெண்களுக் கும் கல்யாணம் செய்து வைத்தான். தனக்குப் பணம் கடனாகக் கொடுத்து உதவியவர்களுக் கெல்லாம் திருப்பிக் கொடுத்தான். தனது பழைய விரோதிகளிடம் மீண்டும் சிநேகம் செய்து கொண்டான். இவை யெல்லாம் ஆன பிறகு கிழவர் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான்!

• • •

கிழவர், இவனுக்கு முன்னாலேயே அந்த மரத்தடியில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந் தார். பிறகு இருவரும் ஹுவா மலைத் தொடரில் யண்டாய் மலையை நோக்கிப் புறப் பட்டார்கள். பதினைந்து மைல் நடந்தார்கள். அங்கே பெரிய அரண்மனை போன்ற ஒரு கட்டடம் இருந்தது. இதற்குச் சொந்தக்காரரா யிருப்பவர் ஒரு பெரிய மனிதராகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தான் டு.

அந்தக் கட்டடத்தை வெண்ணிற மேகங்கள் சூழ்ந்து அலங்கரித்துக்கொண்டிருந்தன! வனப் பறவைகள் சுற்றி வட்டமிட்டுப் பறந்தன. அந்தக் கட்டடத்தின் நடுஹாலில் ஒன்பது அடி உயரமுள்ள மேடையிருந்தது. அதில் மருந்துகள் தயாரிக்கப்பட்டு வந்தன. செந்நிறத் தீ அழல் பலகணிகளை யெல்லாம் ஒளி மய மாகச் செய்து வந்தன. மேடையைச் சுற்றிப் பல தேவதைகளின் உருவங்களும், பூதங்களின் உருவங்களும், வெண் புலிகளின் உருவங்களும் பார்ப்பவர் நடுங்கும்படி காட்சி யளித்தன.



இப்போது அஸ்தமிக்கும் நேரம் நெருங்கி வந்தது. கிழவர் தாம் அணிந்திருந்த சாதாரண உடையைக் கழற்றி எறிந்தார். உடனே அவர் சிவந்த உடையும் மஞ்சள் குல்லாயும் அணிந்த பூசாரியாகத் தோற்ற மளித்தார்!

அவர் ரேவுக்கு மூன்று வெண்ணிற மாத்திரைகளும், ஒரு வாய் பானமும் கொடுத்தார். பிறகு ரேவைப் புலியின் தோலின்மேல் கிழக்கே பார்த்துக் கொண்டு உட்காரச் சொன்னார்.

"இப்பொழுது உன் கண் முன்னால் தெய்வங்கள், பூதங்கள், பிசாசுகள், பயங்கர வன விலங்குகள், நரகத்தின் தொல்லைகள் இவையெல்லாம் தோன்றும். சொந்தக்காரர்கள் சொல்லி முடியாத வேதனைக்குள்ளாவது போன்ற காட்சிகள் தோன்றும். ஆனால் அவற்றைப் பார்த்து விட்டு ஒரு வார்த்தை பேசக்கூடாது. அந்தக் காட்சிகள் எல்லாம் வெறும் மாயை. அவற்றைப் பார்த்துப் பயந்து உளறவும், நடுங்கி ஓடவும் கூடாது. ஜாக்கிரதை! உனக்கு எவ்விதத் தீங்கும் நேராது. எப்பாடு பட்டாலும் நான் சொல்லியபடி வாயை மூடிக் கொண்டு நிலை கலங்காமல் மௌனமாக இருக்க வேண்டும்!"

இப்படிச் சொல்லி விட்டுக் கிழப் பூசாரி மறைந்து விட்டார். ரே அந்தப் பெரிய அறையை ஒருமுறை சுற்றிப் பார்த்தபோது, தண்ணீர் நிரப்பிய பெரிய ஜாடியைத் தவிர வேறு ஒன்றும் அங்கு இருக்கவில்லை.

பூசாரி மறைந்த மாத்திரத்தில் ஆயிரக்கணக்கான தேர்கள் கொடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டு வந்தன. ஆயிரக்கணக்கான குதிரை வீரர்கள் வந்தார்கள். இந்தப் படைகளின் தளபதி பத்தடி உயரம் இருந்தான். அவன் அழகான ஆபரணங்கள் அணிந்து ஜொலித்தான். அவன் குதிரையோ, அழகிய மின்னும் பூண்கள் அணிந்து ஒளிர்ந்தது. இந்தப் பூதாகார உருவத்தினன் பல நூறுயிர வீரர்களுடன் ரே இருந்த அந்தப் பெரிய கூடத்துக்கு வந்து சேர்ந்தான். அந்த வீரர்கள், தங்கள் உறையிலிருந்து கத்திகளை உருவினர். வில்லை வளைத்தனர். தளபதி ரேவைப் பார்த்து "நீ யார்! என்னை எதிர்க்க உனக்கு என்ன துணிச்சல்!" என்று இரைந்தான்.

எல்லா வீரர்களும் கத்திகளை உருவி ரேவின் பெயரைக் கேட்டனர். அவன் ஏன் அங்கே உட்கார்ந்திருக்கிறான் என்று கேட்டனர். ஆனால் அவன் ஒரு வார்த்தையும் பதில் சொல்லவில்லை. இது அவர்களுக்கு இன்னமும் ஆத்திரமூட்டியது. பயங்கரமாக "இவனைக் கொல்லுங்கள்! கடுக்கள்!" என்று கத்தினார்கள். அப்பொழுது கூட அவன் வாயைத் திறக்கவில்லை. கடைசியில் தளபதி கோபத்தில் முணுமுணுத்துக் கொண்டே போனான்.

பிறகு பயங்கரப் புலிகள், பூதங்கள், சிங்கங்கள், பாம்புகள் காது செவிடுபட ஒலித்துக் கொண்டு வந்து ரேவை விழுங்கி விடுவதாகப் பயமுறுத்தின. அல்லது அவன் மேலேயே விழுந்து விடுவதாகப் பயமுறுத்தின. இவ்வளவு பயமுறுத்தியும் கொஞ்சங்கூட ரே அசைந்து கொடுக்கவில்லை. பயந்து போனதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை.

அடுத்தாற்போல் வானைப் பிளந்து கொண்டு மழை பொழிந்தது. பகல் இரவாகிவிட்டது. சுற்றிலும் கண்ணைப் பறிக்கும் மின்னல்கள் வெட்டின. எங்கும் பத்தடி உயரத்துக்குத் தண்ணீர். ஒரு நொடியில் மழைத் தண்ணீர் ரேவையே நெருங்கி விட்டது. ரே அசையவில்லை. மழையையோ, இடியையோ தண்ணீரையோ பொருட் படுத்தவில்லை. சிறிது நேரத்தில் மழை ஓய்ந்து விட்டது.

இப்பொழுது அந்தத் தளபதி நரகத்திலிருந்த மாட்டுத் தலையர்களையும் மற்றும் பயங்கரமான பூதங்களையும் அழைத்து வந்தான். அவை ரேவின் முன்னால் ஒரு பெரிய இருப்புச் சட்டியை வைத்துக் கீழே நெருப்பைப் போட்டு எரித்தன. தளபதி, "இப்பொழுது நீ உன் பெயரைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இந்தக் காய்ச்சிய சட்டியில் போட்டுப் பொசுக்கி விடுவேன்!" என்றான். அப்போதும் ரே அசையவில்லை.

பிறகு ரேவின் மனைவியை அழைத்து வந்து அந்தக் கூடத்தின் வாயிற்படிகளில் தள்ளி, அவளைச் சாட்டை கொண்டு அடித்தார்கள், எரித்தார்கள், சூடும் போட்டார்கள். அவள் உடல் பூராவும் இரத்தமயமாகி விட்டது. அவள் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல! அப்போதும் ரே தன் நிலை கலங்கவில்லை; வாய் திறக்கவில்லை.

ரேவின் மனைவியோ, "நான் ஒரு சாதாரணப் பெண். உங்களுக்குத் தகுந்தவளே அல்ல என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்களுக்குப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சேவை செய்திருக்கிறேன். இப்பொழுது இந்த பூதங்கள் என்னைப் பிடித்துத் துன்புறுத்துகின்றன. என்னால் தாங்க முடியவில்லை. எனக்காக உங்கள் கௌரவத்தைக் குறைத்துக் கொண்டு அவர்களிடம் கெஞ்ச வேண்டும் என்று நான் கேட்கவில்லை. ஒரு வார்த்தை நீங்கள் சொன்னால்போதுமே! என் உயிர் காப்பாற்றப்பட்டு விடுமே! நீங்கள் எப்படி இவ்வளவு இரக்கமற்று ஒரு வார்த்தை சொல்லவும் தயங்குகிறீர்கள்!" என்று கண்ணீர் பெருக அழுது கொண்டே சொன்னாள்.

ரே பதில் சொல்லவில்லை. அவர்கள் ரேவின் மனைவியை இன்னும் துன்புறுத்தினார்கள். ரே மௌனமாகவே இருந்தான்.

தளபதி "இவன் படு அயோக்கியன் போலிருக்கிறது. மந்திரங்கள் தெரிந்தவன் போலும். இவனை உயிரோடு விட்டுவைக்கக் கூடாது!" என்று சொல்லித் தன் சேவகர்களுக்கு ரேவைக் கொல்லும்படி உத்தரவிட்டான்.

ரே கொல்லப்பட்டதும், அவனை நரக லோக அரசனின் முன்னிலையில் இழுத்துப்போய்நிறுத்தினார்கள்.





அவ்வரசன் நரகத்தில் கடுமையான இன்னல்களுக்கு டீயை ஆளாக்கும்படி உத்தரவிட்டான். அப்போதும் டீ மசியவில்லை. எனவே நரகத்து அரசன், "இவன் படு அயோக்கியன். இவனை ஆணாக இருக்க விடக் கூடாது. இவன் வாங்கஸிங் என்ற தீதிபதியின் வீட்டில் ஒரு பெண்ணாய்ப் பிறக்கட்டும்!" என்றான்.

டீ பெண்ணாய்ப் பிறந்தாள்.

• • •

குழந்தைப் பருவத்தில் அவளுக்கு அடிக்கடி நோய் நொடி வந்து விடும். ஒருநாளாகிலும் மருந்தில்லாமல் கழிந்தது கிடையாது. ஒரு தடவை கட்டிலிலிருந்து விழுந்து விட்டாள். இன்னொரு நாள் அடுப்பின் மீது விழுந்து விட்டாள். வலியோ தாங்க முடியாதபடி யிருந்தது. இருந்தும் அவள் கத்தவே இல்லை. அவள் அழகான பெண்ணாக வளர்ந்தாள். இருப்பினும் ஒரு வார்த்தை பேசவில்லை. அவள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஊமையாகப் பிறந்து விட்டாள் என்றே நினைத்தனர். அந்த ஊரில் ஊ குயி என்றோர் மகா பண்டிதன் இருந்தான். அவன், இவள் ஊமை என்று அறிந்து கல்யாணம் செய்து கொள்ள விரும்பினான்.

எனவே ஒரு நாள் ஒரு தரகரை அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அனுப்பி வைத்துக் கல்யாணப் பேச்சுப் பேசச் சொன்னான். பெண் வீட்டாரோ, அவள் ஊமையென்று வரனைத் தட்டிக் கழித்தபோது "அவள் ஊமை என்பதால் தானே நான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிறேன். அதிலும் ஒரு இல்லாளாக இருக்க வேண்டியவள் பேச வேண்டிய அவசியமே இல்லை. அதிகமாகப் பேசும் பெண்களுக்கு இவள் ஒரு லட்சிய மங்கையாக விளங்குவாள்!" என்றான். பிறகு கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டனர். கடைசியில் ஊ, டீயை மணந்து கொண்டான். அவர்கள் ஒருவரை யொருவர் மிக அன்னியோன்யமாக நேசித்தனர். பல ஆண்டுகளுக்குப் பின் டீயுக்கு ஒரு மகன் பிறந்தான்.

குழந்தைக்கு இரண்டு ஆண்டுகளாயின.

இப்பொழுது ஊவுக்கு ஒரு சந்தேகம் எழலாயிற்று. அதாவது தன் மனைவி உண்மையிலேயே ஊமையாக இருக்க முடியாது என்று எப்படியோ ஊகித்தான்.

அதனால் ஒருநாள் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ஊ தன் மனைவியாக வந்துள்ள டீயிடம் கொஞ்சிப் பேசினான். ஆனால் டீ பதில் பேசவே இல்லை. இப்படி ஊ எத்தனையோ முறைகளைக் கையாண்டு பார்த்தான், தன் மனைவியைப் பேச வைப்பதற்கு. ஒரு பயனுமில்லை. டீ மௌனமே சாதித்தாள். இதைக் கண்டு ஊ அளவு கடந்த கோபம் அடைந்தான். "முன் காலத்தில் சியா என்று ஒரு அரசன் இருந்தானும். அவனுக்கும் இம்மாதிரிதான் மனைவி. அவள் அவனை வெறுத்தாள். பார்த்துப் புன்முறுவல் புரிய மாட்டாள். ஆனால் நாளடைவில் தன் கணவன் எப்படிப்பட்ட வீரன் என்பதை யுணர்ந்து தன் மனத்தை மாற்றிக் கொண்டாள். கணவனிடம் அன்போடு இருக்கத் தொடங்கினாள். ஆனால் அந்த அரசனை விட நான் எவ்வளவோ மேலானவன். நான் படித்தவன். என் கல்வி யறிவு அவன் வீரத்தை விடச் சிறந்தது. இருந்து என்ன பயன்! என் மனைவி என்னை வெறுக்கிறாள்! இந்த லட்சணத்தில் நமக்குக் குழந்தை வேறு என்ன வேண்டியிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே குழந்தையின் காலைப் பற்றி இழுத்துச் சுவரில் மோதினான். குழந்தையின் மண்டை உடைந்தது. இரத்தம் பீறிட்டது! இந்தக் காட்சியைக் கண்டு டீ அலறி விட்டாள். குழந்தைப் பாசம், அவளைத் தான் எடுத்துக் கொண்ட வாக்குறுதியை மறக்கச் செய்து விட்டது!

டீயின் இதழ்களிலிருந்து அலறல் ஒலி புறப்பட்டதோ இல்லையோ, அவன் தன் சுய உணர்வுக்கு வந்து விட்டான். ஒரு பெரிய அறையில் தான் உட்கார்ந்திருப்பதையும் எதிரில் பூசாரி யிருப்பதையும் பார்த்தான்.

"அடாடா! என்ன காரியம் செய்து விட்டாய்! என் வாழ்நாள் பூராவும் சிரமப்பட்டுச் செய்த காரியத்தைக் கெடுத்து விட்டாயே, அடி முட்டாளே!" என்று இரைந்தார் பூசாரி.

அதைத் தொடர்ந்து, "நீ சந்தோஷத்தை வென்றாய், துயரத்தை வென்றாய். பயத்தை, வெறுப்பை, ஆசையை இத்தனையையும் வென்றாய். ஆனால் அன்பை மட்டும் உன்னால் வெல்ல முடியவில்லை. நீ மட்டும் அந்த சமயத்தில் கத்தாமல் இருந்திருந்தால் நான் அமிர்தம் செய்தே இருப்பேன். நீயும் மரணத்தை வென்ற அமரனாகி யிருப்பாய். ஆஹா! தெய்வாம்சம் பெற்ற ஒரு மனிதனைப் பார்ப்பதுதான் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது! அதனால் என்ன! நான் மீண்டும் அமிர்தம் தயார் செய்யப் பார்க்கிறேன். நீ இந்த உலகத்தில் உயிரோடு இருக்கும் போதே செய்து முடித்து விடப் பார்க்கிறேன். சரி, இப்போது போய் வா!" என்று சொல்லிக் கிழவர், டீ வெளியே போக வேண்டிய வழியைக் கைகளை நீட்டிக் காண்பித்தார்.

வெளியே போன டீ வெகு பிரயாசைப்பட்டுத் திரும்பிப் பார்த்தான். கிழவர் ரஸவாதம் செய்து அமிர்தம் காய்ச்சிக் கொண்டிருந்த இரும்புச் சட்டி இரண்டு துண்டாகக் கீழே உடைந்து கிடந்தது!


ஹிமாலயா
புக்கே
அளிக்கும் மிகுந்த
புதுமைப் பொலிவை
– நீங்கள்
நாள் முழுதும்
உணரலாம்!
Himalaya Bouquet
Himalaya Bouquet
ஹிமாலயா
புக்கே
டாய்லெட், டால்கம்
பவுடர்கள்

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Gurusamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram